# பொருளியல் நோக்கு

பெப்ரவரி 1994



## உலக பொருளாதார மந்தம்

மக்கள் வங்கி வெளியீடு

# பொருளியல் நோக்கு – ஒரு மீள் அர்ப்பணம்

மக்கள் வங்கி வெளியீடான "பொருளியல் நோக்கு" சஞ்சிகை, கடந்த இரண்டு தசாப்த காலமாக, நாட்டின் முன்னணி அபிவிருத்தி மாத இதழ் என்ற வகையில் நன்கு ஸ்தாபிதமாகியுள்ளது. இம்மும்மொழி வெளியீடு -அநேகமாக, எமது நாட்டைப் பொறுத்தவரையில், இதுவே இந்த வகையைச் சேர்ந்த முதல் பிரசுரமாக இருக்கவேண்டும்- அபிவிருத்தி மற்றும் சர்வதேச விவகாரங்கள் போன்ற துறைகளில் (குறிப்பாக, எமது தமிழ், சிங்கள வாசகர்கள்) வாசிப்பு விடயங்கள் தொடர்பாக அனுபவித்து வந்த ஒரு முக்கிய குறைபாட்டினை நிறைவு செய்து வைத்தது. இந்த சமூக-பொருளாதார மாத இதழ், அதன் சிந்தனையைத் தூண்டும் விசேஷ அறிக்கைகள், சிறப்புக் கட்டுரைகள், பத்திகள், வரைபடங்கள் மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வுகள் என்பவற்றுக்கூடாக, கொந்தளிப்புக்கள் சூழ்ந்த 1970 கள் மற்றும் 1980கள் ஆகிய இரு தசாப்தங்களினதும் அடிச்சரடுகளை பதிவு செய்து வந்துள்ளது. அறிவுத்துறை வட்டாரங்களில் மிக முக்கியமான ஒரு உசாத்துணை கைநூலாகவும் அது பிரபல்யம் பெற்றுள்ளது.

"பொருளியல் நோக்கு" தேசிய மற்றும் சர்வதேச கண்ணோட்டத்தில், பரந்த தளத்திலான அபிவிருத்திப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து வருகின்றது. அது முன்வைத்த பல விடயங்கள், அபிவிருத்தி குறித்த தேசிய விவாதத்தின் ஒருங்கிணைந்த ஒரு பாகமாக இருந்து வந்துள்ளன. அதன் சிறப்புக் கட்டுரைப் பகுதி இந்நாட்டின் கல்விமான்கள் மற்றும்ஆய்வாளர்கள் என்போருக்கான ஒரு முக்கிய வெளியீட்டுக் களமாக இருந்து வருகின்றது.

மக்கள் வங்கி ஒரு சமூக உணர்வுடனும், அறிவின் பல்வேறு துறைகளிலும், ஏற்பட்டு வரும் அதிநவீன முன்னேற்றங்களை எமது இளைஞர்களிடையே எடுத்துச்சென்று, அவர்களுடைய அறிவினையும் விழிப்புணர்வினையும் மேம்படுத்தும் நோக்குடனும் கடந்த 19 வருட காலமாக இந்த வெளியீட்டுப் பணிக்கு அதன் நிதி வளங்களை பெருமனதுடன் வழங்கி வந்துள்ளது. இவ்வங்கி, சமகால இலங்கையில் வாழும் இலட்சோபலட்சம் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மனமுவந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில், இந்த மகத்தான பணிக்கு அதன் ஆதரவையும், ஊக்குவிப்பினையும் தொடர்ந்தும் வழங்கி வரும் என இங்கு உறுதிமொழி அளிக்கின்றது.

அடுத்தடுத்து வெளிவரவிருக்கும் எமது பல இதழ்கள் (மனித மூலவளங்களின் அபிவிருத்தி, இலங்கையில் தனியார் டியூசன் முறை, இலங்கையில் வெளிநாட்டு முதலீடு, சுற்றுலாத்துறை, இலங்கைப் பொருளாதாரத்தின் சம்பத்திய போக்குகள் போன்ற) முக்கியமான பல தலைப்புக்களை விசேஷ அறிக்கைகளாக வழங்கவுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது ஏப்ரல் 1994 இதழ் வெளியிடப்படுவதுடன், "பொருளியல் நோக்கு" அதன் இருபதாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இவ்வேளையில், நமது பங்களிப்புக்கள் மூலம் எமது சஞ்சிகையின் தரத்தினை மேம்படுத்திய தேசிய மற்றும் சர்வதேசிய கல்விமான்களுக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன், எமது வாசகர்களை நன்றியுணர்வுடன் நினைவு கூர்ந்து, அவர்களுடைய தொடர்ச்சியான ஆதரவினையும், ஊக்குவிப்பினையும் வேண்டி நிற்கிறோம். மேலும், இந்த வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்திக்கொள்வதற்காக அவர்களுடைய குறிப்புக்களையும் யோசனைகளையும் வரவேற்கிறோம்.

"எகனமிக் ரிவியூ"ஆங்கிலம்), "ஆர்திக விமசும" சிங்களம்) மற்றும் "பொருளியல் நோக்கு" இதழ்களில் பணிபுரியும் நாம், எமது குறிக்கோள்களுக்காக எம்மை மீண்டும் ஒருமுறை அர்ப்பணித்துக் கொள்ளும் இவ்வேளையில், சுமார் நான்கு வருடகாலம் (1990–1993) இந்த இதழ்களின் பிரதம ஆசிரியராக பணிபுரிந்து, சமீபத்தில் மக்கள் வங்கியிலிருந்து விலகிச் சென்ற செல்வி திசராணி குணசேகர அவர்களை இங்கு நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

-கலாநிதி எல். சிறிவர்தன
ஆராய்ச்சிப் பணிப்பாளர், மக்கள் வங்கி
ஆசிரியர், "எகனமிக் ரிவியூ"

# பொருளியல் நோக்கு

மலர் 19 இதழ் 11 பெப்ரவரி 1994


## உள்ளே


| | | |
|---|---|---|
| | 2 | பொருளாதார மந்தம் – முக்கிய புள்ளி விவரங்கள் |
| எம்.எச். எஸ். தயாரத்ன | 28 | தென் பிராந்திய அபிவிருத்தி: ஒரு பிராந்திய அபிவிருத்தி உத்தி |
| ஏ. ரீ. பீ. எல். அபேக்கோன் | 31 | இலங்கையில் குடித்தொகை தொடர்பான கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் |


## விசேஷ அறிக்கை
## உலக பொருளாதார மந்தம்


| | | |
|---|---|---|
| ஜே. பீ. கலேகம | 3 | உலக பொருளாதார மந்தம் |
| | 9 | பொருளாதார மந்தமும் வளர்முக நாடுகளும் |
| | 14 | வளைந்து கொடுக்கும் ஆசிய பொருளாதாரம் |
| | | சிறப்புக் கட்டுரைகள் |
| ஆர். எம். கே. ரத்நாயக்க | 19 | வறுமையும் நகர வறியோரின் குணாம்சங்களும் |
| டீ. ரீ. கிங்ஸ்லி பேர்னார்ட் | 25 | ஐரோப்பிய இணையத்துக்கு ஏற்ப சீராக்கிக் கொள்ளல் |


அடுத்த இதழில்:

* மனிதவள அபிவிருத்தி ; ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஓர் அணுகுமுறை
* புதிய சுற்றுச்சூழல் ஒழுங்கு
* நீர்ப்பாசன முகாமையின் பயன்கள்


கொழும்பு தமிழ்ச் சங்கம்


அட்டைப்படம் வடிவமைப்பு ; சாந்த கே. ஹேரத்


வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.


பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

பொருளாதார மந்தம்

# முக்கிய புள்ளிவிவரங்கள்


## பொருளாதாரம் – 1993

(முன்னைய ஆண்டு தொடர்பாக சதவீதமாற்றம்)





### மெய் மொ.உ.உ. வளர்ச்சி

(ஆண்டுக்கான-சராசரி வளர்ச்சி)





### வேலையின்மை

(ஊழியர் படையின் %)





### பண வீக்கம்

(வருடத்துக்கான சராசரி வளர்ச்சி)




### அரசாங்க பற்றாக்குறைகள்

(மொ.உ.உ. யின் வீதமாக)




* சுவிஸ் பாங்க் கோர்ப்பரேசன் மதிப்பீடுகள்

ஆதாரம் : "தி எகனமிஸ்ட்", ஜன. 15, 1994, சுவிஸ் பாங்க் புரொஸ்பெக்ட்ஸ் 6/1993

# உலக பொருளாதார மந்தம்

கலாநிதி ஜே. பீ. கலேகம

கைத்தொழில்மயமாகியுள்ள பிரதான நாடுகள் அனைத்தும் ஒன்றில் மிகக் கடுமையான பொருளாதார மந்தத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளன; அல்லது மந்தத்திலிருந்து படிப்படியாக மீட்சி பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளின் (G-7) மொத்த உள்நாட்டு உற்பத்தி 982–89 காலப்பிரிவில் 3.4 சதவிகிதத்திலிருந்து 1989–92 காலப்பிரிவில் 1.5 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் மொ.உ.உ 3.5 சதவிகிதத்திலிருந்து 0.5 சதவிகிதமாகவும் ஜப்பானின் மொ.உ.உ 4.2 சத விகிதத்திலிருந்து 3.7 சதவிகிதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளன. கைத்தொழில் மயமாகியுள்ள நாடுகளில் இடம் பெற்றுவரும் பொருளாதார மந்தத்தின் விளைவாக, 1982–89 காலப்பிரிவில் 3.5 சதவிகிதமாக இருந்த உலக பொருளாதார வளர்ச்சி, 1989–92 காலப்பிரிவில் 1.4 சதவிகிதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அதேவளையில், 1965–90 காலப்பிரிவில் ஆண்டொன்றுக்கு 4.5 சதவிகிதமாக வளர்சியடைந்து வந்த உலக வர்த்தகம் 1990–92 காலப்பிரிவில் ஆண்டொன்றுக்க 3.3 சதவிகித வளர்ச்சியை மட்டுமே காட்டியது.

முன்னைய பொருளாதார எதிர்வு கூறல்கள் 1993,1994 ஆகிய வருடங்களில் பொதுவாக ஒரு உயர்ந்த வளர்ச்சி ஏற்படும் என தெரிவித்திருந்தன. ஆனால், இந்த எதிர்வுகூறல்கள் அவ்வப்பொழுது இறங்கு முகமான விதத்தில் திருத்தியமைக்கப்பட்டதுடன், வளர்ச்சி வாய்ப்புக்கள் பெருமளவுக்கு நிச்சயமற்றதன்மையைக் கொண்டிருந்தன. உதாரணமாக, கைத்தொழில் மயமாகிய நாடுகளில் 1992ல் இடம்பெற்ற 1.5 சதவிகித பொருளாதார வளர்ச்சிக்குப் பதிலாக 1993ல் 2 சதவுவிகித வளர்ச்சி ஏற்படும் என ஐ. நா. வின் எதிர்வுகூறல்கள் மதிப்பீடு செய்திருந்தன. ஆனால், பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் ஒரு மதிப்பீடு 1.2 சதவிகிதம் வளர்ச்சி மட்டுமே ஏற்படும் எனத் தெரிவிக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சி 1992ன் 2.1 சதவிகிதத்திலிருந்து 1993ல் 2.7 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும், ஐக்கிய இராச்சியத்தில் இது 0.5 சதவிகிதத்திலிருந்து 1.7 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஏனைய முன்னணி கைத்தொழில் நாடுகள் தொடர்பான வளர்ச்சி வாய்ப்புக்கள் சாதகமற்றவையாகவே இருந்து வருகின்றன. உதாரணமாக, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் எதிர்மறையான வளர்ச்சியை அனுபவித்து வருகின்றன. 1992க்கும் 1993க்கும் இடையில் பிரான்ஸில் வளர்ச்சி 1.7 சதவிகிதத்திலிருந்து –1.1 சதவிகிதத்துக்கும், ஜேர்மனியில் 0.8 சதவிகிதத்திலிருந்து –1.8 சதவிகிதத்துக்கும், இத்தாலியில் 0.9 சதவிகிதத்திலிருந்து –0.5 சதவிகிதத்துக்கும் வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஜப்பானைப் பொறுத்தவரையிலும் கூட, வளர்ச்சி விகிதம் 1.5 சதவிகிதத்த 'லிருந்து 1.2 விகிதமாக வீழ்ச்சியடையும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும், அங்கு 0.1 சதவிகித எதிர்மறை வளர்ச்சி ஏற்பட்டிருப்பதை சமீபத்திய தரவுகள் காட்டுகின்றன. யென் நாணயத்தின் பெறுமதியேற்றம் காரணமாக ஜப்பானின் மீட்சிக்கு இடையூறு ஏற்பட்டு வருகின்றது. இப்பெறுமதி ஏற்றம் ஜப்பானிய ஏற்றுமதிகளின் போட்டியிடும் திறனை குறைத்து வருகின்றது.

கைத்தொழில் மயமாகியுள்ள நாடுகளின் பொருளாதார மந்தம் முன்னைய சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பா என்பவற்றின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக மேலும் தீவிரம் அடைந்துள்ளது. இந்நாடுகள் இப்பொழுது உற்பத்தி வீழ்ச்சிகளை அனுபவித்து வருகின்றன. ஒரு குழு என்ற வகையில் அவற்றின் பொருளாதார வளர்ச்சி 1991ல்–16.0 சதவிகிதமாகவும் 1992ல்–18.4 விகிதமாகவும் இருந்து வந்தது. முன்னைய சோவியத் யூனியனின் வளர்ச்சி விகிதம் 1991ல்–17 சதவிகிதமாகவும், 1992ல் – 23 சதவிகிதமாகவும் இருந்து வந்தது. இந்நாடுகள் அனைத்தும் 1993ம் ஆண்டிலும் கூட எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதங்களை அனுபவித்து வரும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி மற்றும் போலந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்டு வரும் பொருளாதார உறுதிப்படுத்தல் வழிமுறைகள் காரணமாக 1993ன் வீழ்ச்சி விகிதம் முன்னைய வருடங்களிலும் பார்க்க சற்றுக் குறைவாக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. சோவியத் யூனியனில் மீட்சிக்கான எந்த அடையாளமும் தென்படவில்லை. அந்நாட்டில் மிகக் கடுமையான பொருளாதார சீர்குலைவும் பேரளவிலான வறுமையும் இப்பொழுது தலைவிரித்தாடி வருகின்றன.

### வீழ்ச்சியடைந்துவரும் வர்த்தகம்

பிரதானமான வர்த்தக முயற்சிகள் அனைத்தும் கேள்விச் சுருக்கத்தினை எதிர்நோக்கி வருவதுடன், ஊழியர்களையும் பணிமுடக்கம் செய்து

## பொருளாதார மந்தம்

கொண்டிருக்கின்றன. உதாரணமாக, உலகின் மிகப் பெரிய கைத்தொழில் நிறுவனமான ஜெனரல் மோட்டர்ஸ் கம்பனி 1990 தொடக்கம் 1992 வரையிலான மூன்றாண்டுகளிலும் தொடர்ச்சியாக நட்டமடைந்து வந்துள்ளது. இந்த நட்டம் 1992 முடிவு அளவில் சுமார் 700 கோடி அமெரிக்க டொலர்களையும் மிஞ்சியதாக காணப்பட்டது. மேலும், அது 74,000 தொழில்களை ஒழித்துவிடப் போவதாகவும் அறிவித்துள்ளது. ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் இந்த சாதகமற்ற நிலையின் விளைவாக டயர்களை வடிவமைப்பவர்கள் தொடங்கி விளம்பர நிறுவனங்கள் மற்றும் பங்குத் தொகுதி விற்பன்னர்கள் வரையிலான ஒவ்வொரு ஆறு அமெரிக்க ஊழியர்களிலும் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதேபோல நட்டத்தில் இயங்கிவரும் IBM நிறுவனம் அதன் உலகளாவிய ஊழியர் படையை 440,000 த்திலிருந்து 3 இலட்சமாகக் குறைத்துக் கொண்டுள்ளது. இவ்வாண்டில் மேலும் 25,000 தொழில்களை ஒழித்துவிடுவதற்கு அது திட்டமிட்டுள்ளது. அதேபோல புரக்டர் அன்ட் கம்பல் என்ற கம்பனி அடுத்த மூன்று வருட காலத்தின் போது 13,000 தொழில் வாய்ப்புக்களை ஒழித்து விடுவதற்கும் உலகளாவிய அடிப்படையில் இயங்கி வரும் அதன் 147 தொழில் கூடங்களில் 30 தொழிற் கூடங்களை மூடி விடுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பாவில் கார்களின் விற்பனை 1993ல், முன்னைய வருடத்திலும் பார்க்க 20 இலட்சத்தினால் (அல்லது 15 சதவிகிதத்தினால்) வீழ்ச்சியடையும் என மதிப்பிடப் பட்டுள்ளது. ஐரோப்பாவிலான தனது விற்பனை 1992 உடன் ஒப்பிடும் பொழுது, 1993ல் 14.3 சதவிகிதம் குறைவாக இருக்கும் என ஜெனரல் மோட்டர்ஸ் மதிப்பிட்டுள்ளது. போர்ட் நிறுவனம் தமது ஐரோப்பிய விற்பனைகள் 18.8 சதவிகிதத்தினால் வீழ்ச்சியடையும் என்று மதிப்பிடப் பட்டுள்ளதுடன், வொக்ஸ்வகன் நிறுவனம் 20 சதவிகித விற்பனை வீழ்ச்சியை எதிர்பார்க்கின்றது. பிரான்ஸின் கார் தயாரிப்பு 1993ன் முதலாவது நான்கு மாதங்களின் போது முன்னைய வருடத்தின் இதே காலப்பிரிவுடன் ஒப்பிடும் பொழுது 13.6 சதவிகிதம் குறைவாக இருந்தது. இத்தாலிய பியட் நிறுவனத்தின் இலாபம் 1991ல் 28 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1992ல் 1.1 கோடி அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சிடைந்திருந்தது. இடோகு கம்பனி தவிர்ந்த ஜப்பானின் அனைத்துப் பாரிய வியாபாரக் கம்பனிகளும் தமது சம்பாத்தியங்களில் கணிசமான அளவிலான வீழ்ச்சியை அனுபவித்து வந்துள்ளன.

### பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம்

இப்பொழுது, கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளில் சுமார் 3.2 கோடி பேர் வேலையற்றவர்களாக இருந்து வருகின்றனர்; இவர்களில் சுமார் 2 கோடி பேர் மேற்கு ஐரோப்பாவில் இருந்து வருகின்றார்கள். ஏற்கனவே 10க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் தமது ஊழியர் படையில் 10 சதவிகிதத்துக்கு மேற்பட்ட வேலையின்மை

## மேற்கு ஜேர்மனியில் மந்தம்

"மேற்கு ஜேர்மனி பொருளாதார மந்தமொன்றுக்குள் சிக்கியுள்ளதா" என்ற கேள்வி இப்பொழுது சிலகாலமாக சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வந்துள்ளது. பகுப்பாய்வு ரீதியான நிலைப்பாட்டினை பொறுத்தவரையில், இது வரைவிலக்கணம் தொடர்பான ஒரு பிரச்சினையாகும்; அதாவது, பொது விவாதங்களில் "பொருளாதார மந்தம்" என்ற பதத்தினைப் பிரயோகிக்கும்பொழுது, அது, பொருளாதார கொள்கை தொடர்பான சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பதுடன், அனைத்துக்கும் மேலாக அரசாங்கத்தின் செலவினத்தின் மீது மிகவும் கடுமையான நிர்ப்பந்தங்களை எடுத்துவருவதாக உள்ளது. பொருளாதாரம் தொடர்பான பதங்களை மிகவும் கவனமான முறையில் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை இது எடுத்து வருகின்றது.

பொருளாதார மந்தம் குறித்த ஜனரஞ்சகமான வரைவிலக்கணத்தின்படி, மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு தடவை அடுத்தடுத்து ஏற்படும் ஒரு வீழ்ச்சி பொருளாதார மந்தமாக கருதப்படுகின்றது. ஒரு பொருளாதாரப் பின்னடைவானது, அதன் விரிவு, ஆழம் மற்றும் அகலம் என்பவற்றின் அடிப்படையில், சாதாரணமாக அது இருக்க வேண்டிய அளவுகளையும் மிஞ்சிச் செல்லும் ஒரு கட்டம் இடம் பெறும்பொழுது மட்டுமே நாங்கள் ஒரு பொருளாதார மந்தம் குறித்துப் பேச முடியும். பேரண்டப் பொருளியல் கொள்திறன் பயன்பாடு இதற்கான மிகச் சிறந்த குறிகாட்டியாகும். எனினும், இதனை அளவிடுவது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாக உள்ளது. கைத்தொழில் துறையின் ஆற்றல் பயன்பாட்டு விகிதத்தின் அடிப்படையிலும் இதனை மதிப்பிட முடியும். ஆனால், கைத்தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் மூன்றில் ஒரு பங்குக்கு மட்டுமே பொறுப்பாக இருக்க முடியும். எனினும், இத்துறையானது வியாபார சுற்று வட்டத்தின்போது மிகக் கடுமையான தளம்பல்களை பதிவு செய்கின்றது.

1991ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கு ஜேர்மனியின் கைத்தொழில் துறையின் திறன் பயன்பாடு அசாதாரணமான அளவில் உயர் மட்டத்தில் காணப்பட்டது. எனினும், 1991ன் பின்னர் இந்தத் திறன் பயன்பாடு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டு வந்துள்ளது. 1980களின் முடிவின் போது ஏற்பட்ட உறுதியான விஸ்தரிப்பு, அதனையடுத்து 1990ன் நடுப்பகுதியில் மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் தனியொரு நாடாக ஐக்கியப்பட்டதனையடுத்து ஏற்பட்ட செழிப்பு நிலை என்பவற்றின் பின்னணியில் கணிசமான அளவிலான ஒரு முன்னேற்றம் தவிர்க்க முடியாததாகவும் விரும்பத்தக்கதாகவும் இருந்தது.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியின் போது பொருளாதாரப் பலவீனத்தை நோக்கிய போக்கு எதிர்பாராத விதத்தில் மிகவும் உறுதியாக வளர்ச்சி கண்டு, பேரண்டப் பொருளியல் நடவடிக்கைகள் சுருக்கமடையும் ஒரு போக்கினைக் காட்டிய பொழுது, பொருளாதார மந்தமொன்றுக்கான அளவுகோலினை அந்நாடு எட்டியிருந்தது. எனினும், இதுவரையில் பொருளாதாரப் பதங்கள் கவனமாகவும் பொறுப்புணர்வுடனும் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருப்பதன் காரணமாக, இந்நிலைமையை ஒரு பொருளாதார மந்தமாக வர்ணிப்பதிலிருந்தும் நாம் தவிர்த்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று நாம் மிக மென்மையான ஒரு பொருளாதார மந்தத்தை எதிர்நோக்கி வருகின்றோம்.

நன்றி: "கொமர்ஸ் பேங்க் ரிசேர்ச்" இதழ்

விகிதங்களைக் கொண்டுள்ளன. இத்தாலி 12.4 சதவிகிதம், பிரான்ஸ் 11.5 சதவிகிதம், ஐக்கிய இராச்சியம் 10.4 சதவிகிதம என இந்த விகிதங்கள் நிலவிவருகின்றன. ஜேர்மனியின் வேலையில்லாத்திண்டாட்டம் 1992ன் 6.6 சதவிகிதத்திலிருந்து 1993ல் 8.2 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

1993ன் முடிவில் கைத்தொழில் மயமாகியுள்ள உலகில் சுமார் 3.6 கோடி மக்கள் வேலையற்றவர்களாக இருக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது 1992ன் முடிவில் 3 கோடியே 25 இலட்சமாக இருந்தது. ஐரோப்பாவில் 1994ல் உயர் அளவிலான பொருளாதார வளர்ச்சி திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வேலையில்லாத்திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1992ல் 7.4 சதவிகிதமாக அதிகரித்துக் காணப்பட்ட ஐக்கிய அமெரிக்காவின் வேலையில்லாத்திண்டாட்டம் 1993-94ல் சிறிதளவு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், நிலைமை இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. ஜப்பான் இப்பொழுது ஆகக் குறறைந்த வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தை (2.4 வீதம்) கொண்டுள்ளது. ஆனால், இது 1990/91 காலப் பிரிவின் 2.1 சதவிகிதத்திலும் பார்க்க உயர்வானதாகும். மேலும், 1994ல் இந்த விகிதம் 2.9 ஆக அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1994ல் மீட்சி

1993ல் தோன்றும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த மீட்சி, இப்பொழுது 1994ல் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான (OECD) அமைப்பு மற்றும் சுவிஸ் பாங்க்கிங் கோபரேஷன் என்பவற்றின் எதிர்வுகூறல்களின்படி, கைத்தொழில்மயமாகியுள்ள பிரதான நாடுகள் அனைத்தையும் பொறுத்தவரையில், 1994ன் பொருளாதார வளர்ச்சி 1993ன் அளவிலும் பார்க்க உயர்வானதாக இருக்கும். எனவே, முன்னணிக் கைத்தொழில் நாடுகள், உலகினை அதன் பொருளாதார மந்தத்திலிருந்து மீட்டெடுக்கக்கூடியளவுக்கு போதுமான வீதத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரவில்லை. இந்த மீட்சி மிதமானதாக இருந்து வருவதுடன், பொதுவில் 1990களில் பொருளாதார வளர்ச்சி 1980களின் உயர் விகிதங்களை எட்டமாட்டாதென எதிர்பார்க்கப்படுகின்றது. உலக வங்கி மதிப்பீடுகளின்படி, G-7 நாடுகள் 1992-2002 காலப்பிரிவின் போது 2.0- 2.7 சதவிகிதம் வரையிலான சராசரி வருடாந்த வளர்ச்சியை அடையும். அது 1982-89ல் 3.4 சதவிகிதமாக இருந்து வந்தது. இந்த சாதகமற்ற போக்கினை பல காரணிகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

(1) 1980களின் பொருளாதார விஸ்தரிப்பின் போது நிறுவனங்களும் குடும்பங்களும் பெற்றுக் கொண்ட பாரிய கடன்களின் மீளச் செலுத்தும் சுமை, மிதமிஞ்சிய அளவிலான தனியார் கடன் படுதல்கள் மற்றும் சொத்து விலைகளில் ஏற்பட்ட மிகத் தீவிரமான அதிகரிப்பு போன்ற சில காரணங்கள் அடுத்துவரும் சில வருடங்களில் கூட்டுமொத்த கேள்வியின் வளர்ச்சியை தடுத்து நிறுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) இரண்டாவது உலக மகா யுத்த காலத்தின் போது நிறைவு செய்யப்படாத தேவைகளினால், யுத்தத்திற்குப் பிற்பட்ட காலப்பிரிவில் தோன்றிய நிர்மாண செழிப்புக் காலம் இப்பொழுது முடிவுற்றுள்ளது.

(3) ஐரோப்பாவில் பிறப்பு விகிதங்கள் வீழ்ச்சியடைந்து வருவதனாலும், குடித்தொகையில் மிக மெதுவான வளர்ச்சி இடம் பெற்றுவருவதனாலும், ஒரு புறத்தில், குறைந்த அளவிலான மக்களே (உற்பத்தியாளர்) ஊழியர் படையில் சேர்ந்து கொள்கின்றனர். மறுபுறத்தில, வீடுகள், வாகனங்கள் மற்றும் நீடித்து உழைக்கக் கூடிய நுகர் பொருட்கள் என்பவற்றை கொள்வனவு செய்யக் கூடிய குடும்பங்களின் (நுகர்வோரின்) எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. (உதாரணமாக, 1991-2001 காலப்பிரிவின்போது ஜேர்மனியின் குடித்தொகையின் வளர்ச்சி பூச்சியமாக இருந்து வரும்).

(4) 1973க்கு முன்னர் ஆண்டொன்றுக்கு 4.0 சதவிகிதமாக வளர்ச்சியடைந்து வந்த ஊழியர் உற்பத்தித் திறன் இப்பொழுது ஆண்டொன்றுக்கு 1.5 சதவீதமாக மிதமான அளவில் அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யுத்தத்துக்குப் பிற்பட்ட காலத்தில் கல்வி மட்டங்கள் துரிதமாக அதிகரித்ததனையடுத்து ஊழியர்களின் உற்பத்தித் திறன் பெருகியது. எனினும், 1960கள் தொடக்கம் உயர்கல்வி வசதிகள் பரவலாக கிடைத்து வந்தமையினால், ஊழியர் உற்பத்தித் திறனில் கணிசமான அளவிலான ஒரு அதிகரிப்பினை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

### (5) சேமிப்புக்களின் வீழ்ச்சி

உலக சேமிப்புக்கள் 1971- 80 காலப்பிரிவில் மொத்த உற்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 24.8 சதவிகிதமாக இருந்து, 1981-90 காலப் பிரிவில் 22.4 சதவிகிதமாகவும், 1991ல் 21.5 சதவிகிதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தன. இதே காலப்பிரிவில், "G-7" நாடுகளின் சேமிப்புக்கள் 21.7 சதவிகிதத்திலிருந்து 21.1 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்திருந்தன. ஐக்கிய அமெரிக்காவின் சேமிப்புக்கள் 17.5 சதவிகிதத்திலிருந்து 14.8 சதவிகிதமாக வீழ்ச்சி கண்டிருந்தன. பெரும்பாலான நாடுகளில் இடம்பெற்று வந்த பாரிய அளவிலான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகளின் விளைவாகவே இவ்விதமாக சேமிப்புக்களின் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. பல அரசாங்கங்கள் சமூக சேமநலச் செலவுகளை

அட்டவணை 1

மெய் மொஉஉ வளர்ச்சி விகிதங்கள் %

| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| ஐக். அமெ. | 0.8 | -1.2 | 2.1 | 2.7 | 3.1 |
| ஜப்பான் | 5.2 | 4.4 | 1.5 | -0.1 | 1.0 |
| மே. ஜேர்மனி | 4.9 | 3.6 | 0.8 | -1.8 | 0.2 |
| பிரான்ஸ் | 2.5 | 0.7 | 1.4 | -1.1 | 0.6 |
| ஐக். இராச். | 1.8 | -2.3 | -0.5 | 1.7 | 2.4 |
| இத்தாலி | 2.2 | 1.4 | 0.9 | -0.5 | 1.3 |

# ஜப்பானிய பொருளாதார மந்தம்

ஜப்பானில் சில காலமாக நீடித்து வந்துள்ள பொருளாதார மந்தம், அந்நாட்டு மக்களுக்கு முதல் தடவையாக தமது தொழில்களின் பாதுகாப்பற்ற உணர்வினை அளித்தது. இந்தப் பொருளாதார மந்தம் அநேகமாக இந்தக் கோடை காலத்துடன் முடிவுக்கு வரக்கூடும். எனினும், உண்மையான ஒரு மீட்சி என்று கூறக்கூடிய ஒரு நிலைமை தோன்றுவதற்கு இன்னும் ஒரு வருடகாலம் செல்லும். இந்தப் பொருளாதார மந்தத்துக்கு ஒரு முடிவு வந்தாலும் கூட அதில் பூரிப்படைவதற்கு எதுவும் இருக்கமாட்டாது. யுத்தத்துக்குப் பிற்பட்ட ஜப்பான் கண்ட இந்த மிகப்பெரிய பொருளாதாரப் பின்னடைவின்போது ஜப்பான் இதுவரை காலமும் ஊதிப் பெருக்கி, உருவாக்கிக் கொண்டிருந்த ஒரு பிம்பம் வெடித்துச் சிதறியது.

அநேகமாக 1995ம் ஆண்டுவரையில் உண்மையான ஒரு பொருளாதார மீட்சி ஏற்பட முடியாது. அத்தகைய ஒரு மீட்சி ஏற்பட்டாலும் கூட, அது பின்னடைவுக்குப் பிற்பட்ட ஏனைய வளர்ச்சிக் காலகட்டங்களுக்கு இணையான ஒரு கால கட்டமாக இருக்க முடியாது. மிகவும் பொருத்தமான கொள்கைகளின் ஒரு கலவை பின்பற்றப்படாவிட்டால் சுமார் 3 சதவீத வளர்ச்சியைக் கொண்ட முழு அளவிலான ஒரு மீட்சி ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பு 1996 வரையில் தோன்ற முடியாது.

முன்னைய பொருளாதாரப் பின்னடைவுகள் ஒன்றில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்புக்களின் விளைவாகவோ அல்லது டொலருக்கு எதிராக யென் நாணயத்தின் பெறுமதி பேரளவில் அதிகரித்துச் சென்றதன் விளைவாகவோ தோன்றியவையாக இருந்தன. ஆனால், இம்முறை ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு அவ்வாறானதொன்றாக இருக்கவில்லை. இந்தப் பொருளாதாரப் பின்னடைவினை ஜப்பான் சமாளிப்பதென்பது ஓர் எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை.

ஜப்பானின் யென் நாணயம் மிகவும் உறுதியாக இருந்து வந்துள்ளமையினால் அந்நாட்டு ஏற்றுமதிகளின் போட்டித் திறன் குன்றியுள்ளது. அத்துடன் கார்கள் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் உற்பத்திப் பொருட்கள் போன்ற ஜப்பானின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தைகள் உள்நாட்டிலும் மேலைய நாடுகளிலும் முடக்கம் கண்டுள்ளன. மேலும், அமெரிக்காவில் மிக முக்கியமான மூன்று மோட்டார் கார் உற்பத்திக் கம்பனிகள் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளதுடன், தென்கிழக்காசியாவின் ஏற்றுமதிகளும் துரித வளர்ச்சியை காட்டி வருகின்றன. இந்த வெளிநாட்டு போட்டியாளர்களில் பெரும்பாலானவர்கள் ஜப்பானின் உற்பத்தித் துறை இரகசியங்கள் பலவற்றை இப்பொழுது அறிந்து கொண்டுள்ளனர்.

மேலும், சில காலத்துக்கு முன்னர் ஜப்பானில் ஏற்பட்ட திடீர் செழிப்புப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியின் பின் விளைவுகளையும் அந்நாடு இப்பொழுது சமாளிக்க வேண்டியுள்ளது. இந்தத் திடீர் செழிப்புப் பொருளாதாரம் ஜப்பானின் பங்குச் சந்தையிலும் மெய் ஆதனப் பெறுமதிகளிலும் அழிவுகரமான தாக்கங்களை எடுத்து வந்ததுடன், இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும் பணச்சுருக்கப் போக்கொன்றினையும் தோற்றுவித்திருந்தது. ஜப்பானின் வங்கித் துறை 35,750 கோடி டொலர் ஐயக்கடன்களை வைத்துத் திணறிக் கொண்டிருக்கின்றது. மீண்டும் ஒரு முறை சுறுசுறுப்பான கடனளிப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், இக்கடன்களை பதிவழிப்புச்செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தத் திடீர் செழிப்பு நிலையின் அழிவுகரமான தாக்கங்களை இல்லாமல் செய்யும் நிகழ்வுப்போக்கு அநேகமாக இன்னும் ஓரிரு வருடங்களுக்கு நீடிக்க முடியும். எனினும், அது எடுத்து வந்துள்ள சீர்குலைவுகளை முற்றிலும் ஒழித்து விடுவதற்கு இன்னும் பத்தாண்டுகளாவது பிடிக்கும்.

மேலும், ஜப்பானியப் பொருளாதாரம் இப்பொழுது ஒரு வகையில் முதிர்ச்சி கண்டுள்ளது. இது 1950களிலும் 1960களிலும் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 10 சதவிகிதம் விஸ்தரிப்படைந்து கொண்டிருந்தது. அதன் பின்னர் 1970களிலும், 1980களிலும் இந்த விஸ்தரிப்பு வேகம் 4.4 விகிதமாக குறைவடைந்தது. 1990களைப் பொறுத்தவரையில், இப்பொழுது உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இருந்து வரும் ஜப்பானியப் பொருளாதாரம் வருடாந்தம் சராசரியாக 3 சதவிகிதத்திலோ அல்லது அதற்கும் குறைந்த விகிதத்திலோ வளர்ச்சியடைய முடியும்.

உண்மையிலேயே ஜப்பான் அதன் பொருளாதார ஆற்றலை முழுஅளவில் பயன்படுத்த வேண்டுமானால் பொருளாதார அமைப்பினை அது சீர்செய்து கொள்ள வேண்டியுள்ளது. ஜப்பானின் இந்தப் பொருளாதார முறைமை, கெடுபிடி யுத்தச் சூழ்நிலையில் வளர்ச்சி குறித்த ஒரு குணாம்சத்தைக் காட்டுவதாக இருந்து வந்துள்ளது. அந்நாட்டின் சந்தைப் பங்குகளும் இலாபங்களும் இடையறாது அதிகரித்துக் கொண்டு வந்தன. இதன் விளைவாக சில கம்பனிகள் தமது ஊழியர்களுக்கு ஆயுட்கால தொழில் உத்தரவாதத்தையும், ஆகக்கூடிய சம்பள விகிதங்களையும் வழங்குவதற்கு முன்வந்தன. இதன் காரணமாக உள்நாட்டு விலைகள் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கின. அதனையடுத்து கைத்தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் மிகவும் கடுமையான ஒழுங்குவிதிகளை செயல்படுத்தத் தொடங்கியது.

கெடுபிடி யுத்தத்தின் முடிவினையடுத்து வாஷிங்டனின் நிலைப்பாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. கெடுபிடியுத்தம் நிலவிய காலத்தில், ஏற்றுமதிகளுக்கூடாக ஜப்பானியப் பொருளாதாரம் விஸ்தரிப்பு அடைவதற்கு இடமளிக்கும் வாஷிங்டனின் கொள்கை வெளி அச்சுறுத்தலொன்றை தடுக்கும் நோக்கில் அமைந்திருந்தது. ஆனால், கெடுபிடியுத்தத்தின் முடிவுடன், இந்த அச்சுறுத்தலும் இல்லாமல் போய்விட்டது. ஜப்பான் அதன் பொருளாதாரத்தை ஏற்றுமதிகள் மூலம் விஸ்தரித்துக் கொண்டிருந்த அதேவேளையில், டோக்கியோ அதன் உள்நாட்டுச் சந்தையை மிகவும் உறுதியான ஒரு நிலையிலேயே வைத்திருந்தது.

இப்பொழுது பழைய உலக பொருளாதார ஒழுங்கில், துரித கதியில் வெடிப்புக்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அரிசிச் சந்தை ஓரளவுக்குத் திறந்து விடப்பட்டுள்ளமை, கட்டிட நிர்மாணத்துறை என்பவற்றில் இப்பொழுது மிகத் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜப்பான் எவ்வளவு அவசரமாக தன்னை மாற்றிக் கொள்ள முடியும் என்ற விடயம், பிரதானமாக "இரும்பு முக்கோணம்" என்றழைக்கப்படும் அமைப்பில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களிலேயே தங்கியுள்ளது. அரசியல்வாதிகள், நிர்வாகிகள் மற்றும் கைத்தொழில் வட்டாரத்தினர் ஆகிய தரப்பினருக்கிடையே நிலவி வரும் மோசடித் தன்மை வாய்ந்த ஊழல் நெடி வீசும் கூட்டிணைப்பே இந்த இரும்பு முக்கோணமாகும். இந்தக் கூட்டு, மாற்றத்துக்கு எதிரானதாக செயற்பட்டு வருகின்றது.

அண்மைய அரசியல் சீர்திருத்தங்கள், பொருளாதாரத்தில் ஒழுங்குவிதிகளைத் தளர்த்தி விடுவதற்கும், நுகர்வோருக்கு குறைந்த விலைகளில் பொருள்களை வழங்குவதற்கும் ஒரு முயற்சியை மேற்கொண்டன. எனினும், நிர்வாக வட்டாரத்தி லிருந்தும் சுய அக்கறைக் குழுக்களிலிருந்தும் வரும் எதிர்ப்பு, இரும்பு முக்கோணத்தினை செயல் இழக்கச் செய்வதென்பது மிகவும் கடுமையான ஒரு பணியாக இருந்து வருகின்றது என்பதனை காட்டுகின்றது.

கடந்த டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதி தளர்ப்பு தொடர்பான யோசனைகள் மேலோட்டமானவை என மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. அரிசிச் சந்தை ஓரளவுக்கு திறந்து விடப்பட்டது கூட எதிர்ப்பினை சம்பாதித்துக் கொண்டுள்ளது. ஆறு வருடங்களுக்குப் பின்னர் ஜப்பானின் சந்தையில் 8 சதவிகிதம் மட்டுமே திறந்துவிடப்பட்டிருக்கும். குறைந்த விலைகளும் கூட முழு அளவில் நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுக்கப்படமாட்டாது.

அதிகாரிகள் கடந்த காலத்தில் சந்தைகளில் தலையிட்டு வந்துள்ளதுடன், கைத்தொழில் துறைக்கும் வழிகாட்டுதலை வழங்கி வந்துள்ளனர். ஆனால், அவர்கள் இந்தப் பழக்கத்தை இப்பொழுதும் கூட விட்டுவிடும் ஒரு மனப்போக்கினைக் காட்ட வில்லை. இப்பொழுது அரசாங்கம் மேற்கொண்டு வரும் பொரு ளாதார ஒழுங்குவிதிகள் காரணமாக விலைகள் ஐக்கிய அமெரிக்கா வின் விலைகளிலும் பார்க்க சராசரியாக 40 சதவிகிதம் உயர்ந்து காணப்படுகின்றது.

இன்னமும் கூட தொடர்ச்சியாக இலாப இழப்புக்களைச் சந்தித்து வரும் பல கம்பனிகள், உலக பொருளாதாரத்தில் மிகவும் தாக்கமான முறையில் போட்டியிடக் கூடிய தமது ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு இப்பொழுது தம்மை மீளமைப்புச் செய்து வருகின்றன. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இடம் பெற்ற அளவுக்கு தொழிலாளர்களின் பணி நீக்கம் இடம்பெறா விட்டாலும் கூட, பெரும்பாலான ஜப்பானிய கம்பனிகள் குறைந்த அளவில் ஆட்சேர்ப்பு மற்றும் செலவுச் சுருக்கம் என்பவற்றுக்கூடாக தமது பருமனை குறைத்துக் கொண்டு வருகின்றன. மேலும், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், ஊக்குவிப்பூதியம் போன்றவற்றை வெட்டி விடுவதன் மூலமும் சம்பள அதிகரிப்புக்களை வழங்கா திருப்பதன் மூலமும் பல கம்பனிகள் தமது வேதனச் செலவுகளை குறைத்துக் கொண்டு வருகின்றன.

ஜப்பானைப் பொறுத்தவரையில், வேலையில்லாத் திண்டாட்டம் அவ்வளவு தூரம் பாரதூரமானதாக இருந்து வரவில்லை. எனினும், இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் அந்நாடு கண்டிராத மட்டங்களுக்கு இப்பொழுது அது அதிகரித்துக் கொண்டு வருகின்றது. அடுத்த இரண்டு வருடகாலத்தில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஜப்பானியர்கள் தமது தொழில்களை இழந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பொழுது 2.8 சதவீதமாக இருந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம் அடுத்த வருடத்தில் 4 சதவீதமாக அதிகரிக்கமுடியும்.

தமது தொழில்களை தக்க வைத்துக் கொண்டிருப்பவர்களைப் பொறுத்தவரையில் கூட செயல்திறனை அதிகரித்துக் கொள்வதற்கும், அதேவேளையில் சம்பள விகிதங்களை குறைத்துக் கொள்வதற்குமென நெருக்குதல்கள் மேற்கொள்ளப்பட முடியும். சந்தை நிலவரங்களிலும் பார்க்க சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்து வரும் வழங்கல் உறவுமுறைகளை உறுதியானவென் மாற்றிவிட முடியும். ஜப்பானின் வர்த்தக மிகை கடந்த நவம்பரின் போது உச்ச கட்டத்தை எட்டியது. கம்பெனிகளும் நுகர்வோரும் மலிவான இறக்குமதிப் பொருட்களை நோக்கிச் செல்ல முடியும் என்பதற்கு இது சான்று பகர்வதாக இருந்தது.

ஜப்பானிய வங்கியின் உத்தியோகபூர்வ கழிவு விகிதம் இப்பொழுது 1.75 சதவிகிதமாக இருந்து வருகின்றது. இது இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த விகிதமாகும். இவ்வங்கி இந்த விகிதத்தை மேலும் வெட்டி விடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இந்த வெட்டு கம்பனிகளின் இலாபங்களை அதிகப்படுத்தினாலும் கூட மூலதன முதலீட்டினை மேம்படுத்துவதில் எத்தகைய பங்கினையும் வகிக்கமாட்டாது.

ஸ்டீவன் பிரால்

நன்றி: "இன்டர்நஷனல் ஹெரால்ட் ரிபியூன்"

குறைத்துக் கொள்வதற்கும், வரி அறவீட்டினை உயர்த்திக் கொள்வதற்கும் தயக்கம் காட்டி வந்தமையின் விளைவாகவே வரவுசெலவுத் திட்டங்களில் இத்தகைய பாரிய பற்றாக்குறைகள் இடம் பெற்றன. சேமிப்புக்கள் குறைவான அளவில் கிடைத்து வருவதானது, மெய் வட்டி விகிதங்களை உயர்வாக வைத்திருக்கும் ஒரு போக்கினைக் காட்டி, அதன் மூலம் முதலீட்டினை ஊக்கமிழக்கச் செய்துவிடும். மறுபுறத்தில், ஜேர்மனியின் இணைப்பு, கிழக்கு ஐரோப்பா மற்றும் முன்னைய சோவியத் யூனியன் என்பவற்றின் மறுசீரமைப்பு, ஆப்கானிஸ்தான், வியட்நாம், கம்போடியா, இராக் மற்றும் குவைத் போன்ற நாடுகளின் புனருத்தாரணம், அமெரிக்க மற்றும் ஜப்பானிய வங்கிகளின் மூலதன அடித்தளங்கள் பலப்படுத்தப்பட்டமை மற்றும் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதிகளுக்கான கேள்வி பெருகியமை என்பன மெய் வட்டி விகிதங்களைத் தொடர்ந்தும் உயர்வாக வைத்திருக்கும் ஒரு போக்கினை தோற்றுவிக்க முடியும்.

### (6) முதலீட்டில் வீழ்ச்சி

சேமிப்புக்கள் குறைந்தளவில் கிடைக்கக் கூடியதாக இருப்பது, மூலதன முதலீட்டினையும் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு 1980 களின் பின் அரைப் பகுதிகளில் அனுபவித்து வந்த ஒரு துரிதமான வளர்ச்சியின் பின்னர், 1989ன் உச்சமட்டமான 20,000 கோடி அமெரிக்க டொலர் மட்டத்திலிருந்து 1991ல் 18,200 கோடியாகவும், 1992ல் 15,900 கோடி டொலர்களாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சியின் பெரும்பகுதி ஜப்பானிலிருந்து வந்தது. ஜப்பானின் வெளிநாட்டு நேரடி முதலீடு 1990ல் 4800 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து,1991ல் 3100 கோடி அமெரிக்க டொலர்களாகவும் 1992ல் 1800 கோடி டொலர்களாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த மிகை நிதிகள் குறைவாக இருந்தமையின் விளைவாகவே இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. ஜப்பானிய பல்தேசிய நிறுவனங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழிற்சாலைகளிலும் உபகரணங்களிலும் மிதமிஞ்சிய அளவுக்கு முதலீடுகளை முடக்கி இருப்பதன் காரணமாக, உடனடி எதிர்காலத்தில் தனியார் முதலீட்டினை அவை அதிகரிக்க மாட்டா. அதே வேளையில், கணிசமான அளவிலான வாராக் கடன்களின் பிரச்சினைகளினால் நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் ஜப்பானிய வங்கிகள் பேரளவிலான சர்வதேச கடன் வழங்குனர்களாக செயற்பட முடியும் என எதிர்பார்க்க முடியாது. 1980களின் போது ஆண்டொன்றுக்கு சராசரியாக 5000 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்து வந்த ஐக்கிய அமெரிக்காவின்

## பொருளாதார மந்தம்

வெளிநாட்டு நேரடி முதலீடு 1991ல் 2700 கோடி டொலர்களாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 1992ல் 3500 கோடி டொலர்களாக அதிகரித்துக் காணப்பட்டது.

### (7) உயர் அளவிலான ஊழியச் செலவுகள்

மேற்கு ஐரோப்பாவில் ஊழியச் செலவுகள் உயர்ந்து வருவதன் விளைவாக, ஒருபுறத்தில், ஊழியச் செலவு மிகுந்த உற்பத்தி ஆசியாவுக்கும் கிழக்கு ஐரோப்பாவுக்கும் உப ஒப்பந்த அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. மறுபுறத்தில், ஊழியத்தை சிக்கனப்படுத்திக் கொள்ளும் நுட்பங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இது முதலீடுகளைக் குறைத்து, வேலையில்லாத்திண்டாட்டத்தை பெருக்க முடியும். உதாரணமாக, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் வழங்கப்பட்டு வரும் கூலிகள் ஐக்கிய அமெரிக்காவிலும் ஜப்பானிலும் வழங்கப்பட்டுவரும் கூலியிலும் பார்க்க உயர்வாக இருந்து வருகின்றது. உயர்ந்த ஊழியச் செலவுகள் ஐரோப்பாவின் போட்டித்திறனை பாதித்து வந்திருப்பதுடன், இதன் விளைவாக, மலிவான இறக்குமதிகள் ஐரோப்பாவுக்குள் பிரேவசித்துள்ளன. இது வேலை வாய்ப்புக்களை மேலும் குறைத்துவிடும். கிழக்கு ஐரோப்பாவின் உருக்குக் கைத்தொழில், ஐரோப்பிய சமூகத்தின் உருக்கு விலைகளிலும் பார்க்க 28 சதவிகிதம் விலைக் குறைப்பினை செய்து வருகின்றது. 1974ல் 887,000 இருந்த ஐரோப்பிய உருக்குத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1992ல் 370,000 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. பிரான்ஸ் ஆடைக் கைத்தொழிலிலும் வடிவமைப்புத் தொழிலிலும் மட்டும் 1991ல் 500,000 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை இழந்தது.

### தொழிலற்ற நிலையுடன் கூடிய வளர்ச்சி

கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளில் இப்பொழுது காணப்படும் ஒரு விசேஷ அம்சம் "தொழில்களற்ற வளர்ச்சி" ஆகும்; அதாவது புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்காது, பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருவதாகும். ரோபோக்கள் போன்ற மனித இயந்திரங்கள் மற்றும் நவீன தன்னியக்க முறைகள் போன்றவற்றுக்கூடாக உற்பத்தித் திறனில் ஏற்பட்டு வந்துள்ள அதிகரிப்பு மற்றும் உற்பத்தி அலகொன்றுக்கு குறைந்த அளவிலான ஊழியம் பயன்படுத்தப்படல் போன்றவற்றின் விளவாகவே இது ஏற்பட்டுள்ளது. அது உற்பத்தித் திறனில் பாரிய அதிகரிப்புக்களைச் சாத்தியப்படுத்தியிருப்பதுடன், சிறிதளவு ஊழியத்துடன் பொருளாதார வளர்ச்சியையும் எடுத்து வந்துள்ளது. பொருளுற்பத்தித்துறை ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றில் மொ.உ.உ. யில் தனது பங்கினை அதிகரித்துக்கொண்டுள்ள அதே வேளையில், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்தில் அத்துறையின் பங்கு வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. ஜப்பானின் மொ உ உ 1973–1987 காலப்பிரிவின்போது ஆண்டொன்றுக்கு சராசரியாக 4.6 சதவீதம் வளர்ச்சி கண்டு வந்தது. ஆனால், இக் காலப்பிரிவில் வேலைவாய்ப்புக்களின் உருவாக்கத்தில் ஏற்பட்டு வந்த சராசரி வருடாந்த வளர்ச்சி 0.9 சதவீதமாக மட்டுமே இருந்தது. பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில், இக்காலப்பிரிவின்போது அவற்றின் பொருளாதாரங்கள் ஆண்டொன்றுக்கு 1 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதம் வரையில் வளர்ச்சியடைந்து கொண்டு வந்த அதேவேளையில், வேலைவாய்ப்புக்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தன. உதாரணமாக, ஐக்கிய இராச்சியத்தில் 1980க்கும் 1990க்கும் இடையில் உருக்கு உற்பத்தி அதிகரித்து வந்தது; ஆனால், உருக்குத் தொழில் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 166,000 இலிருந்து 52,000 ஆக குறைக்கப்பட்டிருந்தது. இதேபோல ஐரோப்பா 1994ல் உருக்கு உற்பத்தித் துறையில் 100,000 தொழில்களை ஒழித்துவிடுவதற்கு உத்தேசித்துள்ளது. வேலையில்லாத்திண்டாட்டத்தின் பெருக்கம் என்பது குறைந்த அளவிலான நுகர்வு மற்றும் பொருளாதார மந்தத்தின் நீடிப்பு என்ற பொருளையே தருகின்றது. உண்மையிலேயே, நவீன தொழில் நுட்பம் தொழில்களை ஒழித்து வரும் அதேவேளையில், புதிய விரிவடைந்து வரும் துறைகளில அது தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. ஆனால், பொருளாதார மந்தம் இடம்பெற்று வரும் காலப்பிரிவின் போது இந்த நிகழ்வுப்போக்கு மிக மெதுவாகவே இடம்பெறும்.

### விரிவாக்கல் கொள்கைகள்

முன்னணி கைத்தொழில் நாடுகள் பணவீக்கத்தைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, தமது பொருளாதாரங்கள் மெதுவாக வளர்ச்சியடைவதற்கும், வேலையின்மை பெருகுவதற்கும் இடமளிக்குமா? அல்லது விரிவாக்கல் தன்மை கொண்ட பேரண்டப் பொருளியல் கொள்கைகளை பின்பற்றுவதன்மூலம் மந்தத்தைத் தாக்குப்படிக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த நாடுகளிடையே இந்த விடயம் குறித்து வெவ்வேறு விதமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் உள் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும், தொழிலாளர் பயிற்சி மற்றும் ஏனைய சமூகநல நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் அடுத்து வரும் நான்காண்டுகளில் மேலதிகமாக 22,000 கோடி டொலர்களை செலவிடுவதற்கு கிளின்டன் நிர்வாகம் உத்தேசித்துள்ளது. ஆனால், தனியார் துறையின் செலவினத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை ஈடுசெய்வதற்கு இது போதியதா என்பது தெளிவாக தெரியவில்லை. அதேவேளையில், சமஷ்டி வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை அடுத்துவரும் ஐந்தாண்டு காலத்தில் 49,600 கோடி டொலர்களினால் குறைக்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் ஐரோப்பாவின் இயக்குவிசையாக செயற்பட்டு வந்துள்ள ஜேர்மனியால், இனிமேலும் அந்த வகையில் செயற்பட்டு வரமுடியாது போல் தோன்றுகிறது. முன்னர் எடுத்துக்காட்டப்பட்டது போல அது இப்பொழுது எதிர்மறை வளர்ச்சி விகிதங்களையும், உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கொண்டுள்ளது. ஆனால், அது பணவீக்கம் குறித்த அச்சத்தில் பொருளாதாரத்தை தூண்டிவிடுவது தொடர்பான கொள்கைகளை எதிர்த்து வருகின்றது. ஜேர்மனியின் முக்கியமான பிரச்சினை மொ.உ.உ. யில் சுமார் 5 சதவிகிதத்தினை கிழக்குப் பகுதியை புனரமைப்புச் செய்வதற்காக செலவிட வேண்டியிருப்பதாகும். அதற்காக பொதுக்கடன்களைப் பெறும் போது அதற்கு உயர்ந்த வட்டி வீதங்களைச் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், கடந்த இரண்டு வருட காலத்தில் அந்நாட்டில் உற்பத்தித் திறன் வளர்ச்சி விகிதத்திலும் பார்க்க, உயர்ந்த விகிதத்தில் மெய்க் கூலிகள் அதிகரித்து வந்திருப்பதால் சம்பள பணவீக்கத்தின் சாத்தியப்பாட்டையும் அது எதர்நோக்கியுள்ளது. சமீபத்தில் கிழக்கு

ஜேர்மனியில் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தங்களையடுத்து, அவர்களின் உற்பத்தித் திறனில் எத்தகைய அதிகரிப்பும் இல்லாத நிலையில், கூலிகள் உயர்த்தப்பட்டிருப்பதனால் இந்நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. ஜேர்மனிக்கும் ஏனைய ஐரோப்பிய பொருளாதாரங்களுக்குமிடையே உயர் அளவிலான நிதிசார் ஒருங்கிணைப்பு ஏற்பட்டிருப்பதன் விளைவாக, ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த ஏனைய உறுப்பு நாடுகளும் தமது வட்டி விகிதங்களை உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகள் நியாயப்படுத்தும் அளவிலும் பார்க்க உயர் விகிதங்களில் வைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்பு வாதம்

பொருளாதார மந்தமும் உலக வர்த்தகத்தில் ஏற்படும் வீழ்ச்சியும் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று செல்வாக்குச் செலுத்துபவையாகும். கடந்த இரண்டு தசாப்தகாலத்தின் போது, உலக வர்த்தகம் அளவு அடிப்படையில் சராசரியாக ஆண்டொன்றுக்கு 4 சதவீதத்துக்கு அதிகமாக அதிகரித்து வந்துள்ளது.இது இக்காலத்தில் ஏற்பட்ட உயர்ந்த அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ததுடன், அதனை பிரதிபலித்தும் வந்துள்ளது. ஆனால், 1991-92 காலப்பிரிவில் கைத்தொழில் நாடுகளின் வர்த்தக வளர்ச்சியில் மிகத் தெளிவான ஒரு மந்த நிலை உருவாகியிருந்தது. 1989ல் 6.7 சதவிகிதமாகவும் 1990ல் 5.7 சதவிகிதமாகவும் அதிகரித்துச் சென்ற இந்நாடுகளின் ஏற்றுமதிகள், 1991ல் 3.0 சதவீத வளர்ச்சியையும் 1992ல் 3.1 சதவீத வளர்ச்சியையும் மட்டுமே பதிவு செய்திருந்தன. அதேவேளையில், இந்நாடுகளின் இறக்குமதிகளில் 1989ல் 7.5 சதவிகிதமும் 1990ல் 4.6 சதவிகிதமும் வளர்ச்சி ஏற்பட்டிருந்ததற்கு பதிலாக 1991 ல் 2.9 சதவிகித வளர்ச்சியும் 1992ல் 3.7 சதவிகித வளர்ச்சியுமே ஏற்பட்டிருந்தன.

வர்த்தகத்தின் மெதுவான வளர்ச்சி பொருளாதார மந்தம் மற்றும் பெருகி வரும் வேலையில்லாத்திண்டாட்டம் என்பன பெருமளவில் வர்த்தகப் போர்கள் தோன்றும் ஒரு நிலைமைக்கு வழிகோலியுள்ளன. மானியப்படுத்தப்பட்ட விவசாயத்துறை வர்த்தகம் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய சமூகத்துக்குமிடையே இத்தகைய வியாபாரப் போர்கள் இடம் பெற்றுவருகின்றன. அதேவேளையில், அமெரிக்க மற்றும் ஐரோப்பியச் சந்தைகளில் ஜப்பானியப் பொருட்கள் வெற்றிகரமாக ஊடுருவியுள்ளன. இதன் காரணமாக, கைத்தொழில் நாடுகள் பாதுகாப்புவாத போக்குகளை பலப்படுத்தி வருகின்றன. இது மறுபுறத்தில், உலக வர்த்தகத்தை மேலும் வரையறுக்கும் ஒரு போக்கை காட்டி வருவதுடன், பொருளாதார மீட்சியையும் தாமதப்படுத்துகின்றது. உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளை முடிவுக்கு கொண்டுவருவதனை கைத்தொழில் நாடுகள் இழுத்தடித்துக் கொண்டு வந்த காரணத்தை இது விளக்குகிறது. அமெரிக்க மதிப்பீடுகளின் படி, உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முடிவினையடுத்து ஒரு பொருளாதார புத்துயிர்ப்பு ஏற்பட்டு, உலகெங்கிலும் 14 இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படவிருந்தது. ஆனால், அத்தகைய நிலைமைகள் தோன்றுவதாக தெரியவில்லை. எனினும், சில நாடுகள் இந்த பொருளாதார தாராளமயமாக்கலை தமது பாதுகாக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளுக்கான ஓர் அச்சுறுத்தலாக நோக்கி வருகின்றன. பிரான்சில் பாதுகாப்புவாத உணர்வுகள் மிகவும் வன்மையான முறையில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. அங்கு ஆத்திரமுற்ற மீனவர்கள் இறக்குமதி செய்யப்படும் மீன் தொகுதிகளை அடிக்கடி அழித்து வருவதுடன், விவசாயிகள் கிழக்கைரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழவகைகளை ஆறுகளில் கொட்டி வருகின்றனர். ஜப்பானில் உழவர்கள் அரிசி இறக்குமதிகளை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். ஐக்கிய அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ போன்ற நாடுகளினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வட அமெரிக்க கட்டற்ற வர்த்தக சம்மேளனம் (NAFTA) சில குறிப்பிட்ட கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கென கட்டுப்பாட்டு விதிகளை வகுத்துக்கொண்டுள்ளது.

## பொருளாதார மந்தம்

## பொருளாதார மந்தமும் வளர்முக நாடுகளும்

வர்த்தகம், முதலீடு, உதவி மற்றும் கடன்கள் என்பவற்றுக்காக கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளில் பெருமளவுக்குத் தங்கியிருக்கும் வளர்முக நாடுகள், அந்நாடுகளின் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றால் பொதுவாக பாதிக்கப்படுகின்றன. ஏற்றுமதிகளுக்கான கேள்வி, சந்தை வாய்ப்புக்கள், வர்த்தக நியதிகள் மற்றும் வெளிநிதியின் பாய்ச்சல் போன்ற வழிகள் மூலம் இந்தப் பாதிப்பு ஏற்படுகின்றது. கைத்தொழில்மய உலகின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் 1 சதவீத வீழ்ச்சியின் விளைவாக, வளர்முக உலகில் குறுங்காலத்தில் ஆண்டொன்றுக்கு 0.4 சதவீத வீழ்ச்சியும் நடுத்தர காலத்தில் 0.7 சதவீத வீழ்ச்சியும் ஏற்படுவதாக உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. எனவே, கைத்தொழில்மய நாடுகளில் இப்பொழுது இடம்பெற்று வரும் மெதுவான மீட்சியும் மந்தமான பொருளாதார வளர்ச்சியும் அடுத்த இரண்டு வருட காலத்தில் வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி வருவாய் மற்றும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி என்பவற்றின் வடிவில் பெரும் இழப்புக்களை எடுத்து வரமுடியும்.

1991-92ல் வளர்முக நாடுகளில் இடம்பெற்ற ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சி, கைத்தொழில் நாடுகளில் நிலவிவரும் பொருளாதார மந்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை. 1992ல் இந்நாடுகளின் பொருளாதார செயற்பாடு முன்னைய மூன்று ஆண்டுகளிலும் பார்க்க சிறந்ததாக இருந்து வந்தது. இதற்கு மூன்று பிரதான காரணங்கள் இருந்தன: கைத்தொழில்மய நாடுகளில் 1991-92ல் வர்த்தகத்தின் வளர்ச்சி வீழ்ச்சியடைந்து கொண்டு வந்திருக்கும் அதே வேளையில், வளர்முக நாடுகளின் வர்த்தகம் 1989-90ல் ஆண்டொன்றுக்கு

# பொருளாதார மந்தம்

8 சதவீதமாக அதிகரித்து வந்ததுடன், 1991-92 இந்த அதிகரிப்பு 10 சதவீதமாக இருந்தது. பிரதானமாக வளர்முக நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் பெருகி வந்தமையாலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. வளர்முக நாடுகள் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் தங்கியிருக்கும் நிலையை ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டன. வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 1991-92ல் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு இரண்டாவது காரணமாகும். மூன்றாவது காரணம், சீனாவில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி நிலையாகும்; இந்த வளர்ச்சி 1990ல் 5.2 சதவீதமாகவும், 1991ல் 7.0 சதவீதமாகவும் இருந்ததுடன், 1992ல் இது 13.0 சதவீதமாக உயர்ந்திருந்தது.

எனினும், நடுத்தர வருமான வளர்முக நாடுகளுக்கும் குறைவருமான வளர்முக நாடுகளுக்கிடையே ஒரு வேறுபாட்டினை உருவாக்குவது மிக முக்கியமாகும். குறிப்பாக, குறைவருமான வளர்முக நாடுகளின் பொருளாதார செயற்பாடு, மந்தத்தினால் மிகக் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டிருப்பது போல் தோன்றுகின்றது. சீனா தவிர்ந்த 50 குறை வருமான வளர்முக நாடுகள், நடுத்தர வருமானம் பெறும் வளர்முக நாடுகளுக்கு மாறாக, குறைந்த விகிதத்திலான பொருளாதார வளர்ச்சியையும், தேறிய மூலவளப் பாய்ச்சல்களில் வீழ்ச்சியையும் அனுபவித்து வந்துள்ளன. இதன் விளைவாக, 1991-92ல் இவற்றின் ஏழ்மை நிலையில் மேலும் சீரழிவு ஏற்பட்டு வந்துள்ளது.

### வியாபார பண்டங்கள்

கைத்தொழில் நாடுகள் அனுபவித்து வரும் பொருளாதார மந்தமும் மெதுவான வளர்ச்சியும் வளர்முக நாடுகளை, அவற்றின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியினை சுருக்குவதன் மூலம் மிகக் கடுமையான முறையில் பாதித்து வருகின்றன. வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளில் சுமார் அரைவாசிப் பங்குக்கும் கூடுதலாக இருந்து வரும் முதல்நிலைப் பண்டங்கள் இந்தப் பொருளாதார மந்தத்தின் தாக்கத்தினை ஏனைய துறைகளையும் விட மிகவும் கடுமையாக உணர்ந்து வருகின்றன. எரிபொருள் அல்லாத முதல் நிலைப் பண்டங்களின் விலைகள் 1980க்கும் 1992க்கும் இடையில் உண்மை நியதிகளில் 51 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. உலக வங்கி, 1948ல் வியாபார பண்டங்களுக்கான விலைச் சுட்டெண்ணை உருவாக்கிய பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த புள்ளி இதுவாகும்; வேளாண்மைத்துறை ஏற்றுமதிகளின் மெய் விலைகள் 39 சதவீதத்தாலும், கொக்கோ,கோப்பி என்பவற்றின் விலைகள் 70 சதவீதத்தாலும், சீனியின் விலை 60 சதவீதத்தாலும், பருத்தி மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றின் விலைகள் 50 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தன. 1989க்கும் 1992க்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டும் எரிபொருள் அல்லாத பண்டங்களின் விலைகள் நடப்பு டொலர் நியதிகளில் 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. கோப்பி, சீனி, மிளகு, பருத்தி, சணல், இயற்கை இறப்பர் மற்றும் தோற் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 1990க்கும் 1992க்கும் இடையில் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன. வியாபாரப் பண்ட விலைகள் 1995வரையில் தற்போதைய குறைவான மட்டங்களில் தொடர்ந்தும் நிலவி வர முடியும் என்றும், பொருளாதார மந்தம் நீடித்துச் சென்றால் அநேகமாக அதற்கு அப்பாலும் அந்த மட்டங்களிலேயே அவை நிலவி வரமுடியும் என்றும் உலக வங்கியின் எறிய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மீட்சி எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க குறைவானதாக இருந்து வருகின்றது. அதே வேளையில், கோப்பி மற்றும் கொக்கோ போன்ற பண்டங்களின் உற்பத்திப் பெருக்கத்தில் எத்தகைய வீழ்ச்சியும் ஏற்பட்டிருக்கவில்லை.

பண்ட விலைகளை நீண்ட காலத்தில் குறைவான மட்டங்களில் வைத்திருக்கும் நோக்குடன் சில சக்திகள் இயங்கி வரும் ஒரு சூழ்நிலையில், பொருளாதார மந்தத்தின் மூச்சுத் திணறச் செய்யும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. முதலில், மிதமிஞ்சிய அளவில் பொருட்களை வழங்கும் ஒரு போக்கு காணப்பட்டது; இந்த நிலையில், வளர்முக நாடுகள் தமது பாரிய வெளிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு, தமது உற்பத்தியையும் ஏற்றுமதிகளையும் அதிகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதன் விளைவாக புதிய உற்பத்தியாளர்கள் சந்தைக்குள் பிரவேசிப்பதுடன், உற்பத்தித் திறனை உயர்த்தக் கூடிய புதிய நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

மறுபுறத்தில், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் இயற்கை மூலப்பொருட்களுக்கு மலிவான பதிலீடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் கைத்தொழில் நாடுகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக, பருத்தி, பட்டு, சணல் என்பவற்றுக்குப் பதிலாக சிந்தெடிக் நார்களும், இயற்கை இறப்பருக்கு பதிலாக சிந்தெடிக் இறப்பரும் இப்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர, கைத்தொழில் உற்பத்திப் படிமுறை மிகத் திறமையான முறையில் வடிவமைக்கப்பட்டிருப்பதன் விளைவாக, உற்பத்தி அலகொன்றுக்கான மூலப்பொருள் பாவனையும் எரிபொருள் பாவனையும் குறைவடைந்துள்ளது. உதாரணமாக, ஜப்பான் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள் மற்றும் எரிபொருள் பாவனையை 1975 தொடக்கம் 40 சதவீதமாகக் குறைத்துக் கொண்டுள்ளது. இந்த "பொருட் பாவனைக் குறைவு" இயற்கையாகவே பண்டங்களுக்கான கேள்வியைக் குறைத்து விடுகின்றது.

வளர்முக நாடுகள் இறக்குமதி செய்யும் தயார் செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதுடன் இணைந்த வகையிலேயே வியாபாரப் பண்டங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இதனையடுத்து, இந்நாடுகளின் வர்த்தக நியதிகள் சீர்குலைந்துள்ளன. பொருளாதார மந்தத்துக்கு மத்தியிலும் கூட, கைத்தொழில் நாடுகளில் ஆண்டு தோறும் விலைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. அதனுடன் இணைந்த வகையில் ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் நாணயங்களும் பெறுமதியேற்றம் கண்டு வருகின்றன.

முதல் நிலைப் பண்டங்களின் விலைகளை உறுதியான நிலையில் வைத்திருப்பதற்கும், உற்பத்தியாளர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதற்குமான சர்வதேச முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. கோப்பி, கொக்கோ, சீனி, தகரம் மற்றும் இறப்பர் ஆகிய ஐந்து வியாபாரப் பண்ட உடன்படிக்கைகளில் உடன்படிக்கை மட்டுமே செயற்பட்டு வருகின்றது. ஏனயவை, மூலவளப் பற்றாக்குறை காரணமாகவும் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையிலான பிணக்குகளாலும் செயலிழந்து போயுள்ளன. பண்ட விலைகளில் ஏற்படும் தளம்பல்களின் தாக்கங்களை ஈடுசெய்து கொள்வதற்காக சர்வதேச நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வரும் நட்டஈட்டு நிதி போதியதாக இருக்கவில்லை. மேலும்,

இந்நிறுவனங்கள் பண்ட விலைகளின் வீழ்ச்சிக்கான; ஒரு தீர்வினை வழங்குவதில்லை, நிவாரணத்தை மட்டுமே வழங்குகின்றன. இதற்கான நீண்ட காலத் தீர்வு உற்பத்தியைப் பன்முகப்படுத்துவதாகும். சில நடுத்தர வருமான வளர்முக நாடுகள் இதனை ஏற்கனவே வெற்றிகரமான முறையில் சாதித்துக் கொண்டுள்ளன. ஆனால், இதற்காக பௌதீக மூலதனத்திலும் மனித மூலதனத்திலும் கணிசமான அளவில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. குறைவருமான வளர்முக நாடுகளினால் வெளிநாட்டு உதவியின்றி இதனை சாதித்துக் கொள்ள முடியாது. மேலும், குறைந்த விலைகளின் விளைவாக, வருமானம் வீழ்ச்சியடைந்து, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகின்றது; வளர்முக நாடுகளில் பெருந்தோட்டங்கள் அல்லது சுரங்கங்கள் மிக மோசமான பராமரிப்பைப் பெறுகின்றன.

### சந்தை வாய்ப்புக்கள்

பொருளாதார மந்தம், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், அதனை அடுத்து கட்டற்ற வர்த்தகத்தின் மீதான நம்பிக்கை நலிவடைதல் மற்றும் பாதுகாப்புவாதத்துக்கான சக்திவாய்ந்த நிர்ப்பந்தங்கள் என்பவற்றின் விளைவாக, கைத்தொழில் நாடுகள் வளர்முக நாடுகளுக்கு எதிரான தமது வர்த்தகத் தடைகளை அதிகரித்து வருகின்றன. வளர்முக நாடுகள் வர்த்தகத் தாராளமயமாக்கல் மற்றும் ஏற்றுமதி நோக்கிலான அபிவிருத்தி என்பவற்றைத் துவக்கி வைத்திருக்கும் ஒரு கால கட்டத்திலேயே இத்தகைய தடையரண்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 24 கைத்தொழில் நாடுகளில் 20 நாடுகள், பத்தாண்டுகளுக்கு முன் இருந்ததிலும் பார்க்க இப்பொழுது அதிகளவு பாதுகாப்புத் தடைகளைக் கொண்டுள்ள நாடுகளாக இருந்து வருகின்றன. மேலும், கைத்தொழில் நாடுகளின் ஏற்றுமதிகளிலும் பார்க்க வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகள் தொடர்பாகவே அவை அதிக பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி வருகின்றன. வளர்முக நாடுகள், கைத்தொழில் நாடுகளில் சராசரியாக 7தொடக்கம் 20 சதவீதம் வரையிலான தீர்வை விகிதங்களை எதிர்கொண்டு வருகின்றன. அவை பதப்படுத்தல் மட்டங்களுடன் இணைந்த வகையில் உயர்ந்து செல்கின்றன. உதாரணமாக, பதப்படுத்தப்படாத சீனியின் மீது 2 சதவிகித தீர்வை விதிக்கப்பட்டு வரும் அதே வேளையில், பதப்படுத்தப்பட்ட சீனியின் மீது 20 சதவீத தீர்வை விதிக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம், வளர்முக நாடுகள் விவசாயத்துறைப் பண்டங்களை பதப்படுத்துவதில் உற்சாகமிழந்து வருகின்றன.

மேலும், கைத்தொழில் நாடுகளுக்கான வளர்முக நாடுகளின் இறக்குமதிகளில் சுமார் 28 சதவீதமானவை தீர்வையில்லாத தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. இது 1987க்கும் 1990க்கும் இடையில் 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. புடவைகள், ஆடைகள், பாதணிகள் போன்ற வளர்முக நாடுகளின் போட்டித்திறன்கொண்ட, ஊழியச் செறிவு மிகுந்த ஏற்றுமதிகள் மீதே பிரதானமாக தீர்வையல்லாத தடைவழிமுறைகள் விதிக்கப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி தொடர்பான தடைவரம்பு ஏற்பாடுகள், விலைத்தடைவரம்பு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குவிதிகள், எதிரீடு செய்யும் மற்றும் மலிவான பொருட்களை கொண்டு வந்து குவிப்பதனைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் என்பன இந்த வழிமுறைகளில் அடங்குகின்றன. வளர்முக நாடுகளின் மலிவான ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பாக வட அமெரிக்க கட்டற்ற வியாபார அமைப்பிலிருந்து (NAFTA) வரக்கூடிய தடைகளையும் இதனுடன் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். வர்த்தகம் மற்றும் தீர்வைகள் தொடர்பான பொது உடன்பாட்டு அமைப்பு (GATT)வர்த்தகத் தடைகளை நீக்குவதற்காக உருவாக்கப்பட்ட போதிலும், அதன் செல்வாக்கு மிகச் சிறு அளவிலேயே காணப்படுகிறது. உண்மையிலேயே, உலக வர்த்தகத்தில் சுமார் 7 சதவீதம் மட்டும் "GATT" விதிமுறைகளுக்கு முழு அளவில் இணங்கிய விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வளர்முக நாடுகள் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் பிரவேசிப்பதனைக் கட்டுப்படுத்தும் வர்த்தகத் தடைகள், இந்நாடுகள் ஆண்டுதோறும் 4000கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றமதி வருமானங்களை இழக்கச் செய்து வருகின்றன. பல்நார் உடன்படிக்கையினால் மட்டும் இந்நாடுகள் 2400 கோடி டொலர் வருமானத்தை துறக்க வேண்டியுள்ளது. இலங்கை, கைத்தொழில் நாடுகளுக்கான அதன் ஏற்றுமதிகள் தொடர்பாக சராசரியாக 8.3 சதவீத தீர்வையை எதிர்கொள்கின்றது; இது தவிர அதன் ஏற்றுமதிகள் 63.9 சதவீதம் தீர்வையல்லாத தடைகளை சந்திக்க வேண்டியுள்ளது. இந்தத் தடைகள் அகற்றப்பட்டால் இலங்கை அதன் ஏற்றுமதிகளை இரட்டிப்பாக்கிக்

## பொருளாதார மந்தம்

கொள்ள முடியும் என்றும், ஆண்டொன்றுக்கு 100 கோடி டொலர்களுக்கு மேல் சம்பாதித்துக்கொள்ள முடியும் என்றும் உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே, வளர்முக நாடுகள் உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் வெற்றிகரமான முடிவில் பெருமளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தன. இது உலகளாவிய வர்த்தகத் தாராளமயமாக்கலுக்கான அத்தியாவசியமான ஒரு முன் நிபந்தனையாக இருப்பதாக கருதப்பட்டது.

வர்த்தகத் தடைகள் தவிர, வளர்முக நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வோர் மற்றொரு அச்சுறுத்தலையும் எதிர் கொண்டுள்ளனர். (பெரும்பாலான வளர்முக நாடுகளினால் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும்) புதிய நவீன தொழில்நுட்பங்கள், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, வளர்முக நாடுகளின் மூலப்பொருட்களுக்கும் கனிப்பொருட்களுக்கும் பதிலீடுகளை உற்பத்தி செய்து வருவது மட்டுமன்றி, அதிகரித்தளவிலான தன்னியக்கம் மற்றும் தொழில்நுட்பத்திறன் என்பவற்றுக்கூடாக ஊழியச் செலவுகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து வருகின்றன. இதன் மூலம் வளர்முக நாடுகள் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்துவரும் ஊழியச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் ஊழியச் செறிவு மிகுந்த உற்பத் திப் பொருட்களின் போட்டித்திறன் வீழ்ச்சியடைகின்றது.

### கடன் சுமை

வளர்முக நாடுகளின் மொத்த வெளிநாட்டுக் கடன் 1990ல் 153,100 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து, 1992ல் 170,300கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது. ஆனால், அவற்றின் கடன்கள் மீதான எதிர்மறையான மாற்றல்கள் (அதாவது, கடன் தீர்ப்பனவுக்கு மிதமிஞ்சிய கடன் சேவைக் கொடுப்பனவு) 1986ல் 3500 கோடி டொலர் அளவில் உயர் மட்டத்தில் இருந்து, 1990ல் 1900கோடி டொலர்களாகவும், 1992ல் 400 கோடி டொலர்களாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே, இந்த வகையில் அண்

# பொருளாதார மந்தம்

மைய வருடங்களில் வளர்முகநாடுகள் கடன் சுமையைக் குறைத்துக் கொள்வதிலும், கடன் பெறுவதற்கான நம்பகத்தன்மையை விருத்தி செய்து கொள்வதிலும் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டு வந்துள்ளன. நடுத்தர வருமான வளர்முக நாடுகளை- குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவைப்- பொறுத்த வரையில் மேற்கொள்ளப்பட்ட கடன் குறைப்பு உடன்படிக்கைகள் மற்றும் கடன் மாற்ற உடன்படிக்கைகள் என்பவற்றின் விளைவாகவே இந்த விருத்தி நிலை தோன்றியிருந்தது. ஆனால், முக்கியமாக வறிய பிரிவைச் சேர்ந்த வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், கடன் நெருக்கடி தொடர்ந்தும் நீடித்து வருகின்றது. உலக வங்கியின் தரவுகளின் பிரகாரம், 1992ல் 44 வளர்முக நாடுகள் மிகக் கடுமையான முறையில் கடன்பட்ட நாடுகளாக இருந்தன; 33 நாடுகள் மிதமான அளவில் கடன்சுமையில் இருந்தன.

உதாரணமாக, மொத்த தேசிய உற்பத்தியில் கடனின் விகிதம் நடுத்தர வருமான வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், 1987ல் 40 சதவிகிதமாக இருந்து, 1989ல் 35 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்து,1991 வரையில் அதேமட்டத்தில் நிலவி வந்தது. குறைவருமான வளர்முக நாடுகளின் இந்த விகிதம் 1985ல் 30 சதவிகிதமாக இருந்து, 1989ல் 38 சதவிகிதமாகவும், 1991ல் 45 சதவிகிதமாகவும் அதிகரித்திருந்தது. இலத்தீன் அமெரிக்கா, கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா ஆகிய பிராந்தியங்களின் மொத்த தேசிய உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன்களின் விகிதம் வீழ்ச்சியடைந்து வந்த அதேவேளையில், தென் ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களின் விகிதம் அதிகரித்துச் சென்றிருந்தது. ஆபிரிக்காவில் 1985ல் 103 சதவிகிதமாக இருந்த இது 1989ல் 110 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. தென் ஆசியாவில் 1985ல் 25 சதவிகிதமாக இருந்து, 1989ல் 29 சதவிகிதமாகவும் 1991ல் 34 சதவிகிதமாகவும் அதிகரித்திருந்தது.

மிகக் கடுமையான முறையில் கடன் சுமையில் சிக்குண்டிருந்த குறை வருமான நாடுகளின் கடன் சுமை அதிகரித்திருந்தது. மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பான இந்நாடுகளின் கடன் விகிதம் 1991ல் 117சதவிகிதமாக இருந்தது. இதற்கு பல காரணங்கள் வழிகோலியிருந்தன. கைத்தொழில் நாடுகளில் பொதுச் சேமிப்புக்கள் வீழ்ச்சியடைந்ததனை அடுத்து மெய் வட்டி வீதங்கள் உயர்வாக காணப்பட்டமை, வர்த்தக வங்கிகளால் அறவிடப்பட்டு வந்த உயர் அளவிலான அபாய ஏது கட்டணங்கள், வியாபார, பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, சர்வதேச நாணய நிதியத்தினால் திணிக்கப்பட்ட நாணயப் பெறுமதி யிறக்கம் என இக்காரணங்களைப் பட்டியலிட முடியும். பல வளர்முக நாடுகள் உத்தியோகபூர்வ கடன் மீளமைப்பு உடன்படிக்கைகளின் கீழ், பாரிஸ் கிளப் அமைப்புக்கூடாக கடன் நிவாரணத்தைப் பெற்றிருந்தன. உதாரணமாக, 1991ல் 6600 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கடனை மீள அட்டவணைப்படுத்துவதற்கான அத்தகைய உடன்படிக்கைகள் செயற்பட்டு வந்தன. இது தவிர, சில நாடுகள் வர்த்தக வங்கி கடன் சேவை குறைப்பு ஏற்பாடுகளுக்கூடாக நிவாரணம் கோரியிருந்தன. ஆனால், பெரும்பாலான வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில், இந்தக் கடன் நிவாரண வழிமுறைகள் போதுமானவையாக இருக்கவில்லை.

## மூலதனப் பாய்ச்சல்கள்

வளர்முக நாடுகளுக்கான வெளிநிதியில் அண்மைய வருடங்களில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. 1986 தொடக்கம் 1988 வரையில் எதிர்மறை நிலையிலிருந்த கூட்டு மொத்த தேறிய இட மாற்றல்கள் சாதகமானவையாக மாறி, 1'92 அளவில் 5700 கோடி அமெரிக்க டொலர் அளவில் உயர்ந்திருந்தன. உள்நாட்டுச் சீர்திருத்தம், தாராளமயமாக்கல், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அதிகரிப்புக்கு வழிவகுத்த தனியார்மயமாக்கல் மற்றும் கடன் குறைப்பு வழிமுறைகள் என்பன காரணமாக இது சாத்தியமாகியிருந்தது. 1981க்கும் 1991க்கும் இடையில் வளர்முக நாடுகளுக்கான மொத்த வெளிநிதிப் பாய்ச்சலில் வர்த்தக வங்கிக் கடன்களின் பங்கு 46.1 சதவிகிதத்திலிருந்து 17.4 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதே நேரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடு, முறிகள் மற்றும் பங்கு மூலதனம் என்பவற்றின் பங்கு 9.6 சதவிகிதத்திலிருந்து 25.0 விகிதமாக உயர்ந்திருந்தது.

## வெளிநாட்டு நேரடி முதலீடு

வளர்முக நாடுகளின் மீதான நடைமுறை விலைகளிலான வெளிநாட்டு நேரடி முதலீடு 1989ல் 2300 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1991 3100 கோடி அமெரிக்க டொலர்களாகவும், 1992ல் 3800 அமெரிக்க டொலர்களாகவும் அதிகரித்துக் காணப்பட்டது. இக் காலப்பிரிவில் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு வீழ்ச்சியடைந்திருந்தது என்பது ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. 1991ல் வளர்முக நாடுகளில் இடப்பட்டிருந்த வெளிநாட்டு நேரடி முதலீடு உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் 22.1 சதவீவிகிதமாக இருந்தது; இது 1987ல் 12 சதவிகிதமாகவும் 1981ல் 22.8 சதவிகிதமாகவும் இருந்து வந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாட்டு நேரடி முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.1 சதவிகிதமாக இருந்ததுடன், 1991ல் அனைத்து வளர்முக நாடுகளினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவிகிதமாகக் காணப்பட்டது. ஆனால், அதன் முக்கியத்துவம் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தது.

பொதுவாக, ஜப்பானின் வெளிநாட்டு நேரடி முதலீடு, வளர்முக நாடுகளில் முடக்கப்படும் மொத்த வெளிநாட்டு முதலீடுகளில் மூன்றிலொரு பங்காக இருந்து வருவதுண்டு. எனினும், 1989ல் 1450 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த வளர்முக நாடுகள் மீதான ஜப்பானின் வெளிநாட்டு நேரடி முதலீடு 1990ல் 1160 கோடி அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஆசியாவைப் பொறுத்தவரையில் விசேஷ முக்கியத்துவம் கொண்டதாகும். வளர்முக நாடுகள் மீதான ஜப்பானின் வெ.நே. முதலீட்டில் ஆசியா 60 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட பகுதியைப் பெற்றுக் கொள் கின்றது. ஜப்பானியக் கம்பனிகள் 1986 ஏப்ரல் மாதத்துக்கும் 1992 செப்டம்பர் மாதத்துக்கும் இடையில் ஆசியாவின் ஏனைய பகுதிகளில் 3700 கோடி அமெரிக்க டொலர்களை முதலீடு செய்திருந்ததுடன், தமது நடவடிக்கைகளில் கணிசமான அளவிலான பாகத்தினை மலிவான நாடுகளை நோக்கி நகர்த்திச் சென்றிருந்தன. இக்கம்பனிகள் பரந்த அளவிலான முதலீடுகளை மேற்கொள்வதற்கு, நிதிசார் அடிப்படையில் சக்தி வாய்ந்தவையாக இருக்கவில்லை என்பதும், பொருளாதார மந்தத்தினால் கேள்வி வீழ்ச்சி அடைந்திருந்த ஒரு சூழ்நிலையில் செயற்பாடுகளை

## பொருளாதார மந்தம்

விஸ்தரிப்பதற்கான ஊக்குவிப்பு நிலவிவரவில்லை என்பதும் இதற்கான காரணமாகும். அடுத்துவரும் சில வருடங்களில் இக்கம்பனிகளின் வெ.நே. மு. மிகக் குறைவான அளவுகளிலேயே இடம் பெறமுடியும். உண்மையிலேயே 1993 மார்ச் மாதத்தில் ஜப்பானின் 3473 முன்னணி கம்பனிகள் குறித்து ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கம்பனிகளில் சுமார் 80 சதவீதமானவை அடுத்துவரும் 5 வருடங்களில் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான எவ்விதமான திட்டங்களையும் வைத்திருக்கவில்லை என்பது இந்த மதிப்பீட்டின் போது தெரிய வந்தது. எஞ்சிய கம்பனிகள், தாம் முதலீடு செய்வதாக தீர்மானம் எடுப்பதாக இருந்தால், சீனாவுக்கும் ஏஷியன் அமைப்பு நாடுகளுக்கும் முன்னுரிமை வழங்கப்போவதாக தெரிவித்தன.

வெளிநாட்டு நேரடி முதலீடு சார்பு ரீதியில் ஒரு சில வளர்முக நாடுகளிலேயே- குறிப்பாக, நடுத்தர வருமானப் பிரிவைச் சேர்ந்த நாடுகளிலேயே பெருமளவுக்கு ஒன்று திரண்டுள்ளது. உதாரணமா, 1980–89 காலப்பிரிவின் போது வெ.நே.மு. சுமார் 74 சதவிகிதம் நல்ல நிலையில் இருந்த, வேகமாக வளர்ச்சி கண்டு கொண்டு வந்த பத்து நாடுகளுக்கே சென்றது. குறைவிருத்தி நாடுகள் இதில் 2 சதவிகிதத்தை மட்டுமே பெற்றுக்கொண்டன. சமீப வருடங்களில் வெ.நே.மு. கிழக்கு மற்றும் தென் கிழக்காசிய நாடுகளை நோக்கிய ஒரு போக்கினை காட்டி வந்துள்ளது. உண்மையில், இப்பொழுது மொத்த வெ.நே.மு.ன் மூன்றில் ஒன்றுக்கும் கூடுதலான பாகம் சீனா, கொரிய குடியரசு, இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா, மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கே செல்கின்றன. இதில் இலத்தீன் அமெரிக்கா பெற்றிருந்த பங்கு 1980களில் மூன்றில் இரண்டாக இருந்து, 1989ல் மூன்றில் ஒன்றாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வெ.நே.மு. இலாபங்களினாலேயே வழி நடாத்தப்பட்டு வருகின்றது. எனவே இந்த மாறி வரும் முதலீட்டு மாதிரி பிராந்தியங்களின் வேறுபட்ட இலாபத்தன்மைகளை பிரதிபலித்துக் காட்டுகின்றது. கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் வெ.நே.மு. மீதான சராசரி மெய் ஆதாய விகிதம் 13.5 சதவிகிதமாக இருந்து வருகின்றது. இது இப்பிராந்தியத்தின் தொழில்நுட்பத்தின் உயர் மட்டம், ஊழியத்தின் உற்பத்தித்திறன் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை பிரதிபலித்துக் காட்டுகின்றது. இந்த ஆதாய விகிதம் இலத்தீன் அமெரிக்காவில் 11.1 சதவிகிதமாகவும் உப–சகார ஆபிரிக்காவில் 6.8 சதவிகிதமாகவும் உள்ளது. மெய் ஆதாய விகிதம் வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் மிக உயர்வாக –17 சதவிகிதம்–காணப்படுகின்றது. உலகளாவிய மொத்த வெ.நே.மு.ல் சுமார் 80 சதவிகிதம் வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கிச் செல்வதற்கான காரணம் இதுவாகும்.

அதிகரித்த அளவிலான மூலதன முதலீடு, அதிகரித்த அளவிலான தனியார் மூலதனத்தின் பாய்ச்சலையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது. அதாவது, முறிகளாகவும் பங்கு மூலதனமாகவும் இந்தத் தனியார் நிதிப் பாய்ச்சல்கள் இடம்பெற்று வருகின்றன. இது 1982–88 காலப் பிரிவில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 600 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1992ல் 3400 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது. விரிவான முறையில் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்த வளர்முகநாடுகளின் கடன் பெறும் நம்பகத்தன்மை விருத்தி அடைந்திருந்ததன் விளைவாகவே இந்த முதலீட்டுப் பெருக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த வளர்முக நாடுகள் தமது பங்குச் சந்தைகளையும், தனியார் மயமாக்கப்பட்ட வணிகத் தொழில் முயற்சிகளையும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நேரடி பங்கேற்புக்காக திறந்து விட்டிருந்தன. இதன் மூலம் முதலீடுகளைப் பெறும் வளர்முக நாட்டைப் பொறுத்தவரையில் மூலதனத்தின் செலவு குறைவடைந்திருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக திறந்து விடப்பட்டமையை அடுத்து வளர்முக நாடுகளில சந்தைகளில் விலைகள் செங்குத்தாக அதிகரித்துச் சென்றுள்ளன. எவ்வாறிருப்பினும், தனியார் பங்கு மூலதன முதலீடுகளில் மூன்றில் இரண்டுக்கும் கூடிய பகுதி 5 நாடுகளுக்கே சென்றுள்ளது.

### உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி

வெ.நே.மு. அதிகரித்து வந்துள்ள அதேவேளையில், வளர்முக நாடுகளுக்கான அபிவிருத்தி உதவியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் (OECD)தேறிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி நடைமுறை விலைகளில் 1989ல் 4670 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1990ல் 5560 அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது. ஆனால், அது மீண்டும் 1991ல் 5550 கோடி டொலர்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. 1990லும், 1991லும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி அந்த உதவியை வழங்கும் நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் 0.33 விகிதமாக நிலைத்து வந்துள்ளது. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கான 0.7 சதவிகிதத்தின் அரைவாசிப் பங்குக்கும் குறைவானதாகும். நோர்வே, டென்மார்க், சுவீடன், பின்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய 5 நாடுகள் மட்டுமே 1991ல் இந்த இலக்கினை எட்டியிருந்தன. ஐக்கிய அமெரிக்காவின் விகிதம் 0.20 சதவிகிதமாக இருந்ததுடன், ஜப்பானில் இது0.32 சதவிகிதமாக இருந்தது. உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியில் சுமார் 70 சதவிகிதம் இருபக்க உதவியாக இருந்து வருகின்றது. அது அரசியல் காரணங்களின் செல்வாக்குக்கு உட்படுவதுடன், உதவி வழங்கும் நாடுகளின் முன்னுரிமைகளுக்கு ஏற்ற விதத்திலேயே பகிர்ந்தளிக்கப்படுகின்றது. உதாரணமாக, 1986-90 காலப் பிரிவில் அமெரிக்காவின் இருபக்க உதவியில் 59 சதவிகிதம் இஸ்ரேல், எகிப்து, எல்சல்வடோர், பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளுக்கே செல்கின்றது. ஜப்பானிய இருபக்க உதவியின் சுமார் 48 சதவிகிதம் இந்தோனேஷியா, சீனா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குச் சென்றது. அரேபிய அரசுகளுக்கான தலைக்குரிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி 43 டொலர்களாக இருந்தது; இது தென் ஆசியாவில் 5 டொலர்களாகவும், இந்தியாவில் 1.8 டொலர்களாகவும், பாகிஸ்தானில் 8.8 டொலர்களாகவும் காணப்பட்டது. மேலும், எகிப்தின் மொத்த தேசிய உற்பத்தியில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு உதவியின் பங்கு 17.2 சதவிகிதமாக இருந்து வந்த அதே வேளையில், இந்தியாவில் இது 0.5 சத விகிதமாக மட்டுமே காணப்பட்டது. மேலும், பாகிஸ்தான் 2.8 சதவீதம், பங்களாதேஷில் 10.5 சதவீதம் என இந்த வீதங்கள் நிலவிவந்தன.

உலகின் மிக வறிய மக்களில 70 சதவிகிதத்துக்கும் மேற்பட்டவர்களை கொண்டிருக்கும் 10 நாடுகள் உலகளாவிய உதவியில் நான்கில் ஒரு பங்கினை மட்டுமே பெற்று வருகின்றன. மேலும், இருபக்க அடிப்படையிலான உத்தி

## பொருளாதார மந்தம்

யோகபூர்வ அபிவிருத்தி உதவியில் சுமார் 6.5 சதவிகிதம் மட்டுமே மனித முன்னுரிமைகளுக்காக வழங்கப்பட்டு வருகின்றது. 1989ல் வழங்கப்பட்ட 44 சதவீதமான உதவி, உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடியதாக இருந்து வந்தது.மொத்த உதவி நிபந்தனைகள் எதுவும் அற்றதாக இருந்து வருமேயானால் வளர்முக நாடுகளுக்கான பொருளாதார அனுகூலங்கள் ஆண்டொன்றுக்கு 400 கோடி டொலர் வரையில் இருந்து வரும் என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. மேலும், உதவி வழங்குவதில், இப்பொழுது, உதவி வழங்கும் நாடுகளின் நோக்கங்கள் மாற்றமடைந்து வருகின்றன. சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் போன்ற அம்சங்கள் உதவியைப் பகிர்ந்தளிக்கும் அளவுகோல்களாக இப்பொழுது பெருமளவுக்கு வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

தென் ஆசியாவுக்குச் செல்லும் உதவியின் விகிதத்தில் இப்பொழுது பொதுவான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பாகிஸ்தானுக்கான அரேபிய உதவி வீழ்ச்சியடைந்திருப்பதன் காரணமாக இது ஏற்பட்டிருக்க முடியும். கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகள், அங்கோலா மங்கோலியா, ஆப்கானிஸ்தான், கம்போடியா, ஈரான், ஜோர்தான் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் இப்பொழுது உதவி கோரி வருவதனால் தென் ஆசியாவின் பங்கு மேலும் வீழ்ச்சியடைய முடியும்.

**1990களுக்கான வாய்ப்புக்கள்**

அனைத்து வளர்முக நாடுகளும் 1992-2002 தசாப்தத்தின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3 சதவிகித சராசரி வருடாந்த வளர்ச்சியை அடைய முடியும் என உலக வங்கியின் எதிர்வு கூறல்கள் தெரிவிக்கின்றன. இது 1982-92 காலப் பிரிவுக்கான வளர்ச்சியான 3.8 சதவிகிதத்திலும் பார்க்க Stet உயர்வானதாகும். கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகளில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகக் காணப்பட்டபோதிலும், வளர்முக நாடுகளில் உயர் விகிதங்களில் வளர்ச்சி ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக வர்த்தகம் வேகமாக வளர்ச்சியடைந்து, மெய்வட்டி விகிதங்கள் குறைந்த மட்டங்களில் நிலவி வருவதுடன் பண்ட விலைகளில் ஏற்பட்டுக் கொண்டு வரும் வீழ்ச்சி நிறுத்தப்பட்டு விடும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் தொடர்ச்சியான துரித வளர்ச்சி இந்த ஒட்டுமொத்தமான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும். கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் தலைக்குரிய மொ.உ.உ. 1992-2002 காலப்பிரிவில் 5.9 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது இலத்தீன் அமெரிக்காவில் 2.1 சதவிகிதமாகவும், மத்திய கிழக்கில் 1.6 சதவிகிதமாகவும் உபசஹாரா ஆபிரிக்காவில் 0.6 சதவிகிதமாகவும் இருந்து வரும்.

## பொருளாதார மந்தத்தின் போது தாக்குப் பிடிக்கும் ஆசியாவின் ஆற்றல்

கைத்தொழில் நாடுகளில் தோன்றியுள்ள பொருளாதார மந்தம் ஆசியாவிலும் பசுபிக் பிராந்தியத்திலும் உள்ள வளர்முக நாடுகளை ஒட்டுமொத்தமாக பலவீனப்படுத்தி விடவில்லை என்பதனை காண முடிகின்றது. மாறாக, இந்நாடுகள் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் கொண்டவையாக இருந்து வருகின்றன. இவை 1991ல் 6.1 சதவிகித வளர்ச்சியையும் 1992ல் 6.9 சதவிகித வளர்ச்சியையும், 1993ல் 7.0 சதவிகித வளர்ச்சியையும் சாதித்துக் கொண்டுள்ளன. இப்பிராந்தியத்தின் வெளிநாட்டு வர்த்தகம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு செழிப்புநிலையில் காணப்பட்டமையின் விளைவாகவே இந்த தாக்குப் பிடிக்கும் திறன் உருவாகியது என்று கூறலாம். இப்பிராந்தியத்தின் வெளிநாட்டு வர்த்தகத்தின் அளவு அடிப்படையிலான வருடாந்த சராசரி வளர்ச்சி 1991/92ல் 15 சதவீதமாக இருந்து வந்தது. ஏற்றுமதிகளின் போட்டித் திறனின் அதிகரிப்பு, ஏற்றுமதிச் சந்தைகள் பன்முகப்படுத்தப்பட்டமை, நிதி மற்றும் இறையியல் ஸ்திரத் தன்மையை அடைவதற்கான உள்நாட்டுச் சீர்திருத்தங்கள், வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன தாராளமயமாக்கப்பட்டமை, உயர்ந்த உற்பத்தித்திறன் ஆகிய அனைத்தும் வர்த்தகத்தில் ஏற்பட்டு வந்த இந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருந்தன. ஆனால், இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பகுதி இப்பிராந்தியங்களுக்கிடையிலேயே சந்தைகளைத் தேடிக் கொள்கின்றன என்பதாகும். இதன் மூலம் கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் தங்கியிருக்கும் நிலைமையை அவை ஓரளவுக்குக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தன. ஆசிய வளர்முக நாடுகளின் தாக்குப்பிடிக்கும் திறன் ஒரு புதிய அபிவிருத்தியாக இருக்கவில்லை. உண்மையிலேயே, அனைத்து வளர்முக நாடுகள் தொடர்பாகவும் " இழந்த தசாப்தம்" என்று வர்ணிக்கப்பட்டு வரும் 1980களின் போது இது நன்கு நிரூபிக்கப்பட்டிருந்தது. 1980களின் போது இலத்தீன் அமெரிக்காவும் ஆபிரிக்காவும் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தயில் எதிர்மறையான வளர்ச்சியை அனுபவித்திருந்தன. ஆனால், ஆசியா சாதகமான வளர்ச்சியை பெற்றிருந்தது. கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவில், வளர்ச்சி ஆண்டொன்றுக்கு 3.3 சதவீதமாக இருந்தது. சீனாவையும் தென்னாசியாப் பிராந்தியத்தையும் பொறுத்தவரையில், 1980களின் போது, 1970களிலும் பார்க்க உயர்ந்த அளவிலான வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் ஆசியாவில் ஏற்பட்ட வளர்ச்சி கைத்தொழில் நாடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த வளர்ச்சி விகிதங்களையும் மிஞ்சியதாக இருந்தது.

## பொருளாதார மந்தம்

கிழக்கு மற்றும் தென்கிழக்காசியப் பிராந்தியம் உலகில் மிகத் துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு பிராந்தியமாக இருந்து வருகிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. 1982-92 தசாப்தத்தின்போது, இப் பிராந்தியத்தின் மொ.உ.உ. ஆண்டொன்றுக்கு சராசரியாக 8.0 சதவிகிதத்தினால் அதிகரித்து வந்திருந்தது. இந்த விகிதம் மத்திய கிழக்கில் 1.6, இலத்தீன் அமெரிக்காவில் 1.9, உப சகாரா ஆபிரிக்காவில் 2.0, தென் ஆசியாவில் 5.2 என காணப்பட்டது. மேலும், இப்பிராந்தியத்தின் தலைக்குரிய மொ.உ.உ ஆண்டொன்றுக்கு 6.4 சதவிகிதமாக அதிகரித்து வந்தது. தென்னாசியாவில் இதில் 2.9 சதவிகித அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டு வந்திருப்பதுடன், இலத்தீன் அமெரிக்கா, உப-சகாரா ஆபிரிக்கா, மத்திய கிழக்கு ஆகிய பிராந்தியங்களில் இதில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. சீனா ஹொங்கொங், தாய்வான் மாகாணம் மற்றும் கொரிய குடியரசு என்பவற்றை உள்ளடக்கிய கிழக்காசியப் பிராந்தியம், இந்தோனேஷியா, மலேசியா, பிலிப் பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தென் கிழக்காசிய பிராந்தியத்திலும் பார்க்க துரிதமாக வளர்ச்சி கண்டு கொண்டு வந்தது.

### சீனப் பொருளதார பிரதேசம்

சீனா, ஹொங்கொங் மற்றும் சீனாவின் தாய்வான் மாகாணம் ஆகியன ஒன்றாக இணைக்கப்பட்டு "சீன பொருளாதார பிரதேசம்" என அழைக்கப்படுகின்றது. துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் கிழக்கு மற்றும் தென் கிழக்காசிய பிராந்தியத்தின் மைய ஸ்தானத்தில் இது உள்ளது. இப்பராந்தியத்தின் 1991 ஆம் ஆண்டுக்கான உலகத்துக்கான ஏற்றுமதிகள், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களைச் சேர்ந்த அனைத்து வளர்முக நாடுகளும் செய்து வந்த மொத்த எற்றுமதிகளின் 57சதவீதமாக இருந்தன. சீனா மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகள் ஆசியாவின் பிராந்தியத்துக்கிடையிலான வர்த்தகத் தில் மிக முக்கியவர்த்தக நாடுகளாக இருந்து வருகின்றன. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் வளர்முக நாடுகளின் பிராந்தியங்களுக்கிடையே 1991ல் இடம்பெற்ற பிராந்தியத்துக்குள்ளான வர்த்தகத்தில் இவ்விரு நாடுகளும் 55 சதவிகிதத்தை பெற்றிருந்தன. சீனா அதன் மொத்த எற்றுமதிகளில் 57 சதவிகிதத்தினை ஆசிய வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் அதேவேளையில், ஹொங்கொங் 37 சதவிகிதத்தினை இவ்விதம் ஏற்றுமதி செய்கின்றது. எனவே, இந்தப் பின்னணியில், இந்த இரு நாடுகளினதும் அபிவிருத்தி வேகமும் வர்த்தகமும் முழுப் பிராந்தியத்தின் மீதும் சக்தி வாய்ந்த ஒரு செல்வாக்கினைச் செலுத் துவது தவிர்க்க முடியாததாகும். சமீப வருடங்களில் சீனப் பொருளாதாரப் பிரதேசத்தில் ஏற்பட்டு வந்துள்ள துரித வளர்ச்சியின் விளைவாகவே, ஆசிய வளர்முக நாடுகளின் தாக்குப் பிடிக்கும் திறன் பெருமளவுக்கு உருவாகியுள்ளதென்று கூறலாம்.

ஆசிய வர்த்தகத்திலும் பொருளா தார அபிவிருத்தியிலும் சீனப் பொருளாதார பிரதேசத்தின் முக்கியத்துவம் அடுத்து வரும் வருடங் களில் மேலும் உயர்வானதாக இருந்து வரமுடியும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தப் பிரதேசம் 1990களின்போது உலகிலேயே ஆகக் கூடிய பொருளாதார வளர்ச்சி விகிதத்தை– ஆண்டொன்றுக்கு 7.8 சதவிகிதத்தைக்– கொண்டிருக்கும் என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் வெளியீடு உத்தியோகபூர்வ செலாவணி விகிதத்துக்கூடாக மதிப்பிடப்படாது, பொதுவான சர்வதேச விலைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டால் இப்பிரதேசம் ஜேர்மனியையும் ஜப்பா னையும் தாண்டிச் சென்று, 2002 அளவில் ஐக்கிய அமெரிக்காவை எட்டிப் பிடித்து விடும். தற்போதைய மட்டங்களில் அது தொடர்ந்தும் இறக்குமதிகளை மேற்கொண்டு வருமேயானால், அதன் இறக்குமதி மட்டம் 2002ஆம் ஆண்டளவில் ஜப்பானின் அளவையும் மிஞ்சிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, சீனா, ஹொங்கொங் மற்றும் தாய்வான் மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கிய சீன பொருளாதார பிரதேசம் உலகளாவிய பொருளாதாரத்தின் நான்காவது வளர்ச்சிமுனையாக உருவாகி வர முடியும். (வட அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் மற்றும் ஜப்பான் என்பன ஏனைய மூன்று வளர்ச்சி முனைக ளுமாகும்). சீனா, ஹொங்கொங் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் பொருளா தார மந்தத்துக்கு மத்தியிலும் கூட 1991-92 தமது வளர்ச்சியை துரிதப்படுத்திக் கொண்டுள்ளன. இது, பொருளாதார மந்தத்தை எதிர்த்து நின்று தாக்குப்பிடிக்கக் கூடிய இப்பிராந்தியத்தின் திறனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. 1989-90 மற்றும் 1991-92 ஆகிய காலப்பிரிவுகளுக் கிடையில் சீனாவின் சராசரி வருடாந்த வளர்ச்சி 4.2 சதவிகிதத்திலிருந்து 10.3 சதவிகிதமாகவும், ஹொங்கொங்கின் வளர்ச்சி 3.0 சதவிகிதத்திலிருந்து 5.1 சதவிகிதமாகவும், தாய்வானின் வளர்ச்சி 5 சதவிகிதத்திலிருந்து 7.0 சதவிகித மாகவும் உயர்ந்து காணப்பட்டது. சீனா மற்றும் ஹொங்கொங் என்பவற்றை பொறுத்தவரையில், இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் ஆகிய இரண்டினதும் வளர்ச்சி விகிதங்கள் உயர்வாக இருந்தன. பொருளாதார மந்தம் இடம்பெற்ற காலகட்டத்தின் போது தனது பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்திக்கொண்ட ஆசியாவின் மற்ற ஒரேயொரு வளர்முக நாடு கொரியக் குடியரசாகும். சீனா 1988 – 89ல் நடைமுறைக் கணக்கில் ஒரு பற்றாக்குறையை அனுபவித்து வந்தபோதிலும் 1991ல் மிகை நிலையை எட்டியிருந்தது.

### ஏஷியன் அமைப்பு

ஏஷியன் அமைப்பின் மிக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டு வரும் இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நான்கு பொருளாதாரங்களும் 1991-92ல் கிழக்காசியாவைப் போலவே உயர் அளவிலான பொருளாதார வளர்ச்சி விகிதங்களை சாதித்திருந்தன. இந் நாடுகளின் வளர்ச்சி 6 சதவிகிதத் துக்கும் 8 சதவிகிதத்துக்கும் இடையில் காணப்பட்டது. கிழக்காசியவைப் போலன்றி இப்பிராந்தியம் பொருளா தார மந்தத்தினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. சராசரி வளர்ச்சி விகிதம் சிங்கப்பூரில் 8.8 சதவிகிதத்திலிருந்து 5.7 சதவிகித மாகவும், தாய்லாந்தில் 11.0 சதவிகிதத்திலிருந்து 7.8 சதவிகித மாகவும், மலேசியாவில் 9.3 சதவிகிதத் திலிருந்து 8.6 சதவிகிதமாகவும் இந்தோனேசியாவில் 7.3 சதவிகிதத் திலிருந்து 6.3 சதவிகிதமாகவும் வீழ்ச்சி கண்டிருந்தது. பிலிப்பைன்ஸிலேயே ஆகக்கூடிய வீழ்ச்சி– அதாவது 4.1 சதவிகிதத்திலிருந்து 0.5 சதவிகிதத் துக்கு– ஏற்பட்டிருந்தது. முக்கியமாக ஏஷியன் அமைப்பு நாடுகளின் ஏற்றுமதி பெறுமதிகளின் வளர்ச்சி விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததன் விளை வாகவே பொருளாதார வளர்ச்சி

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# பொருளாதார மந்தம்

மந்தமடைந்திருந்தது. ஓரளவுக்கு வீழ்ச்சிகள் ஏற்பட்டிருந்த போதிலும் ஏஷியன் பிராந்தியத்தின் ஏற்றுமதிகள் இன்னமும் சார்புரீதியில் உயர்வான வையாகவே இருந்து வருகின்றன என்ற உண்மை இதற்கு ஓரளவுக்குக் காரணமாகும். மேலும், பொருளாதார மந்தம் ஏஷியன் நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பாய்ச்சலை அதிகளவுக்கு பாதித்திருப்பதாகத் தெரியவில்லை. மொ வெ.நே. மு.1990 அளவிலும் பார்க்க 1991ல் உயர்வானதாக இருந்தது.

## தென்னாசியா

இதற்கு மாறாக, தென்னாசியா ஒரு மோசமான பொருளாதார செயற்பாட்டினையே காட்டி வருகின்றது. 1982–92 காலப்பிரிவின்போது அதன் சராசரி வருடாந்த வளர்ச்சி 5.2 சதவிகிதமாக மட்டுமே இருந்து வந்தது. மேலும், தென் ஆசியாவின் 1991–92 காலத்துக்கான சராசரி வருடாந்த வளர்ச்சியும் கூட கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவின் வளர்ச்சி விகிதங்களிலும் பார்க்க பெருமளவுக்கு குறைவாக இருந்தது (இந்தியா 3.5%, பங்களாதேஷ் 3.8%, இலங்கை 4.5%, பாகிஸ்தான் 6.0%) –இந்தியா, பூட்டான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 1989–90லும் பார்க்க 1991–92ல் குறைவானதாக இருந்தது. இலங்கையின் வளர்ச்சி விகிதம் 1988–89ல் 2லிருந்து 3 சதவீதம் வரையிலிருந்து 1990ல் 6.2 சதவீதமாக அதிகரித்து, 1991ல் 4.6 சதவீதமாகவும், 1992ல் 4.3 சதவீதமாகவும் காணப்பட்டது. ஏற்றுமதி வளர்ச்சி பாகிஸ்தான் தவிர்ந்த அனைத்து நாடுகளிலும் 1991ல் வீழ்ச்சி அடைந்தது. இந்தியா எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தை அனுபவித்து வந்து, 1992ல் ஓரளவுக்கு மீட்சி பெற்றுள்ளது. எனினும், இந்தியாவும் இலங்கையும் அனுபவித்த மீட்சி மிதமானதாகவே இருந்தது.

## பண்டங்களும் சந்தை வாயப்புக்களும்

தென்னாசியாவும் தென்கிழக்காசியாவும் வர்த்தகம் தொடர்பாக சந்தித்து வரும் இரண்டு பிரச்சினைகள், பண்ட விலைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும் அவற்றின் ஏற்றுமதிகள் தொடர்பாக கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் ஏதிர்நோக்க வேண்டியுள்ள வரையறைகளும் ஆகும். தென் ஆசியாவும் தென்கிழக்காசியாவும் ஏற்றுமதி அக்கறை கொண்டுள்ள முதல் நிலைப் பண்டங்கள் அனைத்தும் சமீப காலத்தில் வீழ்ச்சிகளை அனுபவித்து வந்துள்ளன. ஆசியாவின் சில தெரிவு செய்யப்பட்ட வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகள் பிரதான கைத்தொழில் நாடுகளின் சந்தைகளில் எதிர்கொண்டு வரும தீர்வை மற்றும் தீர்வையல்லாத தடைகளை அட்டவணை 3 எடுத்துக்காட்டுகிறது.

## கடன் சுமை

ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களுக்கு மாறாக. ஆசியா அதன் வெளிக் கடன்களை திருப்பிச் செலுத்துவதில் சிறிதளவுக்கு மட்டுமே சிரமங்களை எதிர்கொண்டிருந்தது. இதன் காரணமாக, 1980களின் கடன் நெருக்கடியின் நெருக்குதல்களிலிருந்து அது தப்பிக் கொள்வது சாத்தியமாயிற்று. தென்னாசிய நாடுகள், சீனா மற்றும் இந்தோனேஷிய போன்ற நாடுகளை உள்ளடக்கிய அனைத்து குறைவருமான நாடுகளும் கடன் சேவைப் பிரச்சினைகளை தவிர்த்துக் கொண்டன. அவை மிதமிஞ்சிய அளவில் கடன்பட்டிருக்கவில்லை; அதனால் அவற்றின கடன் சேவை விகிதங்கள் குறைந்த மட்டங்களில் நிலவி வந்தன. கொரியக் குடியரசு, மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற ஆசியாவின் நடுத்தர வருமான நாடுகளும் வளர்ச்சியை நோக்கிய திறந்த பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி, தமது பொருளாதாரங்களை சீராக்கம் செய்து கொண்டதன் மூலம் கடன் சேவைக் கொடுப்பனவுச் சிரமங்களிலிருந்து தப்பிக் கொண்டன. பிலிப்பைன்ஸ் மட்டுமே இத்தகைய கொள்கைகளை பின்பற்ற தவறியிருந்த நாடாக இருந்தது. அது கடன் சேவை நெருக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன், கடன் குறைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட வேண்டியிருந்தது. கடன் நெருக்கடி ஆக உச்ச மட்டத்தில்

அட்டவணை 2

பண்ட விலைகள் – அமெரிக்க டொலரில்

| | பண்டம் | அலகு | 1990 | 1992 | 1993 ஜூன் |
|---|---|---|---|---|---|
| 1. | அரிசி | தொன் | 315 | 315 | 250 |
| 2. | சோளம் | புசல் | 2.76 | 2.45 | 2.08 |
| 3. | கோதுமை | புசல் | 3.22 | 3.52 | 2.74 |
| 4. | எண்ணெய் | பீப்பாய் | 15.70 | 21.12 | 17.30 |
| 5. | பிளாட்டினம் | திராய் அவு. | 476 | 370 | 376 |
| 6. | தங்கம் | திராய் அவு. | 347 | 342 | 368 |
| 7. | வெள்ளி | திராய் அவு. | 4.79 | 4.12 | 4.29 |
| 8. | தகரம் | தொன் | 6155 | 6575 | 5050 |
| 9. | வெண்கலம் | தொன் | 2575 | 2278 | 1839 |
| 10. | அலுமினியம் | இறாத். | 0.74 | 0.59 | 0.55 |
| 11. | நிக்கல் | தொன் | 8550 | 7105 | 5541 |
| 12. | துத்தநாகம் | தொன் | 1678 | 1379 | 919 |
| 13. | ஈயம் | தொன் | 827 | 542 | 392 |
| 14. | கம்பளி | இறாத். | 2.58 | 2.20 | 1.40 |
| 15. | பருத்தி | இறாத். | 0.77 | 0.59 | 0.54 |
| 16. | சணல் | தொன் | 410 | 310 | 260 |
| 17. | இறப்பர் | இறாத். | 0.46 | 0.47 | 0.44 |
| 18. | சீனி | இறாத். | 0.13 | 0.11 | 0.10 |
| 19. | தேங். எண்ணெய் | இறாத். | 0.16 | 0.29 | 0.21 |
| 20. | பனையெண்ணெய் | இறாத். | 0.15 | 0.22 | 0.21 |
| 21. | சோயா அவரை | புசல் | 5.76 | 5.89 | 5.79 |
| 22. | தேயிலை | இறாத். | 0.82 | 0.92 | 0.84 |
| 23. | கோப்பி | இறாத். | 0.77 | 0.48 | 0.52 |
| 24. | கொக்கோ | தொன் | 1393 | 1047 | 1145 |
| 25. | வெட்டுமரம் | 1000 பலகை அடி | 202 | 223 | 242 |

ஆதாரம்: "ஏஷியா வீக்", ஜூன் 30, 1993

நிலவிவந்த 1986லும் கூட, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் விகிதம் 24 சதவிகிதமாகவும், தென் ஆசியாவின் விகிதம் 30 சதவிகிதமாகவும் இருந்து வந்தது. இலத்தீன் அமெரிக்காவின் 44 சத விகிதத்துடன் இதனை ஒப்பிட்டு நோக்க வேண்டும்.

ஆசியாவின் வெளிநாட்டுக் கடன் அண்மைய வருடங்களில் உயர்ந்துள்ளது. ஆனால், அதன் கடன் சேவை விகிதம் வீழ்ச்சி கண்டு வந்துள்ளது போல் தெரிகிறது. 1989க்கும் 1991க்கும் இடையில் மொத்த தேசிய உற்பத்தி தொடர்பான வெளிநாட்டுக் கடனின் விகிதம் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவைப் பொறுத்தவரையில், 92.82 சதவிகிதத்திலிருந்து 96.9 சதவிகிதமாக அதிகரித்திருந்ததுடன், தென் ஆசியாவின் விகிதம் 29.1 ஒரு சதவிகிதத்திலிருந்து 36.3 சதவிகிதமாக அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், கடன்கள் மீதான தேறிய மாற்றல்கள் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவைப் பொறுத்தவரையில் 1990-92ல் சாதக மான நியதிகளில் காணப்பட்டன. பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதியுடனான கடன் சேவைக் கொடுப்பனவு விகிதம் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் 16.5 சதவிகிதத்திலிருந்து 13.3 சதவிகிதமக வீழ்ச்சியடைந்திருந்தது.

கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் 1986 தொடக்கம் 1988 வரையில் எதிர்மறையாக இருந்த மூலவளங்களின் கூட்டு மொத்த தேறிய மாற்றல், அதன் பின்னர், சாதகமானதாக மாற்றமடைந்தது. இது 1989ல் 270 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 1991ல் 1400 கோடி அமெரிக்க டொலர்களாகவும், 1992ல் 1630 கோடி அமெரிக்க டொலர்களாகவும் அதிகரித் திருந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட காலக் கடன்கள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடு என்பவற்றில் ஏற்பட்டிருந்த கணிசமான அளவிலான அதிகரிப்பின் விளைவாகவே பெருமளவுக்கு இந்நிலைமை தோன்றியிருந்தது. கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் 1980ல் 130 கோடி டொலர்களாக (அல்லது தேறிய மூலவளப்பாய்ச்சலில் 10 சதவீதமாக) மட்டுமிருந்து வந்த வெ. நே. மு. 1991ல் 1300 கோடி அமெரிக்க டொலர் (அல்லது தேறிய மூலவளப் பாய்ச்சலில் 41 சதவீதமாக) அதிகரித்து இருந்தது. மறுபுறத்தில், தென் ஆசியாவில் சுமார் 6 வருட காலம் தேறிய மூலவள மாற்றல்கள் ஒரே மட்டத்திலேயே இருந்து வந்துள்ளன. இக்காலகட்டதின் போது நீண்ட காலக் கடன்களும் அதேபோல வெ.நே. முதலீடும் தேக்கமுற்று இருந்தமையே இதற்கான காரணமாகும்.

### பெருகிவரும் வருமான ஏற்றத்தாழ்வு

கிழக்கு மற்றும் தென்கிழக்காசியாவில் . ஏற்பட்டு வந்துள்ள துரிதமான பொருளாதார வளர்ச்சி, அந்த நாடுகளில் வறுமையை ஓரளவுக்கு குறைத்து விடுவதில் வெற்றி கண்டுள்ளது. இந்தோனேஷியாவில் குடித்தொகையினரில் வறுமையில் வாழ்ந்து வருவோர் அளவு 1970 களில் 60 சதவிகிதமாக இருந்து, 1990 களின் தொடக்கத்தில் 15 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இது மலேசியாவில் 1985ல் 20.7 சதவிகிதமாக இருந்து, 1990ல் 17.1 சதவிகிதமாகவும், தாய்லாந்தில் 30 சதவிகிதமாக இருந்து 23 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. சீனாவிலும் கூட வறியோர் விகிதத்தில் தீவிரமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. எனினும், தென்னாசியாவைப் பொறுத்தவரையில் வறுமையில் வாழ்பவர்களின் எண்ணிக்கை 1985ல் 53 கோடியாக இருந்து 1990ல் 56 கோடியாக அதிகரித்திருந்தது.

அதேவேளையில், துரித பொருளாதார வளர்ச்சி வருமான ஏற்றத்தாழ்வுகளை மேலும் விரிவடையச் செய்துள்ளது. ஒரு சிலரின் கைகளில் வருமானமும் செல்வமும் ஒன்று திரண்டு வருவதனால் இந்நிலைமை தோன்றியுள்ளது. எனவே, 1988-90 காலப்பிரிவில் வருமானம் உழைப்பவர்களில் ஆகக்கீழ் மட்டத்தில் இருந்த 20 சதவிகிதத்தினர் சீனா, ஹொங்கொங், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் மொத்த வருமானத்தில்5-6 சதவீதத்தையே பெற்று வந்தார்கள். அதேவேளையில், உயர் வருமானப்பிரிவினர் மொத்த வருமானத்தில் 40-50 சதவீதத்தைப் பெற்றனர். பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் குறைந்த வருமானப் பிரிவில் இருந்து வந்த 20 சதவிகிதத்தினர் மொத்த வருமானத்தில் 8-9 சதவீதத்தைப் பெற்றனர். உயர் வருமானப் பிரிவில் இருந்த 20 சதவீதத்தினர் மொத்த வருமானத்தில் 40 சதவீத்தைப் பெற்றனர். இலங்கை மட்டும் இதற்கு விதிவிலக்காகும். இலங்கையில் 1985-86ல் மிக மோசமான வருமான ஏற்றத்தாழ்வு நிலவிவந்தது. வருமானம் உழைப்பவர்களில் மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்த 20 சதவிகிதத்தினர் மொத்த வருமானத்தில் 4.9 சதவீதத்தை மட்டுமே பெற்றனர். ஆக உயர் மட்டத்தில் இருந்த 20 சதவீதத்தினர் மொத்த வருமானத்தில் 56.2 சதவீதத்தை அனுபவித்து வந்தனர்.

## பொருளாதார மந்தம்

### தென்னாசியா

பல காரணிகளின் சேர்க்கையின் விளைவாக தென்னாசியா நடுத்தரமான ஒரு செயற்பாட்டை காட்டி வந்துள்ளது. முதலில், தென்னாசியாவின் அனைத்து நாடுகளும் நிறுவன அமைப்புக்களை கட்டியெழுப்புதல், கொள்கைத் தொகுதியை வகுத்துக் கொள்ளல், அமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றை தாராளமயமாக்கல், பொதுத் துறையின் அளவைக் குறைத்தல், சேமிப்புக்களை அதிகரித்து, வெளிநாட்டு மூலதனத்தை பயன்படுத்துதல் ஆகிய அனைத்து விடயங்களிலும் மிகவும் மெதுவாகவே செயற்பட்டு வந்துள்ளன. இப்பொழுது அந்நாடுகள், தவிர்க்க முடியாத நிலையில், அத்தகைய சீராக்கங்களை மேற்கொண்டு வருகின்றன. இரண்டாவதாக, பெரும்பாலான தென்னாசிய நாடுகள் தமது ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் கணிசமான பாகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இன்னமும் முதல்நிலைப் பண்டங்களின் ஏற்றுமதிகளிலேயே தங்கியுள்ளன. சில வருடங்களாக இப்பண்டங்களின் விலைகள் சாதகமற்றவையாக இருந்து வந்துள்ளன. மூன்றாவதாக, அவற்றின் பிராந்தியத்துக்கு இடையிலான வர்த்தகம் வரையறுக்கப்பட்டதாக இருந்து வருகின்றது. 1992ல் அவற்றின் மொத்த ஏற்றுமதிகளில் 17.1 சதவீதம் மட்டுமே ஆசிய பிராந்தியத்துக்குள் விற்பனை செய்யப்பட்டது. இதன் விளைவாக, இந்நாடுகள் கைத்தொழில் நாடுகளில் நிலவிவரும் பொருளாதார மந்தத்தினால் எளிதில் ஊறுபடத்தக்க நிலையில் இருந்து வருகின்றன. கிழக்கு மற்றும் தென் கிழக்காசியாவின் அளவுக்கு தாக்குப் பிடிக்கும் திறன் இந்நாடுகளில் காணப்படவில்லை. நான்காவதாக, சேமிப்புக்களும் முதலீட்டு மட்டங்களும் குறைவாக உள்ளன. (பிலிப்பைன்ஸ் தவிர்ந்த) தென்கிழக்கா

## பொருளாதார மந்தம்

சியப் பிராந்தியங்களில் சேமிப்புக்களும் முதலீடும் மொ.உ.உ. யின் 30-40 சதவீதமாக இருந்து வரும் அதே வேளையில், தென்னாசிய நாடுகளில் இது 5-25 சதவீதம் வரையிலேயே காணப்படுகிறது.

கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஊழியம் மற்றும் மூலதனம் என்பவற்றின் திறன் அதிகரித்து வந்திருப்பதனாலேயே துரித பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு கட்டற்ற வர்த்தகம் மற்றும் முதலீடு என்பனவும் கல்வி மட்டம் மற்றும் ஊழியர் படையின் திறன்கள் என்பன அதிகரித்திருந்தமையும் பங்களிப்புச் செய்திருந்தன. திறந்த பொருளாதாரக் கொள்கைகள் புதிய ஏற்றுமதி வாய்ப்புக்களை உருவாக்கியதன் மூலம் மூலதனத்தையும் ஊழியத்தினையும் பெருமளவுக்கு உற்பத்தி ஆற்றல் கொண்ட தொழில் துறைகளை நோக்கி நகர்த்திச் சென்றன; உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் இறக்குமதிக்கு இடமளித்தன; ஏற்றுமதி கைத்தொழில்களின் போட்டித்திறனை உயர்த்துவதற்காக இறக்குமதிப் பொருட்களிலிருந்து போட்டியை எடுத்து வந்தன. தொழில் முனைவோர் புதிய உற்பத்திகள், உற்பத்தி முறைகள் மற்றும் முகாமைத் திறன்கள் என்பவற்றுடன் இணைந்து செல்வதற்கு இது வாய்ப்பினை அளித்தது. சர்வதேச சந்தை களில் தொடர்ந்தும் போட்டித்திற னுடன் நிலைத்து வருவதற்கு ஊழியர் படையினரின் கல்வி மற்றும் திறன்கள் என்பவற்றை தொடர்ச்சியாக விருத்தி செய்து வருவது அவசியமாகும். நன்கு கல்வி கற்றுள்ள ஊழியர் படை, தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை நிறுவனங்கள் உடனடியாக உறிஞ்சி, அவற்றுக்கு ஏற்ற விதத்தில் அனுசரித்துச் செல்வதற்கு உதவுகின்றது.

தென்னாசியாவின் மொத்த காரணி உற்பத்தித் திறன் மிக மெதுவாகவே வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. காலாவதியான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதும், ஊழியர் படையின் கல்வி மற்றும் திறன்கள் என்பன குறைந்த மட்டத்தில் நிலவி வருவதுமே இதற்கான காரணங்களாகும். குறிப்பாக, இந்தியாவின் பழம் பாணியிலான தொழில்நுட்பம் அந்நாட்டின் ஏற்றுமதிகளின் போட்டித்திறனை பெருமளவுக்கு குறைவடையச் செய்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்பொழுது அந்நாடு வெ.நே. முதலீட்டுக்காகக் கதவுகளை திறந்து விட்டிருப்பதுடன், அதன் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்த இருக்கின்றது. இந்தியாவின் ஊழியச் செலவுகள் குறைவானவையாக இருந்து வந்தபோதிலும், அந்நாடு கொரியக் குடியரசிலும் பார்க்க கூடிய செலவில் உருக்கினை உற்பத்தி செய்து கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. கல்வி மற்றும் திறன்கள் என்பவற்றில் காணப்படும் மிகத் தாழ்வான மட்டங்களை வயது முதிர்ந்தோர் எழுத்தறிவு விகிதங்கள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி வருகின்றன. எழுத்தறிவு கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 75 சதவிகிதத்துக்கும் கூடுதலாக இருந்து வரும் அதேவேளையில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இது 50 சதவிகிதத்துக்கும் குறைவாகவே உள்ளது. கொரியக் குடியரசில் விஞ்ஞானிகளும் தொழில் நுட்பவியலாளர்களும் தலா 1000 பேருக்கு 47.3 பேராக இருந்து வருவதுடன், இந்தியாவில் இவர்கள் 3.6 பேர்களாகவே உள்ளனர்.

கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் துரித வளர்ச்சிக்கு பெருமளவுக்கு பங்களிப்புச் செய்துவரும் வெ.நே.மு., தென் ஆசியாவில் வரையறுக்கப்பட்ட ஒரு பங்கினை மட்டுமே வகித்து வருகின்றது. உதாரணமாக, 1991ல் தென்னாசியா மீதான மொத்த வெ.நே.மு. சுமார் 56.4 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது ஏஷியன் அமைப்பு நாடுகளில் 1021 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், சீனாவில் மட்டும் 434.4 கோடி டொலர்களாக காணப்பட்டது. பாகிஸ்தானில் வெ.நே.மு 26.1 கோடி டொலர்களாகவும், இலங்கையில் 10 கோடி டொலர்களாகவும், பங்களாதேஷில் 14 இலட்சம் டொலர்களாகவும் இருந்து வந்தது. வெ.நே.மு. பௌதீக மூலதன ஆக்கத்தை ஊக்குவிப்பதுடன், வெளிநாட்டு நிதியையும் தொழில்நுட்ப இடமாற்றத்தையும் எடுத்து வந்து, முகாமைத் திறன்களை விருத்தி செய்கின்றது. அத்துடன், ஏற்றுமதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்து, உள்ளூர் உற்பத்தித் திறனை தூண்டிவிடுகின்றது. ஏற்றுமதி நோக்கிலான பொருள் உற்பத்திக் கைத்தொழில்களை உருவாக்குவதன் மூலம் அவை புதிய ஏற்றுமதிப் பொருட்களை உருவாக்கி யுள்ளன. இவை கிழக்கு மற்றும் தென் கிழக்க ஆசிய பொருளாதாரங்களில் துரித அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்துள்ளன.

ஜப்பான், ஆசியா மீதான முன்னணி தனியொரு நேரடி முதலீட்டு நாடாக இருந்து வருகின்றது. உதாரணமாக, 1985-88 காலப்பிரிவில் ஹொங்கொங், கொரிய குடியரசு மற்றும் தாய்வான் மாகாணம் ஆகியவற்றில் இடப்பட்டிருந்த மொத்த வெ.நே.முதலீட்டின் 37 சதவிகிதத்துக்கும், இந்தோனேஷியா மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய ஏஷியன் அமைப்பு நாடுகளின் மொத்த வெ. நே. முதலீட்டின் 22 சதவிகிதத்துக்கும் ஜப்பான் பொறுப்பாக இருந்தது. புதிதாக கைத்தொழில்மயமாகிக் கொண்டுவரும் கொரியக் குடியரசு, சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் தாய்வான் ஆகிய நான்கு பொருளாதாரங்களும் சமீப வருடங்களில் ஆசியாவில் முக்கிய முதலீட்டு நாடுகளாக உருவாகி வந்துள்ளன. இந்த நாடுகளில் ஒன்றான ஹொங்கொங் மட்டும் சீனாவின் மொத்த வெ.நே.மு.ன் 62 சதவிகிதத்துக்குப் பொறுப்பாக இருந்தது. ஜப்பானும் புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகளும் 1980களின் போது தென்னாசியா மீது சிறிதளவுக்கே ஆர்வம் காட்டி வந்தன. 1985-88 காலப் பிரிவில், தென்னாசியாவிலான ஜப்பானின் வெ.நே. மு. சுமார் 2 சதவீதமாக மட்டுமே இருந்து வந்தது.

ஜப்பான் அதன் ஊழியச் செறிவு மிகுந்த ஏற்றுமதிக் கைத்தொழில்களை புதிதாக கைத்தொழில் மயமாகிவரும் நாடுகள் என்றழைக்கப்பட்ட (கொரியக் கடியரசு, சிங்கப்பூர், ஹொங்கொங் மறறும் தாய்வான மாகாணம் போன்ற) நாடுகளில் மீள ஸ்தாபிதமாக்க தொடங்கியது. ஊழியச் செலவு அதிகரித்து வந்தமையினாலும், அதனை யடுத்த Stct யென் பெறுமதி ஏற்றத்தினால் உலகச் சந்தைகளில் ஜப்பானிய ஏற்றுமதிகளின் போட்டித் திறன் வீழ்ச்சியடைந்து வந்தமையினாலுமே இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனினும், துரித பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த விதத்தில், புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகளிலும் ஊழியச் செலவுகள் உயரத் தொடங்கின. இதன் காரணமாக,

( 24 பக்கம் பார்க்க)

# வறுமையும் நகர்ப்புற வறியோரின் குணாம்சங்களும்

கலாநிதி ஆர். எம். கே. ரத்நாயக்க

பணிப்பாளர், போஷாக்கு மற்றும் வறுமை கொள்கைப் பிரிவு, கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு

## அறிமுகம்

வறுமை என்பது, ஓர் அடிப்படை முறையில் நோக்கும் பொழுது சார்பு ரீதியான மற்றும் அகவயமான ஒரு காட்சியுண்மையாக இருந்து வருகின்றது. வறுமை பன்முகத் தன்மையைக் கொண்டதாக இருந்து வருவதானால், பிரதேசங்கள், கலாச்சாரங்கள், மனப்பாங்குகள் மற்றும் மக்கள் பிரிவினர் என்பவற்றுக்கு ஏற்றவிதத்தில் அதனை வெவ்வேறு விதமாக நோக்க முடியும். வறுமை பல பரிமாணங்களைக் கொண்டதாக இருந்துவந்த போதிலும், இது தொடர்பான பெரும்பாலான எழுத்தாக்கங்கள் பணமில்லாத ஏழ்மை நிலை தொடர்பான பிரச்சினையை மட்டுமே கவனத்தில் எடுத்து வருகின்றன; கண்ணியமான ஒரு வாழ்க்கைக்கு அவசியமானவை எனக் கருதப்பட்டு வரும் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக தனிநபர்கள் அல்லது குடும்பங்கள் போதிய மூலவளங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையே வறுமையென பொதுவாக நோக்கப்பட்டு வருகிறது. வருமானம் இல்லாத நிலை வறுமையின் ஒரு முக்கிய அம்சமாக இருந்து வந்தபோதிலும், அது ஏழ்மை நிலை தொடர்பான ஓரளவு விளக்கத்தினை மட்டுமே தருகிறது.

வறுமை என்பது, சில அடிப்படை திறன்கள் தொடர்பான கருமங்களின் முடக்கமாகவே நோக்கப்பட்டு வருகின்றது - அதாவது இந்தக் கருமங்களின் ஆகக் குறைந்த பட்ச ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டங்களை சாதித்துக் கொள்வதற்கு ஒருவருக்கு சந்தர்ப்பம் கிடைக்காதிருத்தல் (சென்இ1992). நல்ல உணவினைப் பெறுதல், போதியளவில் ஆடைகளை அணிதல், இருப்பிட வசதிகளைப் பெறுதல் போன்ற அடிப்படை பௌதீக வசதிகளிலிருந்து, சமூக வாழ்க்கையில் பங்கேற்றல், கூச்சமின்றி பகிரங்கமாக தோன்றுவதற்கான ஆற்றல் போன்ற மிகச் சிக்கலான சமூக சாதனைகள் வரையில் இக்கருமங்கள் வேறுபட்டுச் செல்கின்றன. தனிநபர் வருமானத்தினை கருமமாற்றுவதற்கான திறன்களாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம், வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பல்வேறு சூழ்நிலைகளிலும் வாழும் சூழல் போன்ற வெளிக் காரணிகளிலும் தங்கியுள்ளது.

வறுமை என்பது முனைப்பு மிகுந்த ஒரு நிலைமையாக இருந்து வருகின்றது; ஒரு சில குடும்பங்கள் தமது வாழ்க்கைச் சூழலின் போது குறைந்தது ஒரு தடைவையாகிலும் வறுமைக் கோட்டைக் கடக்க வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். எனவே, வறுமை தொடர்பான எந்த ஒரு ஆய்வும், வறியவர்களை வறியவர் அல்லாதவர்களிடமிருந்து பிரித்து வேறுபடுத்திக் காட்டும் தராதரம் அல்லது தராதரங்கள் தொகுதியின் வரைவிலக்கணமொன்றுடன் சம்பந்தப்பட்டதாக இருந்து வருகின்றது.

வறுமையின் தோற்றம், தமது குடும்ப உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களில் சொந்த சொத்து அடித்தளமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முயன்றுவரும் குடும்பங்கிடையே அல்லது வயோதிப பருவத்தில் வறியோராக மாறுவோரிடையே பொதுவாக இடம் பெறறு வருகின்றது. வறியவர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படும் பட்சத்தில், அவர்கள், பொருளாதார நடவடிக்கைகளின் தேசியப் பெருவாழ்வுடன் ஒருங்கிணைந்து கொள்வதற்கு முயற்சிப்பார்கள். இதனை முடிவுக்கட்ட வறுமை என குறிப்பிட முடியும். ஏனையவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் வறியவர்களாக இருந்து வரக்கூடும்; இவர்களை நாட்பட்ட வறியவர்கள் என இனங்காணலாம். இந்த இரண்டாவது பிரிவினர் குருடர், மனவளர்ச்சி குன்றியோர் போன்ற உடல் ஊனமுற்றவர்களைக் கொண்டிருக்கும் தனிநபர்களாக அல்லது குடும்பங்களாக இருக்கமுடியும். மிகக் கடுமையான ஏழ்மை நிலையில் இருந்து வரும் மூன்றாவது பிரிவினர் மிகச் சிறந்த சந்தை நிலைமைகள் நிலவி வந்தாலும் கூட, தொடர்ந்தும் அவ்விதமே இருந்து வருவார்கள்.

குடும்ப அல்லது தனிநபர் மட்டத்தில் ஏழ்மையை அல்லது வறுமையை அளவிடுவதற்கு பல அணுகுமுறைகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. அடிப்படைத் தேவைகள் குறித்த அணுகுமுறை, வருமான அளவுகோல் மற்றும் போஷாக்கு நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வறுமைக்கோடு போன்றவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. ஆனால், இந்த முறைகள் அனைத்தும் ஏழ்மை மட்டத்தை இனங்கண்டு கொள்வதில் ஏதோ ஒரு பிரச்சினையை எதிர்நோக்கியே வருகின்றன.

வறுமைக் கோட்டினை மதிப்பீடு செய்வதற்கான பாரம்பரிய முறையியலான நடத்தை அணுகுமுறை தலைக்குரிய கலோரி நுகர்வு மட்டங்களை கணக்கெடுக்கும்; அத்துடன், சிபார்சு செய்யப்பட்டுள்ள உணவு அளவுகளின் அடிப்படையில், போதிய கலோரி மட்டத்தை அடைவதற்கு அவசியமான தலைகக்குரிய செலவு அளவினையும் அது கணக்கீடு செய்யும். இது இப்பொழுது பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது; நுகர்வுக்கான ஒரு பதலீடாக வருமான மட்டத்தை உபயோகித்து வருவதானது சில சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. கலோரி உள்ளீடு அளவு அல்லது

கொழும்பு தமிழ்ச் சங்கம்

தேவைப்பாடுகள் என்பன உயிரியல் மற்றும் நடத்தை ரீதியிலான அடிப் படையில் ஆளுக்கு ஆள் வேறுபட்டதாக காணப்படுகின்றது. போஷணைத் தேவைகளும் கூட சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது.

ஒரு குடும்பத்தின் ஆகக்குறைந்த பட்ச போஷணை மட்டத்தை திருப்தி செய்யும் ஆகக்குறைந்த செலவிலான உணவுக் கூடை முறையைப் பயன் படுத்தி பெற்றுக்கொள்ளப்படும் மாதமொன்றுக்கான தலைக்குரிய வறுமை வருமானம் 1989ன் விலைகளில் ரூ. 281 ஆக இருந்தது. 1989-1992 காலப்பிரிவின்போது, மொத்த விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்டு வந் துள்ள மாற்றங்களை உபயோகித்து இது சீராக்கம் செய்யப்பட்டது. இந்த சீராக்கம் செய்யப்பட்ட தலைக்குரிய வறுமை வருமானம் 1992ல் ரூ. 377.06 ஆக இருந்தது. இது 5 நபர்களைக் கொண்ட குடும்பமொன்றின் ரூ.1885 மாத வருமானத்துக்கு சமமானதாகும். எனவே, இந்த நிலையில், வறியோர் என்பவர்கள், "சுறுசுறுப்பான, ஆராக்கியமான வாழ்க்கையென்றை நடத்துவதற்கு தம்மை இயலச் செய்வதற்காக பாதுகாப்பான நுகர்வு மட்டமொன்றை உறுதிப்படுத்தக் கூடிய செலவுகளை ஒதுக்க முடியாதவர்கள்" என வரைவிலக்கணம் செய்யப் பட்டுள்ளனர்.

நகரப் புறங்களிலும் அதேபோல கிராமப் புறங்களிலும் வாழ்ந்து வரும் வறிய மக்கள் பெரும்பாலான உணவுப் பொருட்களுக்காக ஒரே மாதிரியான விலைகளைச் செலுத்தி வந்த போதிலும், நகர வறியோர், வேறு சில அத்தியாவசிய சேவைகளுக்கு உயர்ந்த விலைகளைச் செலுத்த வேண்டியவர் களாக இருந்து வருகின்றனர். எனவே, கிராமிய வறியோரின் உணவு மீதான செலவு 80 சதவீதமாக இருந்து வரும் அதே வேளையில், நகர வறியோரைப் பொறுத்தவரையில் இது 70 சத விகிதமாக உள்ளது. எனவே, நகர்ப்புறம் தொடர்பான வறுமைக்கோடு, பொருளாதாரத்தின் ஏனைய இரு துறைகளிலும்பார்க்க சற்று உயர்வானதாக இருந்து வருகின்றது.

**"வறியோரின்" குணாம்சங்கள்**

வறியவர்கள் ஒரே வகைமாதிரியைச் சேர்ந்த ஒரு குழுவாக இருக்கவில்லை. வறுமை தோன்றும் சூழ்நிலைகள் வெவ்வேறு விதமாக இருந்து வருகின் றன. பெரும்பாலான வறிய குடும்பங் களில் சில குணாம்சங்களை பொது வாக அவதானிக்கக் கூடியதாக இருந்த போதிலும், ஏனைய குணாம்சங்கள் வேறு சில காரணிகளின் அடிப் படையில் பரந்த அளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. குடும்பத்தின் அளவு, குடும்ப குடிசன அமைப்பு, கல்வி மட்டம், பிரதான உழைப் பாளியின் பால் என்பன பொதுவான குணாம்சங்களாக இருந்து வருகின்றன.

பலர் தொழில்களைத் தேடி நகர்ப் புறங்களுக்க குடிபெயர்ந்துள்ளனர். நகர்ப்புறச் சேரிகளிலும் கொட்டில் குடியிருப்புக்களிலும் வாழும் மக்களில் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே நவீன மற்றும் முறைசார்ந்த துறையில் நிரந் தரமான, பாதுகாப்பான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். நகர வறியவர்களில் பெரும் பாலானவர்கள் கட்டுமான வேலைத் தளங்களிலும், தொழிற்சாலைகளிலும், சில்லறை வர்த்தகத்திலும், போக்கு வரத்துத் துறையிலும் தற்காலிக ஊழியர்களாக வேலை செய்து வருகின் றனர்.

நகர்ப்புறங்களில் வறுமை தோன்றும் சூழ்நிலைகள் சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளன. வறி யோரில் பெரும்பாலானவர்கள் நகர்ப் புறத்துக்கு அண்மையில் குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பதனையும், போதிய வருமானங்களைப் பெற முடியாத சிறு தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருவதனையும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் சான்றுகள் தெரிவிக்கின்றன. சிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடு பட்டு வரும் நகர்ப்புற வறியோரில் பெரும்பாலானவர்கள், சேரிகளில் அல் லது கொட்டில் குடியிருப்புக்களில் வசிப்பதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். தனியார் துறையின் கைத்தொழில் முயற்சிகளில் (குறிப்பாக, கொழும்பைச் சூழ அமைந்துள்ள சுதந் திர வர்த்தக வலயங்களின் ஆடைத் தொழிற்சாலைகளில்) தொழில்களைப் பெற்று நகர்ப்புறத்துக்கு புதிதாக குடிபெயர்ந்து வந்துள்ள வர்கள், ஒரு புதிய நகர வறியோர் பிரிவினராக இருந்து வருவதனையும் சான்றுகள் காட்டுகின்றன. அவர்கள் தொழில் பார்ப்பவர்களாக இருந்த போதிலும், அவர்கள் பெறும் குறைந்த அளவிலான வேதனங்கள் அவர்களை தொழில் செய்யும் ஏழைகளாக ஆக்கியுள் ளன.

நகர்ப்புறங்களுக்கு புதிதாக குடி பெயர்ந்து வரும் வறியவர்கள் வருமானம் உழைக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றார்கள். இந்த முயற்சிகள் தோல்விய டையும்போது அவர்களுடைய நிலை மேலும் மோசமடைகின்றது. புதிதாக துவக்கப்படும் சிறு தொழில் நடவடிக் கைகளில் சுமார் 90 சதவீதமானவை முதல் வருடத்திலேயே தோல்வி யடைகின்றன என்பதனை தரவுகள் காட்டுகின்றன. நகரின் ஒழுங்கு படுத்தப் படாத சிறு சந்தைகள் மெதுவாக வளர்ச்சியடைந்து வருவதனால், இந்தத்துறையில் வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் மட்டுமே கிடைக்கக் கூடியதாக உள்ளன. தொழில் வாய்ப்புக்களைத் தேடி நகர்ப் புறங்களுக்கு குடிபெயர்ந்து வருபவர் களில் பெரும்பாலானவர்கள் ஆரம்ப நாட்களில்-முக்கியமாக ஸ்திரமற்ற நிலைமைகள் காரணமாக - வறியவர் களாகின்றனர். எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் கட்டுமான வேலைத் தளங்களில் அல்லது பாதை பராமரிப்பு வேலைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, நகர வறியோர் பிரிவில், நகரச் சந்தைகளில் வெற்றிகரமான முறையில் பிரவேசிக்க முடியாது போன சமீபத்திய குடியகல்வோர், குறைந்த கூலி பெறும் கைத்தொழில்களில்

அட்டவணை 1

ஒவ்வொரு வருமானப் பிரிவினதும்
சராசரி மாதாந்த இருப்பிடச் செலவு

| | தலைக்குரிய வருமானப்பிரிவு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | முதலாவது | | 2ஆவது | | 3ஆவது | | 4ஆவது | |
| | ரூ. | % | ரூ. | % | ரூ. | % | ரூ. | % | ரூ. | % |
| நாடு முழுவதும் | 146 | 14.1 | 52 | 10.2 | 54 | 10.8 | 60 | 12.0 | 67 | 10.8 |
| நகர | 358 | 22.8 | 95 | 16.7 | 105 | 19.8 | 122 | 15.2 | 141 | 18.2 |
| கிராம | 94 | 10.6 | 45 | 9.3 | 52 | 11.4 | 51 | 8.7 | 57 | 9.6 |
| தோட்ட | 61 | 6.3 | 31 | 4.7 | 37 | 5.1 | 54 | 6.5 | 49 | 6.1 |

ஆதாரம்: தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களம்

வேலை செய்யும் தொழிலாளர்கள், சமயாசமய மற்றும் பருவகால ஊழியர்கள் மற்றும் வேலையற்றிருக்கும் கல்விகற்ற இளைஞர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். முறைசாரா துறையிலும் தனியார் துறையில் கூலிகள் குறைவாக இருக்கும் கைத் தொழில்களிலும் இலகுவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதிலும், இவற்றில் வேலை செய்பவர்கள் வறியவர்களாக இருந்து வருவது மட்டுமன்றி, தொழில் நிலைமைகளில் ஏற்படக்கூடிய எதிர்பாராத மற்றங்களினால் எளிதில் ஊறுபடத்தக்கவர்களாகவும் இருந்து வருகின்றனர். உதாரணமாக, பருவகால வேலையின்மை, வேலைத் தளங்கள் தற்காலிகமாக மூடப்படுதல் போன்றவற்றின் விளைவாக இந்தத் தொழிலாளர்கள் மேலும் வறியோர்களாக மாற்ற மடைகின்றன்றார்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாத ஏனைய பொருட்கள் என்பவற்றின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களும் வறியோர் மீது நெருக்குதல்களை எடுத்து வருகின்றன.

நகர்ப்புறங்களில் விஸ்தரிக்கப்பட்ட குடும்ப அமைப்பு முறை நிலவி வரவில்லை. இது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் கீழ் வறியோர் மிக எளிதில் பாதிக்கப்படுவதற்கு வழிகோலி விடுகின்றது. இப்பொழுது ஒரு குடும்பத்தை மட்டுமே கொண்ட வீடுகளின் எண்ணிக்கை நகரங்களில் பெருகி வருகின்றது. இத்தகைய குடும்பங்களில் பிரசவத்தின் போது, தாயினால் வேலைக்குப் போக முடியாத நிலை தோன்றுகின்றது. அதன் விளைவாக, வருமான இழப்பும் வறுமையும் தோன்றுகின்றது. விஸ்தரிக்கப்பட்ட குடும்ப அமைப்பு முறை இல்லாதிருப்பது, வீதியோரச் சிறுவர்களின் எண்ணிக்கையும், கவனிப்பாரற்ற வயோதிபர் எண்ணிக்கையும் பெருகுவதற்கு வழகோலி வருகின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பிச்சைக்காரர்களாக மாறி விடுகின்றனர்.

நகர வறுமை பெருமளவுக்கு ஒரு சார்புரீதியான பிரச்சினையாக இருந்து வருகின்றது: அதாவது, பொருளாதாரத்தின் ஏனைய (கிராம மற்றும் தோட்ட) துறைகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இங்கு குழுக்களுக்கிடையே வருமானப் பகிர்வின் ஏற்றத்தாழ்வில் ஆகக்கூடிய அளவுக்கு வேறுபாடுகள் நிலவி வருகின்றன. ஊழியர் படை மற்றும் சமூக-பொருளாதார ஆய்வு 1985/86, நகர்ப்புற வருமான உழைப்போரில் சுமார் 80

அட்டவணை 2

புடவை மற்றும் ஆடைகள் மீதான மாதாந்த சராசரி செலவு

தலைக்குரிய வருமானப் பிரிவு

| | மொத்தம் | | முதலாவது | | 2ஆவது | | 3ஆவது | | 4ஆவது | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | % | ரூ. | % | ரூ. | % | ரூ. | % | ரூ. | % |
| நாடு | | | | | | | | | | |
| முழுவதும் | 112 | 10.8 | 62 | 12.7 | 63 | 12.6 | 82 | 16.4 | 81 | 13.1 |
| நகர | 141 | 9.0 | 60 | 10.5 | 53 | 10.0 | 65 | 8.1 | 79 | 10.2 |
| கிராம | 102 | 11.4 | 62 | 12.7 | 60 | 13.0 | 81 | 13.7 | 88 | 15.0 |
| தோட்ட | 141 | 14.4 | 52 | 7.8 | 89 | 12.2 | 96 | 11.5 | 84 | 10.4 |

ஆதாரம் : தொகைமதிப்பு. புள்ளிவிவரத் திணைக்களம்

சதவீதத்தினர் நகர்ப்புறத்தில் அனைத்து வருமானம் உழைப்பவர்களினதும் சராசரி வருமானத்திலும் பார்க்க குறைந்த சராசரி வருமானத்தைப் பெற்று வருகின்றனர் என்பதனை காட்டியது. வருமான மூலங்களைப் பொறுத்த வரையில், நகர்ப்புறங்களில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த வருமானம் உழைப்பவர்கள் இருந்து வருவதே அதற்கான காரணமாக இருக்க முடியும்.

அட்டவணை 3

வறுமைப் பிரிவில் வருமானம் உழைப்போர்

| வயது தொகுதி (வருடங்கள்) | வறுமையில் இருப்போர் (சதவீதம்) |
|---|---|
| < 14 | 100 |
| 14-18 | 87 |
| 19-26 | 26 |
| 26-35 | 28 |
| 36-45 | 28 |
| 46-55 | 25 |
| > 55 | 20 |

ஆதாரம்: நுகர்வோர் நிதி ஆய்வு 1986/ 87, இலங்கை மத்திய வங்கி

பொருளாதாரத்தின் ஏனைய இரண்டு துறைகளுடனும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, நகர்ப்புற வறியே சார்புரீதில் கூடியளவு பண வருமா தைப் பெற்று வருவதை காண முடி றது. அதேவேளையில், அவர் பெற்றுக்கொள்ளும் சில சேவை க் காக உயர் விலைகளைச் செலு த வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். பணமல்லாத வகையைச் சேர்ந்த கொடுக்கல் வாங்கல்கள் மிகவும் குறைவாக இருந்து வருவதானால், நகர வறியோர், சமூகத்தில் உயிர் வாழ்வதற்கு தமக்க அத்தியாவசியமான உணவு அல்லாத பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவில் செலவுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், தலைக்குரிய வருமான

அட்டவணை 4

குடும்பங்களில் வறுமையின் பகிர்வு

இலங்கை : 1986/87

| குடும்ப அளவு | மாதிரியில் % | வறியோர் % | வறிய குடும்பங்களின் சதவீதப் பகிர்வு |
|---|---|---|---|
| 1 | 1.62 | 10.53 | 0.62 |
| 2 | 6.38 | 13.75 | 3.18 |
| 3 | 13.58 | 16.34 | 6.00 |
| 4 | 15.98 | 20.46 | 14.01 |
| 5 | 22.43 | 27.51 | 22.37 |
| 6 | 15.31 | 33.36 | 18.52 |
| 7 | 10.00 | 40.20 | 14.62 |
| 8 | 6.34 | 44.42 | 10.21 |
| 9 | 2.84 | 45.77 | 4.72 |
| 10 | 1.43 | 42.57 | 2.21 |
| > 10 | 1.20 | 35.29 | 1.54 |
| அனைத்தும் | 100.00 | 27.59 | 100.00 |

ஆதாரம்: நுகர்வோர் நிதி ஆய்வு, 1986/ 87

அடிப்படையில், மொத்தச் செலவுகளில் உணவுக்கான செலவுகளின் சதவீதம் ஏனைய இரு துறைகளிலும் வறியவர்கள் செலவிடும் தொகையை ஒத்ததாக இருந்து வருகின்றது.

நகர வறியவர்கள் தமது மாதாந்த வருமானத்தில் 15 சதவீத்துக்கும் மேற்பட்ட பாகத்தை இருப்பிடத்துக்கான செலவுகளாக ஒதுக்க வேண்டியுள்ளது. இவர்களில் ஒரு சிறு தொகையினர் மட்டுமே தமக்கென சொந்தமான வீடுகளைக் கொண்டுள்ளனர். ஆகக்குறைந்த வருமானப் பிரிவில் இருப்பவர்கள் தமக்கென ஒரு இருப்பிடத்தைப் பெற்றிருக்கவில்லை; இவர்களில் பெரும்பாலானவர்கள் நகர்ப்புறச் சேரிகளில் ஏனையவர்களுடன் இருப்பிடங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆளொருவருக்குரிய சராசரி தரை பரப்பளவு மிகவும் குறைவாக காணப்படும் சிறிய வீடுகளிலேயே நகர வறியோர் பலர் வாழ்ந்து வருகின்றனர். மொத்தப் பரப்பளவு 25 சதுர கிலோ மீட்டருக்குள் வரும் வீடுகளிலேயே இவர்களில் பெரும்பாலானவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அநேகமாக, இந்த வீடுகள் வேயப்பட்ட கூரைகளையும் களிமண்ணால் பூசப்பட்ட தரைகளையும் கொணடுள்ளன. ஒரு சில வீடுகள் மட்டுமே செங்கல்லால் கட்டப்பட்ட வீடுகளாக உள்ளன.

நகர வறியோரில் ஆக்கூடிய சதவிகிதத்தினர் பொதுக் குழாய்களிலிருந்து அல்லது பொதுக் கிணறுகளிலிருந்தே குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் உள்ளூர் அதிகார சபைகளினால் அமைக்கப்பட்டுள்ள பொது மலசல கூடங்களையே பெரும்பாலானவர்கள் உபயோகித்து வருகின்றனர்.இவர்களுடைய சமையலுக்கான முக்கிய எரிபொருள் விறகாகும். வெளிச்சம் பெறுவதற்காக பெரும்பாலானவர்கள் இன்னும் மண்ணெண்ணையிலேயே தங்கியுள்ளனர்.இவர்கள் இருப்பிட வசதிகள் மீது தமது வருமானத்தில் கூடிய பங்கினை செலவிட்டு வருவதனால் உணவல்லாத ஏனைய பொருட்கள் மீது சார்பு ரீதியாக சிறிய தொகைகளையே செலவிடக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். இதனால் வாழ்க்கைக்கு அவசியமான ஏனைய அடிப்படை வசதிகள் மீது அவர்கள் குறைவான செலவுகளை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். உதாரணமாக, கிராம மற்றும் தோட்டப்புற வறியவர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இவர்கள் எரிபொருள் மற்றும் புடவைகள் என்பவற்றின் மீது சார்புரீதியில்

அட்டவணை 5

தங்கியிருப்போர் அடிப்படையில் வறுமை
இலங்கை : 1986/87

| வயது தங்கியிருப்பு விகிதம் (%) | மாதிரியில் % | வறியோர் % | வறிய குடும்பங்களின் பகிர்வு % |
|---|---|---|---|
| 0 | 66.0 | 29.5 | 70.7 |
| 1 - 20 | 4.6 | 29.0 | 4.9 |
| 21 - 25 | 3.7 | 20.0 | 2.6 |
| 26 - 49 | 6.6 | 22.3 | 5.3 |
| 50 | 8.6 | 24.7 | 1.1 |
| 51 - 66 | 0 | 0 | 0 |
| >66 | 10. 0 | 23.2 | 8.6 |
| அனைத்தும் | 100.0 | 27.5 | 100.0 |

ஆதாரம்: நுகர்வோர் நிதி ஆய்வு, 1986/ 87

அட்டவணை 6

வறிய குடும்பங்களில் பிரதான
உழைப்பாளியின் கல்வி மட்டம்

| | | வறுமைக் கோட்டுக்குக் கீழ் |
|---|---|---|
| 1. பாடசாலை செல்லாத | - | 54.5% |
| 2. தரம் 0 - 4 சித்தி | - | 50.4% |
| 3. தரம் 5 - 9 சித்தி | - | 36.7% |
| 4. க.பொ.த. (சா.த.) சித்தி | - | 16.8% |

ஆதாரம் : சமூக, பொருளாதார ஆய்வு 1985/ 86
தொகைமதிப்பு, புள்ளிவிவர திணைக்களம்

அட்டவணை 7

பிரதான உழைப்பாளியின்கல்வி மட்டத்தின்
அடிப்படையில் வறிய குடும்பங்களின் பகிர்வு
நாடு முழுவதற்கும் - 1986/ 87

| | மொத்த மாதிரியின் % ஆக | வறியோர் % | வறியோர் குழுக்களுள் % |
|---|---|---|---|
| எழுத்தறிவற்றோர் | 9.6 | 40.47 | 14.16 |
| பாடசாலை சொல்லாதோர் எழுத்தறிவுள்ளோர் | 0.66 | 27.66 | 0.67 |
| ஆரம்ப கல்வி 1 | 37.2 | 36.44 | 49.10 |
| நடுநிலைக்கல்வி 2 | 48.5 | 20.20 | 35.50 |
| தரம் 12 சித்தி | 2.4 | 4.73 | 0.41 |
| பட்டதாரி | 1.4 | 1.93 | 0.10 |

1. கீழ்ப்பிரிவிலிருந்து தரம் 5 வரை
2. தரம் 6 இலிருந்து 10 வரையில் (அந்த தரத்தில் சித்தியடைந்தவர்களையும் உள்ளடக்கி)

ஆதாரம் : நுகர்வோர் நிதி ஆய்வு 1986/ 87

குறைந்தளவு தொகைகளை செலவிட்டு வருவதை காண முடிகின்றது.

நகர வறியவர்களில் பெரும்பாலானவர்கள் சார்புரீதியில் இள வயதுப் பிரிவினராகவும் குறைந்த அளவில் கல்வி கற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். நகர்ப்புறங்களில் வாழ்ந்து வரும் வறியவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பகுதிகளுக்குப் புதிதாக வந்தவர்களாகவும், நகர தொழில்/

சந்தைகளை அனுசரித்துச் செல்லப் பழகிக் கொள்ளும் காலகட்டத்தில் இருந்து வருகின்றார்கள் என்பதனையும் அட்டவணை 5 எடுத்துக் காட்டுகிறது.

குடும்பத்தின் அளவு வறுமையுடன் மிக நெருக்கமான முறையில் தொடர்பு கொண்டுள்ள ஒரு காரணியாக உள்ளது. அதிகளவில் தங்கியிருப் போரைக் கொண்டுள்ள பெரிய குடும்பங்கள் வறுமையில் சிக்குவதற்கு பெருமளவுக்கு சாத்தியப்பாடு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. வறிய குடும்பங்கள் குறித்த ஒரு மாதிரி ஆய்வு, இந்த குடும்பங்களில் 50 சதவீத்துக்கு மேற்பட்டவை ஆறு அல்லது அதற்கு கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டவையாக இருந்து வருகின்றன என்பதைக் காட்டியுள்ளது. வறிய குடும்பங்களில் பெரும்பாலானவை 5 தொடக்கம் 8 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. மாதிரிக்கு எடுக்கப்பட்ட குடும்பங்களில் 54 சதவீதமான குடும்பங்கள் 5 தொடக்கம் 8 வரையிலான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களாக உள்ளன.

பிரதான வருமானம் உழைப்பவரின் கல்விமட்டம் வறுமையை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது. கல்வி மட்டம் அதிகரித்து வருவதுடன் இணைந்த வகையில், வறுமைக் கோட்டுக்கு கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவதனை அட்டவணை 6 காட்டுகின்றது. குடும்பத்தின் பிரதான உழைப்பாளியின் கல்வி மட்டம் உயர்வடைந்து கொண்டு செல்வதனுடன் இணைந்து, வறுமை மட்டம் வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது என்பதனை அட்டவணை 7ல் உள்ள தரவுகளும் சுட்டிக் காட்டுகின்றன. வறுமையில் உழன்ற குடும்பங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு குடும்பங்களைச் சேர்ந்த முக்கிய வருமானம் உழைப்போர் ஆரம்பக் கல்வி மட்டத்தை தாண்டாதவர்களாகவே இருந்தனர்.

வறுமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் இடையில் நெருக்கமான ஓர் உறவு நிலவி வருவதனால், வேலையற்றவர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, தொழில் செய்பவர்கள் நல்ல நிலையில் இருந்து வருகின்றார்கள் என்று பொதுவாக கருதப்படுகிறது ஆனால் வேலையில்லாதவர்கள் அவசியமாகவே வறியவர்களாக இருந்து வரவில்லை என்பதனையும் அதேபோல தொழில் செய்பவர்கள் வசதியற்றவர்களாக இருந்து வரவில்லை என்பதனையும்

அட்டவணை 8

**பிரதான உழைப்பாளியின் தொழில் அடிப்படையில் வறுமையின் பரவல் நாடு முழுவதற்கும் - 1986/ 87**

| தொழில் வகை | வறியோர் % | வறிய குடும்பங்களின் பகிர்வு % | மொத்த மாதிரியில் % |
|---|---|---|---|
| விவசாய, கால்நடை வளர்ப்பு தொழிலாளர் | 38.17 | 25.90 | 18.72 |
| பயிரிடுவோர், விவசாயிகள் | 32.25 | 19.85 | 16.98 |
| தொழில்சார், தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகள் | 16.06 | 9.20 | 15.95 |
| விற்பனை பணியாளர் | 20.65 | 8.15 | 10.89 |
| வேறிடங்களில் குறிப்பிடப்படாத தொழிலாளர் | 43.40 | 8.30 | 5.30 |
| செங்கல் தொழிலாளர், தச்சர், கட்டுமான தொழிலாளர் | 40.54 | 7.10 | 4.80 |
| சேவைத்துறை தொழிலாளர் | 22.00 | 3.38 | 4.24 |
| இலிகிதர் மற்றும் பிரிவுகள் | 8.21 | 1.42 | 4.82 |
| போக்குவரத்து உபகரண இயக்குவோர் | 18.38 | 1.91 | 2.80 |
| கல் உடைப்போர், சுரங்கத் தொழிலாளர் | 35.11 | 1.60 | 1.33 |
| மரத் தயாரிப்பு, காகித தொழிலாளர் | 41.77 | 1.60 | 1.11 |
| இரசாயன பதப்படுத்துவோர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர் | 37.51 | 1.53 | 1.11 |
| நெய்வோர், பின்னல் வேலை செய்வோர் போன்ற பிரிவினர் | 33.33 | 1.18 | 1.00 |
| உணவு மற்றும் பானத் தொழிலாளர் | 24.77 | 1.38 | 1.54 |
| மீனவர், வேட்டைக்காரர் போன்றோர் | 20.78 | 0.82 | 1.08 |
| கால்நடை விவசாயிகள் | 32.55 | 1.40 | 1.24 |

ஆதாரம்: நுகர்வோர் நிதி ஆய்வு 1986/ 87

சான்றுகள் தெரிவிக்கின்றன. தொழில் புரிபவர்களில் பெரும்பாலானவர்கள் தமது குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்துவைக்க முடியாதவர்களாக இருந்து வருகின்றனர். குடும்பங்களில் சுமார் 90 சதவீதமானவை தமது பிரதான வருமானம் உழைப்பர்களை "வேலை செய்பவர்கள்" என வகைப்படுத்தி இருந்தமையை ஆய்வுகள் காட்டுகின்றன. வறியவர்கள் பெரும்பாலும் "தொழில்புரியும்" வறியவர்களாகவே இருந்து வருகின்றனர். மொத்த வருமானக்குழுவில் 10 சதவீதமான குடும்பங்கள் தமது பிரதான உழைப்பாளியை "வேலையில்லாதவர்" என்ற வகைக்குள் அடக்கியிருந்தன.

தேசிய மாதிரி ஆய்வின் தரவுகளை கவனத்தில் எடுக்கும்பொழுது, பிரதான வருமானம்உழைப்பவரின் திருமண அந்தஸ்துக்கும் வறுமைக்குமிடையே தொடர்பு நிலவி வரவில்லை என்பதனை காண முடிகிறது. எனினும், வறியவர்களிடையே நடாத்தப்பட்ட சிறு சிறு மாதிரி ஆய்வுகள், திருமண அந்தஸ்து வறுமையின் ஒரு முக்கிய நிர்ணய காரணியாக இருந்து வருகின்றது என்பதனை காட்டியுள்ளன. மேலும், விதவைகள், கணவனைப்

பிரிந்து வாழ்பவர்கள் மற்றும் பெண்களை குடும்பத்த தலைவிகளாகக் கொண்டுள்ள குடும்பங்கள் என்பவற்றிலும் வறுமை உயர் அளவில் நிலவி வருகின்றது என்பதனை தரவுகள் காட்டுகின்றன. மொத்தக் குடும்பங்களில் 17% குடும்பங்கள் பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களாக இருந்து வருகின்றன. இத்தகைய குடும்பங்கள்– குறிப்பாக வயது வந்த பிள்ளைகளைக் கொண்டிராத குடும்பங்கள்–கடுமையான வறுமையில் உழன்று வருவதனை நுண் மட்டத்திலான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்களுக்கான வேலைகள் குறைவாக இருந்து வரும் நிலையில், இவர்களால் கடன் வசதிகளையோ அல்லது தொழில் வாய்ப்புக்களையோ எளிதில் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

வறிய குடும்பங்கள் தொழில் வகைகளின் அடிப்படையில் பகிரப்பட்டுள்ள விதத்தை அட்டவணை 8 காட்டுகிறது. நகர இயல்பு கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் பொதுவாக தொழில்சார் தொழில்நுட்ப மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், விற்பனைத் துறை ஊழியர்கள் என்போரையே பொதுவாக உள்ளடக்குகின்றன. ஆனால்,இந்த தொழில் வகைகளுக்குள் வரும் வறிய குடும்பங்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. நகர வறியோரில் பெரும்பாலானவர்கள் சேவைத் துறை இலிகிதர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள், இரசாயன பதப்படுத்தல் துறை, பானங்கள் துறை போன்றவற்றிலேயே தொழில் செய்து வருகின்றனர்.

விற்பனைத்துறை தொழிலாளர்கள் என்ற தொழில் பிரிவைச் சேர்ந்தவர்களிடையே வறுமை மிக உயர்ந்த அளவில் காணப்படுகிறது. அனைத்து வறிய குடும்பங்களிலும் இவர்கள் 8 சதவீதமாக இருந்து வருகின்றனர். விற்பனை உதவியாளர்கள், கடைச்சிப்பந்திகள் போன்றோர் இதன் ஒரு உப பிரிவாக இருந்து வருகின்றனர். செங்கல் தொழிலாளர்கள், தச்சர்கள் மற்றும் நிர்மாணத் துறை தொழிலாளர்கள் போன்றோரின் குடும்பங்கள் வறிய குடும்பங்களில் 7 சதவீதமாக இருந்து வருகின்றன. தேசிய மதிப்பீடுகளின்படி, சுமார் 5 சதவீதமான குடும்பங்கள் இந்த வகையின் கீழ் வருகின்றன.

அட்டவணை 8ல் காட்டப்பட்டுள்ள தொழில்வாய்ப்பு வகைகளை ஆறு பிரதான தொழில் வகைகளாக பிரிக்க முடியும்: (1) விவசாய மற்றும் கால்நடை வளர்ப்புத் தொழிலாளர்கள், (2) பயிரிடுவோரும் விவசாயிகளும், (3) தொழில்சார் தொழில்நுட்ப மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், (4) விற்பனைப்பிரிவு தொழிலாளர்கள், (5) செங்கல் வேலை மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள், (6) வேறு பிரிவுகளில் வகைப்படுத்தப்படாத தொழிலாளர்கள். தேசிய தரவுகள் பொருளாதார துறை வாரியான வறுமையை எடுத்துக் காட்டவில்லை. ஆனால், நாட்டின் நகர்ப்புற வறுமையை தொழில் வாய்ப்பு வகைகளுடன் சம்பந்தப்படுத்தி இனங்கண்டு கொள்ள முடியும்.

நகர வறியோரில் பெரும்பாலானோர் ஈடுபட்டிருக்கும் தொழில் வகைகள், தொடர்ச்சியான வேலையை வழங்குவதில்லை. வேலை கிடைக்கும் தன்மை, பொது பொருளாதாரத்தின் விருத்தி மற்றும் சுறுசுறுப்பான தன்மை என்பவற்றிலேயே தங்கியிருக்கின்றது. அச்சிடல், புத்தகம் கட்டுதல், தையல் வேலை மற்றும் முடிதிருத்துதல் போன்ற பிரிவுகளில் இந்த வகையைச் சேர்ந்த தொழில் வாயப்புக்களே கிடைக்கின்றன. இந்த தொழில் வாய்ப்புக்கள் இயல்பிலேயே தற்காலிகத் தன்மை வாய்ந்தவையாக இருந்து வருவதுடன், அவற்றிலிருந்து கிட்டும் வருமானங்களும் வேறுபட்ட அளவுகளில் காணப்படுகின்றன.

பொதுவில் வறியவர்களினதும் குறிப்பாக நகர வறியோர்களினதும் குணாம்சங்கள் சிக்கலானவையாகவும், பல பரிமாணங்களைக் கொண்டவையாகவும் இருந்து வருகின்றன என்பதனை இந்தப் பகுப்பாய்வு எடுத்துக் காட்டுகிறது.

( 18 பக்கத் தொடர்ச்சி)

ஜப்பான் அதேபோல புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகளும் தமது ஊழியச் செறிவு மிகுந்த ஏற்றுமதிக் கைத்தொழில்களில் சிலவற்றை மலேசியா, தாய்லாந்து போன்ற செலவு குறைவான தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் சென்றன. தென்னாசியா ஓரிரு ஆடைத் தொழிற்சாலைகளைப் பெற்றுக் கொண்டது தவிர, இந்த நிகழ்வுப்போக்கிலிருந்து அதிக அளவு அனுகூலங்களைப் பெற முடியவில்லை. இதன் விளைவாக, இப்பிராந்தியத்தின் மீதான வெ.நே.மு. வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. தென்னாசிய நாடுகள் தாராளமயமாக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் கொள்கை கட்டமைப் பொன்றினை இப்பொழுதுதான் துவக்கி வைத்துள்ளன. இது வெ.நே.மு. உட்பாய்ச்சலுக்கு வசதி செய்து கொடுக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆனால், பொருளாதா மந்தமும் கேள்வியில் மெதுவான வளர்ச்சியும், மிதமிஞ்சிய கைத்தொழில் கொள்திறனும் நிலவிவரும் ஒரு காலகட்டத்திலேயே அவை இதனைச் செய்து வருகின்றன. தாய்வான் மாகாணம் ஆசியாவின் வளர்முக பொருளாதாரங்களில் ஒரு முக்கிய வெளிநாட்டு முதலீட்டாளராக இருந்து வருகின்றது. இந்நாடு 1988ல் தாய்லாந்தின் மிகப் பெரிய வெளிநாட்டு முதலீட்டு நாடாகவும், 1991ல் மலேசியா இந்தோனேஷியா ஆகிய நரடுகளின் மிகப் பெரிய வெளிநாட்டு முதலீட்டு நாடாகவும் இருந்து வந்துள்ளது. அது தென்னாசியா மீது சிறிதளவுக்கே அக்கறை காட்டி வந்துள்ளதுடன், இப்பொழுது சீனாவிலும் வியட்நாமிலும் அதன் முதலீடுகளை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. எனவே, இந்தப் பின்னணியில், தென் ஆசியாவின் தாராளமயமாக்கல் கொள்கைகளின் விளைவாக, அண்மைய வருடங்களில் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டது போன்ற வெளிநாட்டு முதலீடு தொடர்பான ஒரு செழிப்பு நிலை தோன்ற முடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகும்.

**1990களுக்கான வாய்ப்புக்கள்**

கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியம், உலக வங்கி மதிப்பீடுகளின் பிரகாரம், 1992-2002 தசாப்தத்தின் போது ஆண்டொன்றுக்கு சராசரியாக 7.3 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கும். அது அதன் தலைக்குரிய மெய் மொ. உ. உ. யை 1992ல் 585 அ.டொலர்களிலிருந்து 2002ல் 1037 அ.டொலர்களாக – 77 சதவீதத்தினால்– அதிகரித்துக் கொள்ளும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறத்தில், தென்னாசியா 1992–2002 தசாப்தத்தின் போது ஆண்டொன்றுக்கு 5.3 சதவீத வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 1992ல் 355 அ.டொலர்களாக இருந்து 2002ல் 49.21 அமெ.டொலர்களாக – 40 சதவீதத்தினால்– அதிகரித்துச் செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இந்த எதிர்வு கூறல்கள் சாதகமான சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப் பட்டுள்ளன. நீடித்த பொருளாதார மந்தம், உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டம், பொதுச் சேமிப்புக்களில் வீழ்ச்சி மற்றும் கைத்தொழில் நாடுகளின் பாதுகாப்புவாதம் என்பவற்றின் விளைவாக நிலைமை சாதகமற்றதாக மாற்றமடைந்தால், வளர்ச்சி விகிதங்கள் இதனை விடவும் குறைவாகவே இருக்கும்.

# ஐரோப்பிய யூனியன்களுக்கு சீராக்கம் செய்து கொள்ளல் :

# ஐரோப்பிய யூனியன்களுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான தாக்கம்

டீ. ரீ. கிங்ஸ்லி பேர்னார்ட்

உலகின் அனைத்து நாடுகளும் தமது பொருளாதார வளர்ச்சிக்காகவும் தமது வாழ்க்கைக்காகவும் சர்வதேச சமூகத்தில் தங்கியிருக்கும் நிலை, இப்பொழுது, முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதற்கு, ஒவ்வொரு நாடும், உலக பொருளாதாரத்தில் தமது தற்போதைய சார்புரீதியான ஸ்தானத்தை பேணிக் கொள்வதற்காகக் கூட, எதிர்காலத்தில் கடுமையான பல சீராக்கங்களை செய்து கொள்ள வேண்டியுள்ளது.

பல அச்சுறுத்தல்கள் எதிரில் உள்ளன. இந்த அச்சுறுத்தல்களை வாய்புக்களாக மாற்றிக் கொள்ளும்பொருட்டு, செயற்படுத்த வேண்டிய மிகவும் தாக்கமான உத்தி, அச்சுறுத்தல்களை உருவாக்கும் சூழல் மாற்றங்களுக்க ஏற்றவிதத்தில் சீராக்கம் செய்து கொள்வதாகும்.

### அறிமுகம்

ஐரோப்பிய சமூகத்தின் 12 உறுப்பு நாடுகள் தனியொரு ஐரோப்பிய சந்தையை பிரகடனம் செய்துள்ளன; இது 1990 ஜனவரி தொடக்கம் ஐரோப்பிய யூனியன் (E U) என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம், இதுவரையில் இந்த உறுப்பு நாடுகளுக்கிடையே நிலவிவந்த வர்த்தகம் தொடர்பான தேச எல்லைகளுக்கிடையிலான தடங்கல்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. இது ஐரோப்பிய யூனியன் பிரதேசத்துக்குள் பொருட்கள் தடங்கல்கள் எதுவுமின்றி சுதந்திரமாக எடுத்துச் செல்லப்படுவதனை உறுதி செய்கின்றது. இந்தப் பாரிய பொருளாதார அணியைச் சேர்ந்த உறுப்பு நாடுகளின் மற்றொரு தீர்மானம், ஐரோப்பிய யூனியனுக்குள் அனுமதிக்கப்படும் பொருட்கள் தொடர்பாக ஒரே சீரான தர நிர்ணய ஒழுங்கு விதிகளை நிர்ணயம் செய்வதாகும்.

இதன் விளைவாக, "சர்வதேச தர நிர்ணய அமைப்பு 9000–தர முகாமை முறைமை" (ISO9000) உருவாக்கப்பட்டது. புருஸ்ஸல்ஸில் அமைந்துள்ள சர்வதேச தரங்கள் தொடர்பான நிறுவனம் இதனை விதித்துரைத்திருந்தது. உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை, இந்த யோசனையை பல்வேறு மன நிலைகளுடன் வரவேற்றன. இந்த மாற்றம் ஐரோப்பிய யூனியனுக்குள் இறக்குமதி செய்யப்படவிருக்கும் பொருட்கள் தொடர்பாக மிகக் கடுமையான தர நிர்ணயங்களை விதித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்பான இந்த "ISO.9000" தர நிர்ணய விதிகளின் சாத்தியமான தாக்கங்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இப்பொழுது மதிப்பிட்டு வருகின்றது. இலங்கையின் சர்வதேச சந்தைப்படுத்தும் ஆற்றல் மீது "ISO9000" தர முகாமை முறைமை எடுத்துவரக் கூடிய எதிர்காலத் தாக்கங்களை மதிப்பீடு செய்வதும், இந்த சூழல் மாற்றங்களுக்கு ஏற்றவிதத்தில் ஆரம்பத்திலேயே அனுசரித்துச் செல்வதனால் கிட்டக்கூடிய அனுகூலங்களை இனங்கண்டு கொள்வதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

அட்டவணை 1

**1988-1992 காலப்பிரிவின் போது ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதி**

| வருடம் | (ரூ.மில்.) | சிஎஉ (மில்) |
|---|---|---|
| 1988 | 11,037 | 249 |
| 1989 | 14,037 | 265 |
| 1990 | 19,661 | 343 |
| 1991 | 22,460 | 369 |
| 1992 | 34,826 | 550 |

ஆதாரம் : இலங்கை சுங்கம்

தற்பொழுது, ஐரோப்பிய யூனியன் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான இரண்டாவது மிகப் பெரிய சந்தையாக இருந்து வருகின்றது. 1988–1992 காலப்பிரிவின்போது இலங்கையின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் ஐரோப்பிய யூனியனுக்கான ஏற்றுமதிகள் 31.6 சதவீதமாக இருந்தன. இக் காலகட்டத்தின்போது, ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதி வருடாந்தம் சராசரி 34 சதவீதமாக அதிகரித்து வந்தது.

இந்த நிலையில், ஐரோப்பிய யூனியன் நாடுகளுடனான ஏற்றுமதி வியாபாரம் இலங்கையின் தொழில் முனைவோருக்கு மிகுந்த அனுகூலங்களை அளிக்ககூடிய தொன்றாக இருந்து வந்துள்ளதைக் காண முடிகின்றது. தற்பொழுது 500க்கு அதிகமான பொருட்கள் ஐரோப்பிய யூனியனில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமான 20 ஏற்றுமதி பண்டங்களும் அவற்றின் பெறுமதிகளும் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளன.

ஐரோப்பிய யூனியன் இப்பொழுது பின்பற்றி வரும் "ISO9000" என்றழைக்கப்படும் தர முகாமை முறைமை விரிவான, கண்டிப்பான பல தர நிர்ணய தேவைப்பாடுகளை வலியுறுத்துகின்றது. இந்த தர நிர்ணயங்கள் பொருள் உற்பத்தியின் பல்வேறு கட்டங்களிலும் பிரயோகிக்கக் கூடியவையாக இருந்து வருகின்றன. இலங்கை நுகர்வோரின் கைகளுக்கு உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்லும் நிகழ்வுப்போக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போக்கினை மேம்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது என்பதே இதன் பொருளாகும். இந்தத் தர நிர்ணயங்கள் உற்பத்தியின் இறுதிக் கட்டத்துக்கும் அப்பால் சென்று, பொதியலடைத்தல், களஞ்சியப் படுத்துதல், போக்குவரத்து மற்றும் விறபனைக்குப் பின்னரான சேவைகள் போன்ற விரிவான பல அம்சங்களை உள்ளடக்குகின்றன. இது உள்ளடக்கும் விடயங்களை பின்வருமாறு சுருக்கிக்கூறலாம்:

- உற்பத்தியின் வடிவமைப்பு
- ஆவணப்படுத்தல் நடைமுறை
- உள்ளீடுகள் கொள்வனவு செய்யபபடும் கட்டடங்கள்
- பதப்படுத்தல் கட்டுப்பாடு
- பரிசோதனை மற்றும் பரீட்சிப்பு
- கையாளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பொதியிலடைத்தல்
- விநியோகம்

ஓர் உற்பத்திப் பொருளின் தயாரிப்பின் போது இடம்பெறும் மேலே குறிக்கப்பட்ட அனைத்துக் கட்டங்களும் இந்தத் தரக்கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இது தவிர இந்த தர முகாமை, கடப்பாட்டு இயல்பிலான வேறுசில நிபந்தனைகளையும் அவசியப்படுத்துகின்றது:

- திறமையான முகாமை நடைமுறைகள்
- ஆளணிப் பயிற்சி
- தரம் தொடர்பான தணிக்கை
- விற்பனைக்குப் பின்னரான சேவைகள்

அனைத்துவிதமான ஏற்றுமதிப் பண்டங்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்வுப்போக்குகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக இந்த தர முகாமை முறைமை வழிகாட்டு நெறிகளை வழங்குகின்றது. இந்த தனித்துவமான சிறப்பு அம்சங்கள், உலகின் வேறு எந்த ஒரு நாட்டினாலும் அல்லது வர்த்தகக் குழுவினாலும் உருவாக்கப்பட்டுள்ள தர நிர்ணய முறைகளில் காணப்படவில்லை.

இக்கட்டுரை, ஐரோப்பிய யூனியனுடனான இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தில் அக்கறைக்குரியவையாக இருந்துவரும் குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது. இங்கு கலந்துரையாடப்படும் உற்பத்தி வகைகள் ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்பான நியாயமான சித்திரமொன்றை வழங்கும் விதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### ஆடைகள்

ஆடை வகைகள், பெறுமதியின் அடிப்படையில் ஐரோப்பிய யூனியனுக்கு இலங்கை ஏற்றுமதி செய்துவரும் மிகப் பெரிய தனியொரு உற்பத்திப் பொருளாக இருந்து வருகின்றன. இது 1992ல் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியங்களின் 19 சதவிகிதத்தினை பங்களிப்புச் செய்திருந்தது. இந்தத் துறை மீதான "ISO9000" தர நிர்ணயத்தின் தாக்கம் மிதமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் இயங்கிவரும் பெரும்பாலான ஆடைத் தொழிற்சாலைகள், ஏற்கனவே நியாயமான அளவுக்கு தரக்கட்டுப்பாட்டு வழிமுறைகளை பின்பற்றி வருகின்றன.

உள்நாட்டு வர்த்தக அமைப்புக்கள் "ISO9000" தர முகாமை முறைக்கு விண்ணப்பம் செய்யும் பொருட்டு, தமது பதிவுகளை ஆவணப்படுத்த வேண்டியிருப்பதுடன், ஒரு முறையான ஒழுங்கில் அவற்றை பராமரித்து வர வேண்டிய தேவையும் வலியுறுத்தப்படுகின்றது. எனவே, இத்தொழில் நிலையங்கள் தர நிர்ணய அளவீட்டுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, உப உற்பத்தி நிகழ்வுப்போக்குளையும் உள்ளடக்கிய விதத்தில் பதிவுகளை பேணி வருதல் அவசியமாகும்.

### தேங்காய் துருவல்

தேங்காய் துருவல் உற்பத்திக்கான மூலப்பொருட்களின் உள்நாட்டு வழங்கல் ஆண்டு முழுவதிலும் ஒரே சீராக இருந்து வருவதில்லை. உயிரியல் மாதிரிகள் மற்றம் வானிலை நிலைமைகள் போன்ற காரணிகள் தொடர்ச்சியான தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருகின்றன. உள்ளூர் தேங்காய் துருவல் ஆலைகளில் தேங்காயைப் பிரித்தெடுப்பதற்காக பொருத்தமான இயந்திரங்கள் கிடைக்காதிருப்பதும் தரத்தைப் பேணி வருவதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. பல்வேறு அளவுகளிலும் கொள்திறன் மட்டங்களிலும் இயங்கி வரும் பெருந்தொகையான ஆலைகள் பல்வேறு தர நிர்ணயங்களைக் கொண்ட தேங்காய் துருவலினை உற்பத்தி செய்து வருகின்றன. எனவே, இந்த நிலையில், "ISO9000" நிர்ணய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதானது, தேங்காய் துருவல் கைத்தொழில் தன்னை மீண்டும் சீராக்கம் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்து வருகின்றது. ஒரே சீரான தரங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிலைகள் என்பவற்றைக் கொண்ட தரமான தேங்காய்த் துருவலை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களின் தரத்தினை மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்குக் கணிசமான அளவில் நிதி வளங்கல் தேவைப்படும்.

### இறப்பர்

இலங்கை 1992ல் 96.6 கோடி ரூபா பெறுமதியான இயற்கை இறப்பரினை ஏற்றுமதி செய்திருந்தது. ஐரோப்பிய யூனியன் இலங்கையிலிருந்து இயற்கை இறப்பரினை இறக்குமதி செய்துவரும் மிகப் பெரிய அமைப்புக்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. தற்பொழுது இக்கைத்தொழில் தரம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றது. வெளியீட்டில் ஒரே சீரான போக்குக் காணப்படாமை மற்றும் தரக்குறைவான பொதிப்படுத்தல் என்பன இவற்றுட் சிலவாகும். இதன் பின்விளைவொன்றாக, இலங்கை அண்மைய வருடங்களின் போது அதன் சந்தைப் பங்கினை மலேசியா, தாய்லாந்து, மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு இழந்து வந்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் தர முகாமை முறைமை செயற்படுத்தப்படுவதுடன் இந்த நிலைமை மேலும் மோசமடையும். இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்கள் தர நிர்ணயம் தொடர்பான வழிகாட்டு

நெறிகளை பின்பற்ற வேண்டியிருப்பதுடன், உற்பத்தியில் நவீன இயந்திரங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. இங்கும் கூட புதிய தேவைப்பாடுகளுக்கேற்ப அனுசரித்துச் செல்வதுடன் செலவுகள் சம்பந்தப்பட்டுள்ளன.

### பழவகைகளும் மரக்கறிகளும்

இலங்கை 1992ல் ஐரோப்பிய யூனியனுக்கு சுமார் 40 கோடி ரூபா பெறுமதியான பழவகைகளையும் மரக்கறி வகைகளையும் ஏற்றுமதி செய்திருந்தது. ஐரோப்பிய யூனியன் இலங்கையின் வேளாண்மைத் துறை உற்பத்திகளின் முக்கியமான ஒரு இறக்குமதிக் குழுவாக இல்லாவிட்டாலும் கூட, வெப்ப வலய பழவகைகள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றுக்கான இலாபகரமான ஒரு சந்தையாக அது அமைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுகாதார உணவு உற்பத்திகள் தொடர்பான அக்கறை பெருகி வருவதனால், ஐரோப்பிய யூனியனில் வாழும் சுகாதார உணர்வு கொண்ட நுகர்வோருக்கு இயற்கை உணவுகளை வழங்கும் ஆற்றலை இலங்கை விருத்தி செய்து கொள்ள முடியும்.

தற்பொழுது பழவகைகள் மற்றும் மரக்கறி உற்பத்தி என்பன வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பரந்த அளவிலான பண்ணைத் தொழில் முறைகளை இலங்கை இன்னமும் பின்பற்றவில்லை. இதன் விளைவாக, ஆண்டு முழுவதற்குமான ஒரே சீரான விநியோகம் குறைவாகக் காணப்படுகின்றது. உற்பத்தியில் ஒரே சீரான போக்கு நிலவி வரவில்லை; அத்துடன், தரம் தொடர்பான பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இலங்கையின் அறுவடைக்குப் பிற்பட்ட தொழில்நுட்பம் மிகவும் மோசமானதாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக, முடிவு உற்பத்திப் பொருள்களின் தரத்தினை உறுதி செய்வது கடினமானதாக உள்ளது. ஐரோப்பிய யூனியனின் தர நிர்ணய முறை அத்தகைய பல தேவைப்பாடுகளை வலியுறுத்தி வருகின்றது. இது உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் மேலதிக செலவுகளை எடுத்துவரும். இந்தத் துறை ஐரோப்பிய யூனியனின் நிபந்தனைகளுக்கு ஏற்ற விதத்தில் தன்னை சீராக்கம் செய்து கொள்ளாவிட்டால், அப் பிராந்தியம் தொடர்பான சந்தை வாய்ப்புக்களை அது நிச்சயமாக இழந்துவிடும்.

அண்மைய வருடங்களில் - குறிப்பாக மகாவலி அபிவிருத்திப் பிரதேசங்களில் - வர்த்தக அடிப்படையில் பழவகைகளையும் மரக்கறிகளையும் பயிரிடுவதற்கு தனியார்துறை உற்பத்தியாளர்கள் ஒரு சில முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். சிறிய மற்றும் நடுத்தர அளவு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற் கூடாக, இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை முயன்று வந்துள்ளது. ஏற்றுமதி வியாபார நிலையங்கள் திட்டத்தின் செயற்பாட்டுக்கான நிபந்தனைகளை மதிப்பட்டுக் கொள்வதற்கு ஏ.அ.ச. முயன்று வருகின்றது. இந்த உத்தி சிறியளவுக்கு உதவ முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஏனைய ஏற்றுமதிக் கைத்தொழில்கள்

வாசனைத் திரவியங்கள் தொடர்பான சர்வதேச சந்தைப்படுத்தலுக்கு பெருமளவில் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. எனினும், கருவா, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்து வருவோர் தமது பயிர்ச்செய்கையை, ஆங்காங்கே சிதறுண்டிருக்கும் காணித் துண்டுகளில் மேற்கொண்டு வருகின்றனர். பின்பற்றப்பட்டு வரும் சாகுபடி முறையும் பாரம்பரிய முறையாக இருந்து வருகின்றது. விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விவசாயத் தோட்டக்கலை நடைமுறைகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உரப் பாவனை குறைவாக இருந்து வருவதுடன், பீடை மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகளும் காணப்படவில்லை. அத்துடன் உரிய காலத்தில் அறுவடை செய்யப்படுவதுமில்லை. ஆரம்ப நிலையில் இப் பண்டங்களைப் பதப்படுத்துவதற்காக பின்பற்றப்பட்டு வரும் நுட்பங்களும் நடைமுறைகளும் குறைபாடுகளைக் கொண்டவையாக இருந்து வருவதுடன், தேவையான தரநிர்ணயங்களை நிறைவு செய்வதற்கு அவை போதியதாக இருக்கவில்லை.

வீட்டுத்தோட்ட உற்பத்திப் பொருட்கள் மற்றும் சிறு ஏற்றுமதிப் பொருட்கள் போன்ற ஏனைய விவசாய ஏற்றுமதி உற்பத்தித் துறைகளிலும் இக் குணாம்சங்கள் காணப்படுகின்றன. இந்த உற்பத்தித் துறைகளை "ISO9000" தர முகாமை முறைமையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில் மாற்றி அமைப்பதற்கு பெருமளவிலான மூலவளங்களும் சக்தியும் தேவைப்படக்கூடும்.

அட்டவணை 2

ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 1992

| | ரூ. (மில்.) |
|---|---|
| 1. ஆடைகள் | 16,275 |
| 2. வைரங்கள் | 3,903 |
| 3. தொகை தேயிலை | 1,847 |
| 4. தயாரிக்கப்படாத புகையிலை | 1,631 |
| 5. தேங்காய் துருவல் | 1,236 |
| 6. ஏனைய புடவை | 817 |
| 7. இயற்கை இறப்பர் | 966 |
| 8. பாதணிகள் – இறப்பர் | 533 |
| 9. மின்சார இயந்திரம், பாகங்கள் | 467 |
| 10. டயர்கள், டியூப்கள் | 443 |
| 11. பொம்மைகள் | 299 |
| 12. இரும்பு, உருக்குப்பொருட்கள் | 432 |
| 13. இறப்பர் கையுறைகள் | 348 |
| 14. தோல் உடைகள் | 318 |
| 15. மர கைவினைப் பொருட்கள் | 297 |
| 16. பீங்கான் பொருட்கள் | 282 |
| 17. தேயிலைப் பைகள் | 252 |
| 18. வாசனைத் திரவியங்கள் | 201 |
| 19. காகிதம், காகித உற்பத்திகள் | 210 |
| 20. தேங்காய் தும்பு, தும்பு உற்பத்திகள் | 347 |
| 21. மரக்கறி வகைகள் | 91 |
| 22. பழவகைகள் | 287 |
| 23. பதப்படுத்தப்பட்ட உணவு | 35 |
| 24. கடலுணவு | 160 |

### சீராக்கம் செய்து கொள்வதற்கான செலவுகள்

உள்நாட்டுக் கைத்தொழில்கள் தேவைப்பட்ட தர நிர்ணயங்களுடன் தம்மைச் சீராக்கம் செய்து கொள்வதற்காக கணிசமான அளவில் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தர நிர்ணயங்களை பரீட்சிப்பதற்கான கருவிகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக செலவுகளை செய்ய வேண்டி நேரிடும். மேலும், கைத்தொழில் அதிபர்கள் தமது தற்போதைய உற்பத்தி நிகழ்வுப்போக்குகளை ஐரோப்பிய யூனியனின் தர நிர்ணயங்களுக்கு ஏற்ற விதத்தில் மாற்றியமைத்துக் கொள்வதற்காகவும் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது தவிர, ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல், தரத்துக்கு சான்றிதழ் வழங்குதல், தர நிர்ணயத்தணிக்கை போன்றவற்றுக்கும் அவர்கள் மேலதிகச் செலவுகளை செய்ய வேண்டியுள்ளது.

( 33 பக்கம் பார்க்க)

# தென் பிராந்திய அபிவிருத்தி: ஒரு பிராந்திய திட்டமிடல் உத்தி

எம். எச். எஸ். தயாரத்ன

பிரதி பணிப்பாளர், பிராந்திய அபிவிருத்தி பிரிவு,
கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு

**பின்னணி**

சுதந்திரத்துக்கு பிற்பட்ட மூன்று தசாப்த காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகள் தேசிய மட்டத்திலான, வளர்ச்சி நோக்கிலான முயற்சிகளாக இருந்து வந்தன. இந்த அபிவிருத்தி பிராந்திய அடிப் படையிலான ஏற்றத்தாழ்வுகளையும், சமமற்ற வருமானப் பகிர்வினையும் எடுத்து வந்தது. மேலேயிருந்து கீழ்நோக்கிச் செல்லும் இந்த அபிவிருத்தி அணுகுமுறையின் தாக்கம் நாட்டின் தொலைதூர கிராமப் பகுதிகளைச் சென்றடையவில்லை. இதன் விளைவாக, பின்தங்கிய பிரதேசங்களும் வறுமை நிலவும் சிறு சிறு பகுதிகளும் தோன்றின.

1970களின் தொடக்கத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி சபை முறை என்பவற்றுடன் இணைந்த வகையில் இப்போக்கு மாற்றமடையத் தொடங்கியது. இது மாவட்ட அல்லது உள்ளூர்மட்ட அபிவிருத்தித் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் நிர்வாகம் என்பவற்றுக்கான அத்திவாரத்தை இட்டது. எனினும், தொடக்க காலத்தின்போது, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பும் தொடர்புபடுத்தலும் குறைவாக இருந்தமையாலும், உள்ளூர் மட்ட அதிகாரிகளிடையே பன்முகப்படுத் தப்பட்ட வேலைத்திட்டங்களில் அனுபவம் குறைவாகக் காணப்பட்டமை யாலும் இந்த மாற்றம் நல்ல பெறுபேறுகளை எடுத்துவரவில்லை. ஆனால், நிதி மூலவளங்களை பன்முகப்படுத்தலும் உள்ளூர் பௌதீக மற்றும் மனித மூலவளங்களின் பயன்பாடும் ஒரு பயிலும் நிகழ்வுப்போக்கு என்ற முறையில், நீண்டகால அபிவிருத்தி அடித்தள மொன்றுக்கு வழிகோலியது. இது மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி திட்டமிடுவோர் மற்றும் நிர்வாகிகள் போன்ற தரப்பினருக்குதிட்டமிடல் மற்றும் அமுலாக்கல் ஒழுக்காற்றினைப் பெற்றுக்கொடுத்தது.

ஒருங்கிணைந்த கிராமிய அபி விருத்தி நிகழ்ச்சித்திட்டம் (IRDP) 1978ல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பொறிமுறை, மூலவளப்பயன்பாடு மற்றும் திறமை யான முகாமை என்பவற்றின் அடிப் படையில் மாவட்ட மட்டத்தில் நிலவி வந்த இடைவெளியை நிரப்புவதற்கான ஓர் உத்தியாக இருந்தது. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி அணுகுமுறை, பின்தங்கிய பிரதேசங்களையும் வறிய மக்கள் பிரிவினரையும் அபிவிருத்தி செய்யும் நோக்கில், கிடைக்கக்கூடியதாக இருந்துவரும் மூலவளங்களை திறமையான, ஒருங்கிணைக்கப்பட்ட முகாமை முறையொன்றுக்குள் எடுத்து வருவதற்கு பல்வேறு முகவரகங்களுக்கு உதவியுள்ளது. மேலும், அது பிரதேச அடிப்படையிலான அபிவிருத்தி, மக்கள் பங்கேற்பு, சமூக ஒன்று திரட்டல், சுற்றுச்சூழல் தொடர்பான அக்கறை மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி போன்ற பல அபிவிருத்திப் பாரம்பரியங்களையும் உருவாக்கியுள் ளது. மகாவலி அபிவிருத்தி மற்றும் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு போன்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கங்களை நேரடியாகப் பெற்றிராத மாவட்டங்களி லேயே ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பொழுது 11 மாவட்டங்கள் இந்தத் திட்டங்களின் அனுகூலங்களைப் பெற்று வருகின்றன.

ஒ.கி.அ. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தொடர்பு படுத்தப்பட்ட செய்திட்டத் திட்டமிடல், அமுலாக்கல், முகாமை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்ட போதிலும் மாவட்டங்களுக்கு இடையிலான அல்லது உப-தேசிய மட்டத்திலான பிரச்சினைகள் கார ணமாக அது இடையூறுகளை சந்தித்து வருகின்றது. நிர்வாக எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பிராந்திய அடிப் படையிலான ஒத்துழைப்பு இதற்கு அவசியமாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு மற்றும் மூலவளங்கள் குறைவடைந்து கொண்டு செல்லல் போன்ற பிரச்சினைகளுக்கு ஒ.கி.அ. நிகழ்ச்சித்திட்டங்களினால் போதிய தீர்வுகளை எடுத்துவர முடியவில்லை. எனவே, மனித மற்றும் பௌதீக மூலவளங்களை விவேகமான முறையில் பயன்படுத்துவதானது பிராந்திய மட்டத்திலான ஒரு சவாலாக இருந்து வந்துள்ளது.

**தென் பிராந்தியத்துக்கான அபிவிருத்தித்திட்டம்**

அரசாங்கம் இலங்கையின் தென் பிராந்தியத்துக்கான பன்முகப்பட்ட அபி விருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை துவக்கி வைத்துள்ளது. இப்பிராந்தியத் தில் காணப்படும் மூலவளங்களை கவனத்தில் எடுத்தே இத்திட்டம் உரு வாக்கப்பட்டது. இதன் அடிப் படையான நோக்கங்களில் ஒன்று வேலை வாய்ப்புக்களை வழங்கி, அதன் மூலம் இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலமொன்றினைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

பல காரணங்களின் நிமித்தம், தென் பிராந்தியம், நாட்டின் முதலாவது பாகமாக இந்நோக்கத்துக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு சில மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய பல்வேறு துறைவாரியான அபிவிருத்திச் செய்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப் பட்டு வந்தபோதிலும், கடந்த மூன்று தசாப்த காலத்தின்போது தென் பிராந்தியம் அதிகளவுக்கு


அபிவிருத்தியைக் கண்டிருக்கவில்லை. அப்பிராந்தியத்தின் சில பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகள் தேக்க முற்றிருந்தமையாலும் நாட்டின் தேசிய மூலவளங்களின் பெரும்பகுதி ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்தமையாலுமே இந் நிலை தோன்றியிருந்தது. எனினும், தென் பிராந்தியம் அதன் ஆற்றல் மிக்க, தொழில் திறன்களைப் பெற்றுள்ள ஊழியர், வளர்ச்சியடைந்துள்ள வேளாண்மைத் துறை மற்றும் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்துள்ள கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் என்பன காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் அதன் முக்கியத்துவத்தினை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

"தென் பிராந்தியம்" என அடையாளம் காணப்படும் பிரதேசம், பண்டைக்காலத்தில் செழித்தோங்கிய நாகரிகமொன்றின் மையமாக இருந்த ருகுண பிரதேசத்தையே பெருமளவுக்குப் பிரதிபலிப்ப தாகவுள்ளது. அது தென் மாகாணத் தையும் ஊவா மாகாணத்தின் பெரும்பகுதியையும் சபரகமுவ மற்றும் கீழ்மாகாணம் என்பவற்றின் சிறுசிறு பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு பிராந்தியமாக இருந்து வருகின்றது. இப்பிராந்தியத்தில் 50 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளன. இங்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தென் பிராந்தியம் சுமார் 10,500 சதுர கி.மீ பரப்பளவை கொண்டதாக இருந்து வருவதுடன், இப்பகுதியில் சுமார் 25 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனா. ஓர் இயற்கைப் பிராந்தியம் என்ற முறையில் பெந்தரை கங்கையிலிருந்து ஹெடா ஓயா வரையிலான சுமார் 15 பிரதான ஆற்று வடிநிலங்களையும் பெந் தொட்டையிலிருந்து பொத்துவில் வரையிலான சுமார் 300 கி.மீ. நீளமான கடற்கரையையும் அது கொண்டுள்ளது.

இப்பிராந்தியம் நில உருக்கள், விவசாய உயிரின வகைகள் மற்றும் மானிட குடியிருப்புக்கள் என்பன தொடர்பாக பல்வேறுபட்ட தொகுப்புக்களை உள்ளடக்கியதாக இருந்து வருவதனால் இதன் பௌதீக மற்றும் மனித மூலவளங்கள் பாரிய அளவிலான வேறுபாடுகளைக் காட்டுகின்றன. தென் பிராந்தியம் ஈரவலயம், இடைவெப்ப வலயம் மற்றும் உலர் வலயம் ஆகிய மூன்று கால நிலை வலயங்களுக்குள்ளும் வருகின்றது. இதன் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி உலர் வலயத்திலேயே அமைந்துள்ளது. "தென்கிழக்கு உலர் வலயம்" என அழைக்கப்படும் பெருமளவுக்கு பின் தங்கிய பிரதேசத்தினை இது உள்ளடக்குகின்றது.

இப்பிராந்தியத்தில் சார்புரீதியில் உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டம் காணப்படுகின்றது. எனினும், விவசாய, கைத்தொழில் சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மூலவளங்கள் போதியளவில் பயன்படுத்தப் படவில்லை என்பதனையே இது காட்டுகின்றது. 1990ஆம் ஆண்டின் வேலையின்மை குறித்த ஆய்வின்படி, தென் பிராந்தியத்தில் வேலையற்றிருந் தோரின் எண்ணிக்கை 145,408 ஆகக் காணப்பட்டது.

தென் பிராந்தியத்துக்கான சில முன்னணிச் செய்திட்டங்கள் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட தனையடுத்து, தேசிய அடிப்படையில்



தென் பிராந்தியம்

திட்டங்களைச் செயற்படுத்திவரும் உயர்மட்டக்குழுவினால் ஒரு பிராந்திய அபிவிருத்தி உத்தி இங்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. செய் திட்டங்களுக்கிடையிலான பிணைப்புக் களை பரிசீலனை செய்தல், இடையூறுகளை அகற்றுதல், முகவரகங் களுக்கு இடையிலான பரஸ்பர தொடர்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை களை தீர்த்துவைத்தல் என்பன இந்த உத்தியின் கருமங்களாகக் கருதப் பட்டன. பிராந்திய அபிவிருத்தியின் மீது பெருமளவுக்கு முக்கியத்துவம் காட்டப்பட்டு வந்ததனையடுத்து, தென் பிராந்தியத்தில் 6 பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் செய்திட்டங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செய்திட்டங்கள் தற்பொழுது அவற்றின் அமுலாக்கத் தின்பல்வேறு கட்டங்களில் இருந்து வருகின்றன. சில திட்டங்கள் தொடர்ந் தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேறு சில திட்டங்கள். நிதிப்படுத்தலுக் கென விரிவான சாத்தியப்பாட்டு அறிக்கைகளை பூர்த்தி செய்துள்ளன. இவற்றை நிதிப்படுத்துவது தொடர் பான பேச்சுவார்த்தைகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன. அரசாங்கத் தின் முன்னுரிமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த 6 முன்னி நிகழ்ச்சித்திட்டங்கள்: கொக்கலை ஏற்று மதி ஊக்குவிப்பு வலயம், தென் பிராந்திய ரெயில்வே பாதையை விஸ்தரித்தல், காலித் துறைமுகத்தின் அபிவிருத்தி, தென்பிராந்தியத்துக்கான மாற்று நெடுஞ்சாலை, தென் மாகாண கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், தென் கிழக்கு உலர்வலய அபிவிருத்தி என்பனவாகும்.

### பிராந்தியஅபிவிருத்தி உபாயம்

கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவில் தென் பிரதேச அபிவிருத்தி அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த பிராந்திய அபிவிருத்தி திட்டத்துக்கான செயலகமாக இது இயங்கி வரும். ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த அலகு 1991ன் நடுப்பகுதியிலிருந்து இயங்கிவருகின்றது. இந்த அலகு உயர்மட்டக் குழுவின் செயலகமாக செயற்பட்டு வருகின்றது. இந்த உயர் மட்டக் குழு விடயங்களை விரிவாகப் பரிசீலனை செய்து, திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வாய்ப்புக்களை கவனத்தில் எடுப்பதற்கென சில விடய அடிப்படையிலான உப குழுக்களை அமைத்துக் கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் கீழ் இதுவரையில் எட்டப்பட்டுள்ள சாதனைகள் இங்கு கீழே தரப்பட்டுள்ளன:

(1) தென் பிராந்தியத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் முன்னணிச் செய்திட்டங்களை தொடர்புபடுத்தி, கண்காணிப் பதற்கென ஒரு பொறிமுறை இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டமை; தென் பிரதேச அபிவிருத்தி அலகு இந்த செய்திட்டங்களின் நடவடிக்கை களை தொடர்புபடுத்துவதிலும், இவற்றுக்கான பிணைப்புக்களை அறிமுகப்படுத்துவதிலும் ஒரு முழு நேர அடிப்படையில் ஈடுபட்டு வருகின்றது.

(2) செயற்பட்டுவரும் உப குழுக்கள், நடவடிக்கைகளை நிதிப்படுத்துல் மற்றும் முகாமை என்பன தொடர்பாக ஒருங்கிணைந்த அபிவிருத்தியை எடுத்து வரும் நோக்கில் மேலதிக உள்ளீடுகளை உருவாக்கிக் கொண்டுள்ளன: (I) உதாரணமாக, கொக்கலை விமான இறங்கு தளத்தை மேம்படுத்து வதற்கான உபகுழுவின் கீழ் சாத்தியமான நன்கொடையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் செயற்படுத்தும் முகவரகங்கள் போன்ற பிரிவுகளை பயன்படுத்திக் கொள்வதற்காக ஒரு செய்திட்ட யோசனை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இப்பொழுது அது தொடர்பாக பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன; (II) பாதைகள் தொடர்பான உப குழுவின் கீழ் போக்குவரத்து நெருக்கடி, போக்குரத்து மகாமை மற்றும் புதிய புனருத்தாரண வேலைகள் என்பன, சம்பந்தப்பட்ட முகவரகங்களுடனும் மாகாண சபைகளுடனும் தொடர்பு படுத்தப் பட்டு மேற்கொள்ளப் பட்டன.

(3 தென் கிழக்கு உலர் வலயம் குறித்த ஒரு தனியான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. தென் பிராந்தயத்தின் பிரதான பகுதி என்ற முறையில், இதனை ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்வதற்கென இவ்வாய்வு நடாத்தப்பட்டது. இந்த வலயம் குறித்த உபகுழு பல ஆய்வுகளையும் செய்திட்டங்களையும் தயாரித்துள்ளது.

இந்த உத்தி ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது:

(அ) தென் பிராந்தியத்தில் ஏற்கனவே இடம் பெற்று வரும் கணிசமான அளவிலான அபிவிருத்தி நட வடிக்கைகளிலிருந்து ஆகக்கூடிய அனுகூலங்களை பெற்றுக் கொள்ளல்; இந்த நடவடிக்கை களில் பெரும்பாலானவை தாமாகவே அனுகூலங்களை எடுத்து வருகின்றன. ஆனால், அவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவதன் மூலமும், ஏனைய நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலமும் மேலும் அதிக அளவிலான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஆ) தென் பிராந்தியத்தில் அனைத்து மடங்கிய அபிவிருத்தியை எடுத்து வருவதற்காக நகர மற்றும் கிராமிய அபிவிருத்தியின் ஒருங் கிணைப்பினை மேம்படுத்த வேண்டும். இவற்றுக்கிடையிலான பௌதீக செயற்பாட்டு, சமூக மற்றும் வர்த்தக பிணைப்புக் களை மேம்படுத்துவதன் மூலம் இதனை மேற்கொள்ள முடியும்.

இ) கிராமப் பிரதேசங்களின் அபி விருத்திக்காக ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கும் உத்தி ஒன்றினை அபிவிருத்தி செய்தல்: இந்த உத்தி இயற்கை நிலைமைகள் மற்றும் குடிசனச் செறிவு என் பவற்றுக்கேற்ப வேறுபட்டதாக இருந்து வரும். ஆனால், அது எல்லாவகையிலும் சந்தைத் தேவைகளுடன் மிக நெருக் கமான முறையில் சம்பந்தப் பட்டதாக இருக்கும்.

(ஈ) சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி: இது நகர்ப்புறங்களிலும் அதே போல கிராமப் புறங்களிலும் இலங்கையர்களுக்காவும், வெளிநாட்டவர்களுக்காகவும் அபி விருத்தி செய்யப்படுதல் வேண் டும்.

(உ) ஏனைய கூறுகளினால் உருவாக் கப்பட்ட பொருளாதார வளர்ச் சிக்கு குறைநிரப்பு செய்வதற் கென, தேசிய வறுமை ஒழிப்பு உத்தியினை அனைத்து அபி விருத்திகளுடனும் ஒருங்கிணைத் தல்.

"ருகுணு பகுதிக்கான எதிர்காலம்" என்ற தலைப்பிலான ஆவணத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ள உபாயமும் அணுகு முறையும் தேசிய, பிராந்திய மற்றும் பிரதேச மட்டத்திலான விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் சீராக் கம் செய்யப்பட்டு, மேலும் விரிவுபடுத் தப்பட முடியும்.

# இலங்கையில் குடித்தொகை கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் பரிணாம வளர்ச்சி

*கலாநிதி ஏ. ரீ. பீ. எல். அபேக்கோன்*

**பணிப்பாளர்,**
**குடித்தொகைப் பிரிவு,**
***சுகாதார அமைச்சு***

## அறிமுகம்

அநேகமாக அனைத்து நாடுகளினதும் அரசாங்கங்கள் தமது மக்களின் நல்வாழ்வையும் வாழ்கைத் தரங்களையும் மேம்படுத்துவதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. இந் நோக்கத்துக்காக அரசாங்கங்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்துவரும் கருவிகளில் குடித்தொகை தொடர்பான கொள்கைத் தொகுதியும் ஒன்றாக இருந்து வருகின்றது. பொதுவில், இரண்டு வகைகளைச் சேர்ந்த குடித்தொகை தொடர்பான கொள்கைகளை இனங்கண்டு கொள்ள முடியும்: (அ) குடித்தொகைக்கு ஏற்ற விதத்திலான கொள்கைகள் அல்லது மறைமுகமான கொள்கைககள்; (ஆ) குடித்தொகை மீது செல்வாக்கினைச் செலுத்தும் கொள்கைகள் அல்லது நேரடிக் கொள்கைககள். கல்விப் பெருக்கம், உணவு விநியோகம், நகரங்களின் அபிவிருத்தி மற்றும் மூல வள அபிவிருத்தி என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கொள்கைகள் முதலாவது வகையைச் சேர்ந்தவையாகும். கருவளத்தைக் குறைப்பதற்கான குடும்பத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், மரண விகிதத்தை குறைக்கும் பொதுச் சுகாதார மற்றும் போசாக்குத் திட்டங்கள், உள்ளக குடியகல்வினை ஊக்குவிப்பதற்கான போக்குவரத்து மற்றும் கைத்தொழில் திட்டமிடல் என்பன இரண்டாவது வகையைச் சேர்ந்த வழிமுறைகளாக உள்ளன.

## குடிவரவு

இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசங்கள் 1830 தொடக்கத்தில், முதலில், கோப்பிப் பெருந்தோட்டங்களுக்காகவும், அதனையடுத்து தேயிலைப் பெருந்தோட்டங்களுக்காகவும் பெருமளவில் திறந்து விடப்பட்டன. இதனுடன் இணைந்த வகையில், இலங்கைக்கான குடிவரவு பெரும் அலைகளாக இடம்பெறத் தொடங்கின. நாட்டுக்குள் வந்த இந்தியத் தொழிலாளர்களின் உட்பாய்ச்சல், நீண்டகாலமாக, பெருமளவுக்கு பெருந்தோட்டக் கைத்தொழில் செழிப்பு நிலைமைகளினால் நிர்ணயிக்கப்பட்டு வந்தது. குறிப்பாக, 1871 தொடக்கம் 1901 வரையிலான காலப்பகுதியின் போது குடிவரவு நாட்டின் மொத்தக் குடித்தொகை வளர்ச்சியின் 58 சதவீதம் வரையில் பங்களிப்புச் செய்திருந்தது. 1948ம் ஆண்டின் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம், குடித்தொகை அசைவினை முதல் தடவையாக கட்டுப்படுத்தியது. அதனையடுத்து அறிமுகம் செய்து வைக்கப்பட்ட 1948ன் பிரஜா உரிமைச் சட்டமும் 1949ன் இந்திய-பாகிஸ்தானிய பிரஜைகள் சட்டமும், இந்நாட்டின் பிரஜைகள் அல்லாதவர்கள் இலங்கையில் பிரஜா உரிமை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான விதிகளையும் நிபந்தனைகளையும் மிகவும் தெளிவான முறையில் வரைவிலக்கணம் செய்திருந்தன. இச் சட்டவாக்கங்கள் படிப்படியாக அமுல் செய்யப்பட்டதனையடுத்தும், 1948ன் பின்னர் பின்பற்றப்பட்டு வந்த கட்டுப்பாட்டு வழிமுறைகளையடுத்தும் இலங்கையின் குடித்தொகை வளர்ச்சியில் குடிவரவு இதுவரை காலமும் பெற்றுவந்த முக்கியத்துவம் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

## குடியகல்வு

சுதந்திரத்துக்கு முற்பட்ட கால கட்டத்தில் சிறு எண்ணிக்கையிலான இலங்கையர்கள் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் பல்வேறு பாகங்களுக்கும் குடிபெயர்ந்து சென்றனர். இந்த குடியகல்வுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக மலேசியாவுக்குக் குடிபெயர்ந்து சென்றவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் காணப்பட்டது. ஏனையோர் வர்த்தக நோக்கங்களுக்காக சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளுக்குச் சென்றனர்.

இலங்கையின் தொழில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் தொழில் வாய்ப்புக்களை நாடி வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து செல்வது, 1960களின் பிற்பகுதிகளிலும் 1970 களின் தொடக்கத்திலும் கணிசமான விகிதங்களில் இடம் பெற்று வந்தது. இக் குடியகல்வோரில் பெரும்பாலானவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாவும், கணக்காளர்களாகவும் இருந்தனர். பிரதானமாக ஐக்கிய இராச்சியம், மேற்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளுக்கே இவர்கள் சென்றனர். அதேவேளையில், கணிசமான அளவிலான பள்ளி ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் விஞ்ஞானத்துறை ஆளணியினர் போன்றவர்கள் தொழிலுக்காக கிழக்கு மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். 1970க்கும் 1976க்கும் இடையில் இடம்பெற்ற இலங்கையர்களின் குடியகல்வு, தொழில் தேர்ச்சி பெற்ற மனிதவலுவின் வளங்களின் பாரிய அளவிலான ஒரு குறைபாட்டினை எடுத்து வந்தது. மொத்த வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் ஆகியோரில் 15 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் இக்காலப் பிரிவின்போது குடிபெயர்ந்து சென்றிருந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, இந்த

குடியகல்வினை கட்டுப்படுத்தும் நோக்கிலான கொள்கைகளை அரசாங்கம் அமுல் செய்தது. பொதுமக்களின் வரிப்பணத்தினால் கல்விப் பயிற்சியினை பெற்றுக் கொண்டிருக்கும் மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் போன்ற சில தொழில்சார் நிபுணர்கள், குறிப்பிட்ட சில வருடங்கள் கட்டாயமாக உள்நாட்டில் சேவை புரிவதனை அவசியப்படுத்திய சட்டவாக்கத்தினையும் இக்கொள்கைகள் உள்ளடக்கியிருந்தன.

அரசாங்கம், மறுபுறத்தில், மலைநாட்டுப் பகுதியில் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்து வந்த இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்களை குடிபெயரச் செய்யும் நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது. இந்திய வம்சாவழியினைக் கொண்டிருந்த சுமார் 525,000 பேரை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற்கும், அதே வேளையில், சுமார் 300,000 பேருக்கு 15 வருடக் காலப்பிரிவுக்குள் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் என 1964ல் இலங்கை – இந்திய அரசாங்கங்களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் செயலாக்கம் மிக மெதுவாகவே இடம்பெற்று வந்துள்ளது.

1970 களின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிய வளைகுடா நாடுகளை நோக்கிய அண்மைய குடியகல்வு முன்னைய குடியகல்வுகளிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டதொன்றாக இருந்தது. இந்தக் குடியகல்வின் தற்காலிகமான இயல்பு, இவர்களை ஏற்றுக் கொள்ளும் நாடுகளினால் மிகவும் கண்டிப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு வந்தது. மத்திய கிழக்கு நாடுகளுக்கான குடியகல்வு முன்னைய குடியகல்வுகளைப் போலன்றி, தொழிலாளர்களின் பண அனுப்பீடு காரணமாக நாட்டின் சென்மதி நிலுவைகளுக்கு கணிசமான அளவிலான பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளது. அது பரந்த வீச்சிலான சமூக மற்றும் பொருளாதாரப் பயன்களையும் அதேபோல செலவுகளையும் கொண்டதாக இருந்து வருகின்றது என்பதனை சமீப வருடங்களில் அரசாங்கம் நன்கு உணர்ந்து கொண்டுள்ளது.

**உள் குடியகல்வு**

உள் குடியகல்வின் மீது செல்வாக்குச் செலுத்திய கொள்கைகளை நேரடி மற்றும் மறைமுக கொள்கைகளின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.

நேரடிக் கொள்கைகள் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் புதிய குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 1930 களின் போது, நாட்டின் தென்மேற்குப் பிராந்தியத்தில் நிலவிவந்த குடிப்பெருக்கத்தின் நெருக்குதல்களை தணிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. 1935ல் நிறைவேற்றப்பட்ட காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், காணியற்ற விவசாயக் குடியானவர்களுக்கு முடிக்குரிய காணிகளைப் பகிர்ந்தளித்தது. இந்தக் குடியானவர்களிடம் தாமாகவே காணிகளைப் பெற்று, அவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான மூலதனமும் மூலவளங்களும் இருக்கவில்லை. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணியற்ற நிலை அல்லது சமூகத் தேவை என்பதுவே தெரிவுக்கான முக்கிய அளவுகோலாக இருந்தது.

1960கள் தொடக்கம், கல்விகற்ற இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வந்தது. இதன் காரணமாக, சில குடியேற்றத் திட்டங்களில் இத்தகைய இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. குறிப்பாக, இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், கூட்டுறவுப் பண்ணைகள், பிரதேச அபிவிருத்தி சபைச் செய் திட்டங்கள் மற்றும் நிலச்சீர்திருத்தத்துக்கூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தோட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்ட குடியேற்றங்கள் போன்ற கூட்டாக செயற்படுத்தப்பட்ட திட்டங்களில் இத்தகைய இளைஞர்களுக்கு இடமளிக்கப்பட்டது. சமீப காலத்தில், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக்கொண்ட காணிகளில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மலேரியா ஒழிப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை முறைமுகமான கொள்கைகளில் உள்ளடக்க முடியும். நாட்டின் வரண்ட வலயத்தில் குடித்தொகையை குறைவடையச் செய்வதில் மலேரியா மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் மூலம் இந்நோய் வெற்றிகரமான முறையில் ஒழிக்கப்பட்டமை, மரண விகிதத்தில் தீவிரமான ஒரு வீழ்ச்சியினை எடுத்து வந்திருப்பது மட்டுமன்றி, குடிச்செறிவு மிகுந்த ஈரவலயத்திலிருந்து குடிச்செறிவு குறைவான உலர் வலயத்தை நோக்கி மக்கள் குடிபெயர்ந்து செல்வதற் கும் வகை செய்துள்ளது.

1950 களின் தொடக்கத்திலிருந்து, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் கிராமியத்துறை முன்னுரிமை பெற்று வந்துள்ளது. இலவச மருத்துவ மற்றும் சுகாதார சேவைகள், உற்பத்தியாளர் மானியங்கள் மற்றும் விலையிடல் கொள்கைகள் போன்றவை கிராமிய வாழ்க்கைத் தரங்களில் சாதகமான தாக்கங்களை எடுத்து வந்த கொள்கைகளில் சிலவாகும். வலைப் பின்னல் முறையில் பரவலான ரீதியல் நாடெங்கிலும் அமைக்கப்பட்டிருந்த பாதைகளும் நிறுவனங்களும் இந்த சேவைகளையும் வசதிகளையும் நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் சமமான முறையில் பகிர்ந்தளித்தன. இதன் விளைவாக, வாழ்க்கைத் தரங்களில் கிராமியத் துறைக்கும் நகரத் துறைக்கும் இடையில் நிலவிவந்த ஏற்றத்தாழ்வுகள் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்ததுடன், வர்த்தக நியதிகள் கிராமியத்துறைக்குச் சார்பானதாக மாற்றமடைந்தன.

**மரணவிகிதம்**

இலங்கையில் மரணவிகிதத்தில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சிக்கு நேரடி மற்றும் மறைமுக கொள்கைகளை காரணமாக கூற முடியும். பொதுத் துறையின் விஸ்தரிப்பும் சுகாதார சேவைகளின் அபிவிருத்தியும் இதில் மிக முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளன. சுதந்திரத்துக்கு முன்னரும் கூட, பொதுச் சுகாதார வசதிகளை விருத்தி செய்வதில் அரசாங்கம் அக்கறை செலுத்தி வந்தது. தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட வழிமுறைகளில் இதனை நன்கு அவதானிக்க முடிகிறது. இலங்கை 1870கள் தொடக்கம், முக்கியமாக தடுப்பூசி முறைக்கூடாக வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்தி வந்துள்ளது. தடுப்பு மற்றும் சிகிச்சை மருத்துவ முறைகள் 1926ல் சுகாதார அமைச்சின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்கு வெற்றிகரமான முறையில் இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் ஒரு முக்கிய காரணியாக இருந்தது. பிந்திய 1940களின் மலேரியா ஒழிப்பு இயக்கம், மலேரியா நோயை அநேகமாக முற்றிலும் ஒழித்துக் கட்டக் கூடியதாக இருந்ததுடன், அதற்கூடாக, மரண விகிதத்தில் ஒரு செங்குத்தான வீழ்ச்சியை எடுத்து வந்தது.

1940 கள் தொடக்கம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு வசதிகளில் ஒரு படிப்படியான முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியிருந்தது. மருத்துவத்துறை

மற்றும் உப-மருத்துவத்துறை ஆளணியினரின் எண்ணிக்கையில் கணிசமான அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. பாரம்பரிய பிரசவ உதவியாளர்களின் இடத்தில், பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவிச்சிகள் படிப்படியாக அமர்த்தப்பட்டு வந்தனர். டீ.டீ.ரீ. பிரயோகம், தொற்று நோய்ளுக்கெதிரான தடுப்பூசியேற்றல் போன்ற மருத்துவ தொழில்நுட்பங்களின் அறிமுகம் சுகாதார சேவைகளை மேலும் பலப்படுத்தியது. பாதுகாப்பான குடிநீர் விநியோகம், வடிகாலமைப்புக்கள் மற்றும் பொதுச் சுகாதார ஒழுங்குவிதிகள் போன்றவையும் குழந்தை மற்றும் சிறுவர் மரண விகிதத்தின் வீழ்ச்சிக்கு கணிசமான அளவில் பங்களிப்புச் செய்தன.

சமூக-பொருளாதார காரணிகளும் மறைமுகமான விதத்தில் மரணவிகிதங்களின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன. முதல்நிலை பண்டங்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம், குடித்தொகையின் சில பிரிவினரின் போஷாக்கு மட்டங்களை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்த உணவு இறக்குமதிகளை சாத்தியமாக்கியதுடன், பிழைப்பூதிய விவசாயிகளிடையே அவ்வப்போது ஏற்படக்கூடிய பஞ்சங்களையும் தவிர்த்து வந்தது. சுமார் மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக செயற்படுத்தப்பட்டு வந்த உணவு மானியத்திட்டமும் வறிய மக்கள் பிரிவினரின் போஷாக்கு மட்டங்களை உயர்த்துவதற்கு உதவியது. இது சிசு மற்றும் தாய் மரணவிகிதத்தில் சாதகமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இலங்கையில் மகளிர் கல்வியில் ஏற்பட்டு வந்த முன்னேற்றமும் மரண விகிதத்தின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளில் ஒன்றாக இருந்தது. 1901ல் 8.5 சதவிகிதமாக இருந்த மகளிர் எழுத்தறிவு விகிதம் 1981ல் 83 சதவிகிதமாக அதிகரித்திருந்தது. இதன் விளைவாக, பெரும்பாலான தாய்மார் தடுப்பு மற்றும் சிகிச்சை நோக்கங்களுக்காக நவீன சுகாதார வசதிகளை பயன்படுத்தத் தொடங்கினர்.

### கருவளம்

கருவளம் தொடர்பான கொள்கைகளையும் நேரடி மற்றும் மறைமுக கொள்கைகள் என வகைப்படுத்த முடியும். குடும்பத் திட்டமிடல் 1965ல் ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டயாக உருவானதிலிருந்து, கருவளத்தைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பு முக்கியமான ஒரு கொள்கை வழியாக இருந்து வந்துள்ளது. தேசிய குடித்தொகை கொள்கையொன்றின் உருவாக்கமும், குடித்தொகை திட்டமிடலின் முக்கியத்துவமும் 1970களின் பிற்பகுதியில் அரசாங்கத்தின் தீவிர கவனத்தைப் பெற்றன. ஆகவே, 1977ல் குடித்தொகை கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்ற விடயம் திட்ட அமுலாக்கல் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டது.

1980களின் முடிவில், திருமணமான தம்பதியினரிடையே குடும்பத் திட்டமிடல் குறித்த விருப்பு உயர்வாக காணப்பட்டதனால் தேசிய குடித்தொகை நிகழ்ச்சித்திட்டம், பெருமளவுக்கு விநியோக அடிப்படையிலான ஒரு திட்டமாக மாற்றமடைந்தது. இதன் காரணமாக, குடித்தொகை கொள்கை உருவாக்கம் என்ற விடயம் 1989ல் சுகாதார, மகளிர் விவகார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது.

( 27 பக்கத் தொடர்ச்சி)

### விலைப்போட்டி

எனவே, இந்த மேலதிகச் செலவுகள் முடிவுப் பொருளின் விலையுடன் சேர்க்கப்பட்டு விடும். இது எமது உற்பத்திப் பொருட்களின் போட்டித்திறனைக் குன்றச் செய்து, வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான ஏற்றுமதிகள் தொடர்பான எமது சந்தைப்பங்கு வீழ்ச்சியடைவதற்கு வழிகோல முடியும். சீராக்க நிகழ்வுப் போக்கு இடம் பெற்றுவரும் குறுகிய காலப்பிரிவின் போதே இந்நிலைமை தோன்ற முடியும். இந் நிலைமைகள் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் விலைகளை பழைய மட்டங்களுக்கு குறைத்துவிட முடியும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்களும் உற்பத்தியாளர்களுமே இதனால் பாதிக்கப்படுவார்கள்.

ஐரோப்பிய யூனியனின் "ISO 9000" தர நிர்ணய முறை ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள் மற்றும் உள்ளீடுகள் என்பன தொடர்பான கண்டிப்பான சில தரக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை விதித்துள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும சில மூலப்பொருள்கள் தேவையான தர மட்டங்களில் இருந்து வரவில்லை. இது குறுங்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்த முடியும். தரமான உள்ளீடுகளின் விலை மட்டங்கள் இதன் விளைவாக உயர்ந்து செல்ல முடியும். அதன் விளைவாக, முடிவுப் பொருள், கொள்வனவாளரைப் பொறுத்தவரையில் விலையுயர்ந்ததொன்றாக இருக்கமுடியும்.

### நிறுவன ரீதியான ஏற்பாடுகள்

இந்த தர நிர்ணய முகாமை முறைக்கு ஏற்ற விதத்தில் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுக்கான தேசிய அத்தாட்சிப்படுத்தல் முறையொன்று இலங்கையில் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இலங்கை கட்டளைகள் பணியகம், ஐரோப்பிய யூனியனின் சான்றிதழ் வழங்கும் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும்பொருட்டு, வளர்ச்சியடைந்த நாடுகளில் இயங்கி வரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அத்தாட்சிப்படுத்தும் நிறுவனங்களுக்கு இணையான விதத்தில் முறைமைகளை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டியுள்ளது.

### ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பங்கு

ஐரோப்பிய யூனியனின் தரநிர்ணய விதிமுறைகளின் செயலாக்கத்தின் தாக்கங்களை ஏ.அ.ச. நன்கு அறிந்துள்ளது. அது இது தொடர்பாக பின்வரும் துறைகளிலான சுறுசுறுப்பான பங்கேற்பினை எதிர்பார்க்கின்றது:

1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக ஐரோப்பிய யூனியனின் புதிய தர நிர்ணய விதிகள் தொடர்பான ஏற்றுமதியாளர்களின் அறிவினை மேம்படுத்துதல், செய்து கொள்ள வேண்டிய சீராக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல்.

2. "ISO" தர முகாமை முறைக்கு இணங்கிய தர உத்தரவாத முறைகளைச் செயற்படுத்துவதற்கு உற்பத்தியாளர்களுடனும் ஏற்றுமதியாளர்களுடனும் இணைந்து பணியாற்றுதல்.

ஏ.அ.ச; இலங்கை கட்டளைகள் பணியகம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடன் ஏற்றுமதியாளர்கள் "ISO 9000" தர நிர்ணய முறை குறித்து அறிந்து கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த விதிமுறைகளினால் பாதிப்புறக்கூடிய அனைத்து திறத்தவர்களுக்கும் இந்தச் செய்தியை மிகவும் தாக்கமான முறையில் எடுத்துச் செல்வதற்காக படிப்படியான ஓர் ஒழுங்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எமது டிசம்பர் 1993 / ஜனவரி 1994 இதழில் வெளியான சுதத்த ரணசிங்க எழுதிய "இலங்கையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி - ஒரு நோக்கு" என்ற கட்டுரையின் மிகுதி பாகம் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: QD/46/News/94

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

பிரதி விலை : ரூ. 10/-
வருட சந்தா : ரூ. 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.